வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்
# SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

புத்தகம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 1991 புரட்டாதி திங்கள் 24-ம் நாள் (9—10—60) ஞாயிற்றுக்கிழமை ரபி.ஆகிர் 17 | இதழ் 19

திறம் சலவைக்கு
மில்க்வைற் சோப்


மில்க்வைற் சோப் தொழிற்சாலை
யாழ்ப்பாணம்

மத்திய தந்திக் கந்தோரில்:

# தமிழ்த் தந்தி அனுப்பப் பெயருக்கு ஆறு பேர் இருந்து என்ன பயன்?

## சிங்களத்திற்கு உள்ளதுபோல முழுநேர ஊழியர் வேண்டும்

## போக்குவரத்து அமைச்சரிடம் எஸ். ஜே. வி. வற்புறுத்தல்

(சுதந்திரன் நிருபர்)

"மத்திய தந்திக் கந்தோரில் தமிழ்த் தந்தி வேலைகளுக்கு பெயருக்கு ஆறு பேரை வைத்திருந்து பயனில்லை. தனியாக இந்த வேலைகளுக்கென்று சிங்களத்தில உள்ளதுபோல முழு நேர ஊழியர் ஒருவரை நியமிக்க வேண்டும்" என்று தமிழரசுத் தந்தை திரு எஸ் ஜே. வி. செல்வநாயகம் போக்குவரத்து அமைச்சரை வற்புறுத்தியிருக்கிறார்.

கடந்த மாதம் பாராளுமன்றத்தில் திரு எம். சிவசிதம்பரம் கேட்ட கேள்வி ஒன்றுக்கு அளிக்கப்பட்ட பதிலில் மத்திய தந்திக் கந்தோரில் கொடுக்கப்படும் தமிழ்த் தந்திகளை உச்சரிப்பு அடிப்படையில் ஆங்கிலமாக்கவும், இவ்விதமான ஆங்கிலத்தில் வெளியூர்களிலிருந்து வரும் தந்திகளைத் தமிழாக்கவும் (To Encode and Decode) ஆறு தமிழ் ஊழியர்கள் உள்ளனர் என்று கூறப்பட்டது.

### தந்திகள் தாமதம்

இந்த ஆறு பேரும் தனியாக இந்த வேலை செய்வதில்லை என்றும் அவர்களுக்கு வேறு வேலைகளும் கொடுக்கப்படுவதால தமிழ்த் தந்திகள் பல மணி நேரம் கவனிப்பாரற்றுக் கந்தோரில் கிடக்க நேர்டுகிறதாகவும் திரு செல்வநாயகம் அமைச்சருக்குத் தாம் அனுப்பிய கடிதத்தில் தெரிவித்திருக்கிறார். அநேகமாக மாலை 5 மணிக்குப் பின்னர் மத்திய தந்திக் கந்தோரில் கொடுக்கப்படும் தமிழ்த் தந்திகள் அடுத்த நாள் காலையிலேயே அனுப்பப்படுவதாகவும் அவர் புகார் கூறியிருக்கிறார்.

### முழு நேர ஊழியர் வேண்டும்

குறிப்பாக மாலை 5 மணிக்குப் பின்னர் நிலைமை படுமோசமாகிவிடுகிறது என்று தெரிவித்திருக்கும் திரு செல்வநாயகம், இந்தச் சீர்கேட்டைத் தவிர்க்க ஒரு வழியும் கூறியிருக்கிறார். சிங்களத் தந்திகளைக் கவனிக்க உள்ளதுபோல தமிழ்த் தந்திகளைக் கவனிக்கவும ஒரு முழு நேர தமிழ் ஊழியரைத் தனியாக நியமிக்க வேண்டும் என்று அவர் வற்புறுத்தியிருக்கிறார்.

## புதிய ஆபத்து

### பகிரங்க சேவை கமிஷனில் செனிவிரத்ன!

அரசகரும மொழி இலாகாவின் விசேஷ ஆலோசகராகக் கடமையாற்றும் திரு எல். ஜே. டி. செனிவிரத்னவை அப்பதவியிலிருந்து அகற்றி வேறொரு முக்கிய பதவிக்கு நியமிக்க அரசாங்கம் ஆலோசித்து வருவதாக அறியப்படுகிறது.

திரு செனிவிரத்ன பகிரங்க சேவைக் கமிஷனில் ஒரு அங்கத்தவராக விரைவில் நியமிக்கப்படவிருக்

(8-ம் பக்கம் பார்க்க)

# சிங்களம் படிப்பதுமில்லை ஓய்வு பெறுவதுமில்லை

## அரசாங்க தமிழ் ஊழியர்கள் கூடிச் செய்த முக்கிய முடிவு

(சுதந்திரன் நிருபர்)

கொழும்பில் உள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள் அண்மையில் கூடித் தங்களை எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஆராய்ந்தபோது தாம் சிங்களம் படிப்பதில்லை என்றும் சிங்களம் தெரியாத காரணத்தால் உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறுவதில்லை என்றும் முடிவு செய்தார்கள்.

கூட்டம் நாவலர் கழகத்தில் நடைபெற்றது. தமிழ் அரசாங்க ஊழியர்களின் பிரதிநிதிகள் நூற்றுக்கதிகமானோர் கலந்து கொண்டார்கள். 1-1-61 முதல் தனிச் சிங்களச் சட்டத்தை அரசாங்கம் தீவிரமாக அமுல் நடத்தப் போவதாக அறிவித்திருப்பதை முன்னிட்டு ஊழியர்கள் பின்வரும் முடிவுகளைச் செய்தார்கள்:—

(1) எக்காரணங்கொண்டும் சிங்களத்தைப் படிப்பதில்லை என்ற கொள்கையில் இருந்து சிறிதும் மாறுவதில்லை.

(2) அரசாங்கம் தமிழ் உத்தியோகத்தர்களைச் சிங்களம் மட்டும் சட்டம் பாதிக்காது என்று வாக்களித்திருப்பதால் அவ்வாக்குறுதியை நிறைவேற்றுமாறு அரசாங்கத்தை வற்புறுத்துவதன்றி எக் காரணங்கொண்டும் உத்தியோகத்தில் இருந்து ஓய்வு பெறுவதில்லை.

(3) தமிழ் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறுந் திட்டத்தை அரசாங்கம் அமைத்தால், அத்திட்டம் தமிழ் உத்தியோகத்தர்களை இலைப்பாறச் செய்யுமாறு, அதிகாரிகள் வற்புறுத்துவதற்கு இடங் கொடுக்குமாகையால் அத்தகைய திட்டத்தை ஏற்கவில்லை.

(4) இப்பொழுதுள்ள தொழிற் சங்கங்களை தமிழ் உத்தியோகத்தர்களின் நீதியான வேண்டுகோளுக்கும், உரிமைகளுக்கும், போராடுமாறு,

(8-ம் பக்கம் பார்க்க)

# "வகுப்பு தொடங்குகிறோம் சிங்களம் படிக்கிறீர்களா?"

## யாழ் கூட்டுறவு இன்ஸ்பெக்டருக்கு யாழ் கூட்டுறவு அதிகாரி கடிதம்

(சுதந்திரன் நிருபர்)

யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர்கள் மூலமே யாழ்ப்பாணத்திலும் சிங்களத்தைத் திணிக்கும் முயற்சியில் அரசாங்கம் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கும் சிங்களம் கற்பிக்கும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. கூட்டுறவு ஆணையாளர், கூட்டுறவுப் பதிவு அதிகாரி ஆகியோரின் உத்தரவின் பேரில் யாழ்ப்பாணப் பகுதி உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பிரஸ்தாப இலாகாவிலுள்ள இன்ஸ்பெக்டர்களுக்கு அனுப்பியுள்ள கடிதம் இதனை வெட்டவெளிச்சமாக்குகிறது.

அனுப்பப்பட்ட கடிதத்தின் இலக்கம் B/JW/48. தேதி 22-9-60 அக்கடிதத்தில் கூறப்பட்டிருப்பதாவது:—

"அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்து யாழ்ப்பாணத்தில் சேவை புரிந்து கொண்டிருப்பவர்களுக்கும், படிக்க விரும்பும் ஏனையோருக்குமாக சிங்கள வகுப்புகள் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றன. யாழ்ப்பாண மஹாவித்தியாலயத்திலுள்ள ஜே பி. வெருகமா என்பவர் வகுப்புகளை நடாத்துவார். இவ் வகுப்புகளில் சேர உங்களுக்கு விருப்பமுண்டா என்பதை அறியும்படி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவு பதிவு அதிகாரியும் என்னைப் பணித்துள்ளனர்.

தயவு செய்து எனக்கு இது பற்றி உடன் பதில் அனுப்பவும்."

இக்கடிதம் கூட்டுறவு இன்ஸ்பெக்டர்களிடையே மட்டுமல்லாமல் அரசாங்க ஊழியர் மத்தியிலும் மிகுந்த ஆத்திரத்தையும் வெறுப்பையும் உண்டு பண்ணியுள்ளது பல இன்ஸ்பெக்டர்கள் ஆத்திரம் காரணமாக கடிதம் கிடைத்ததற்குப் பதில் தானும் எழுதவில்லை என்று தெரிகிறது. கொழும்பில் கூடிய தமிழ் அரசாங்க ஊழியர்கள் தாம் சிங்களம் படிப்பதுமில்லை; ஓய்வு பெறுவதுமில்லை என்று செய்த முடிவுக்கே இவர்களும் வருவார்கள் என்று தெரிகிறது.

சகலவித மூலநோய் நிவாரணி
ரிச்லெட்ஸ் ப்ளட் பியூரிபயர்
(RICHELET'S BLOOD PURIFIER)
இரத்த சுத்தி செய்து


● மூலம்
● வாதம்
● படை (ECZEMA)
● மாத விடாய்

கோளாறுகள்
முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் முடிந்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடைய வேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானாகவே ஏற்படும்.
எங்கும் கிடைக்கும்.
வெஸ்டன் ஏஜன்சீஸ்,
63, பேங்ஷால் வீதி, கொழும்பு.
(போன் 2885)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்

# என் தம்பி.. சிற்றினஞ் சேராதபடி

## பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டவர்

## வன்னியசிங்கம்

காலஞ்சென்ற அமரர் வன்னியசிங்கம் அவர்களைப் பற்றி அவருடைய மூத்த சகோதரியார் திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம் "என் தம்பி வன்னியசிங்கத்தை உருவாக்கிய பரம்பரையும் சூழலும்" என்ற தலைப்பில் எழுதும் தொடர் கட்டுரையின் நான்காவது பகுதி இது.

[முற்றொடர்]

சிறு குழவிப் பருவமுதல் யுக்த வயது வரை சிற்றினஞ் சேராதபடி பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டவர் வன்னியசிங்கம். குழந்தைகளாக இருக்கும்போதோ சிறுவர்களாக இருக்கும்போதோ எங்களில் எவரையும் வெளியே போய் ஒத்த பருவச் சிறுபிள்ளைகளோடு விளையாடத் தாய் தந்தையர் அனுமதிப்பதில்லை. விளையாட்டெதுவும் அவர்கள் முன்னிலையில், அவர்கள் மேற்பார்வையில் நிகழ வாய்ப்பு இருந்தால் தான் உண்டு. பள்ளிக்கூடத்துக்குப் போகத் தொடங்கிய பிறகும் கண்ட சிறுவரோடெல்லாம் விளையாடி அவர்களது அசங்கியப் பேச்சுக்களும் பழக்கங்களும் படிந்துவிடக் கூடாது, அவர்களோடு வாதாடி ஏச்சுப்பட்டு அடிபட்டுப் பழகக் கூடாது என்பதற்காக வே பள்ளிக்கூடம் தொடங்கப் பத்து நிமிஷம்தானும் முந்திப் போய்ச் சேர விடமாட்டார் தாயார். பள்ளிக்கூடம் திறந்து ஆசிரியர்களும் எல்லோரும் வந்து சேர்ந்த பிறகு சரியான நேரத்திற்கு எங்களை அனுப்பினால் தாங்கள் நேரே வகுப்பினுள் நுழைந்து ஆசிரியர் மேற்பார்வையிலேயே இருக்க முடியும் என்று அப்படி அனுப்புவார்.

### வழியில் விளையாடினால் அடி கிடைக்கும்

நேரே வகுப்பிலேயே போய் இருக்க வேண்டும் என்றே எங்களுக்கும் கட்டுப்பாடு. மணி அடிக்கவில்லை என்று வெளியே தாமதிக்கக் கூடாது. வெளியே தாமதித்ததாக, வேறு பிள்ளைகளோடு விளையாடினதாக எப்படியோ பெற்றோர் அறிந்தால் அடிகிடைக்கும்; அறியாமல் தப்பினதும் கிடையாது. பாதி நாள் இரண்டு நிமிஷம் முந்துவதற்குப்பதில் இரண்டு நிமிஷம் பிந்திப் பாடசாலைக்குப் போய் ஆசிரியரின் கண்டிப்புக்கு ஆளாகவும் நேரும். பள்ளிக்கூடம் விட்டதும் தாமதிக்காமல் உடனே வீட்டுக்குத் திரும்ப வேண்டியது தான். வழியில் யாருடனும் பேசவோ விளையாடவோ வேறு இடங்களுக்குப் போகவோ கூடாது.

### அசங்கியப் பேச்சு

ஊரர் கண்டிப்பு மிக அதிகம். என்னதான் கண் கட்டின குதிரை போல் நேரே பள்ளிக்கு போய் வகுப்பில் படித்துவிட்டுத் திரும்பினாலும் இடை நேரத்திலும் வழியிலும் உடன் மாணவரிற் சிலர் தம்முள் சண்டையிட்டு ஒருவரை ஒருவர் அசங்கியமாக ஏசுவது காதில் விழும். புதிய ஒரு சொல் என்று பொறுக்கிக் கொண்டு போய் வீட்டில் சொல்லி அடி தின்போம். ஏவற் சுற்றத்தாரும் பலர் அசங்கிய வார்த்தைகளை உபயோகிக்கும் பழக்கம் உள்ளவராயிருப்பர். அவர்களையும் குழந்தைகள் முன் என்ன அசங்கியப் பேச்சு என்று ஓயாது கண்டித்துப் பிள்ளைகள் காதில் விழும்படி அசங்கியப் பேச்சுகள் பேசாதபடி பார்த்துக் கொள்வார் தாயார். குடிகாரன் எவனாவது தெருவில் அசங்கியமாகப் பிதற்றுவான். தந்தையார் தம் வேலையிலோ தமிழ் இலக்கியத்திலோ சரித்திர ஆராய்ச்சியிலோ மூழ்கி இருப்பார். அப்படி மூழ்கி இருக்கும் போது சுற்றிலும் நடக்கும் செய்தி எதுவும் அவர் கவனத்திற்கு எட்டாது.

"இவருக்கு இலக்கிய விஷயமாகக் கைவந்திருக்கும் மனோலயம் சிவத்தியானத்தில் எனக்குக் கைவந்தால் நான் உய்ந்து போவேனே" என்று எங்கள் மூத்த மாமனார் வேடிக்கையாகக் கூறுவார்.

### கோட்டில் பேசிப் பார்ப்போம்

குடிகாரன் பேச்சு தந்தையார் காதில் விழாது. "குழந்தை குஞ்சு இருக்கும் இடத்தில் இவன் என்ன இப்படி அசங்கியமாகப் பிதற்றுவது? போய்ப் பிதற்றுவதற்கு வேறு இடம் தேடிக் கொள்ளும்படி துரத்துங்கள்" என்று தாயார்தான் அவர் சிந்தனையைக் கலைத்து கைப்பிரம்பும் ஒன்று எடுத்துக் கொடுத்துத் தந்தையாரை அனுப்புவார். தன்னிலும் எல்லா விதத்திலும் உயர்ந்தவர் என்று பிரக்கிராசியாரிடம் எட்போதும் கொண்டிருந்த மதிப்பு குடிகாரனை குடிவெறியிலும் ஓரளவு பணிந்து பேசச் செய்யும். ஆங்காரம் மிகுந்தவன் எவனாவது சில சமயம் "தெரு பொது இடம்" என்று நியாயம் பேசிப் பார்ப்பான். "அசங்கியப் பேச்சுக்குப் பொது இடம் வேறு? இந்த நியாயத்தைக் கோட்டில் பேசிப்பார்ப்போம்" என்ற சவால் காதில விழுந்ததும், வழக்கு என்று போனால் பிரக்கிராசியாருக்குச் செலவு இல்லை, தான் கணிசமான தொகை செலவு செய்ய நேரும் என்ற எண்ணம் குடிவெறியினிடையிலும் தோன்றி வெறியைத் தணித்துவிடும்; பணிந்து போய்விடுவான்.

கல்வியறிவு இல்லாதவரானாலும் தாயாரே காலையும் மாலையும் பிள்ளைகளை குறித்த அளவு நேரம் படிக்க வேண்டும் என்று

திருமதி இராஜ ராஜேஸ்வரி கணேசலிங்கம்
B. A (Hons), (Lond), M. Litt

கண்டிப்பாக உட்கார வைப்பது வழக்கம் தந்தையார் வேறு விஷயத்தில் பிள்ளைகளின் படிப்பை ஊக்குவார். பள்ளிப் பாடங்களை நன்றாக படித்து நல்ல புள்ளி வாங்குவதற்கு பரிசு என்று சில சமயம் ஏற்படுத்துவார்.



தேவாரம் நீதிச் செய்யுட்கள் ஆதியவற்றை மனனஞ் செய்தல போன்ற, பள்ளிப் பாடங்கட்குப் புறம்பான படிப்புக்குப் பரிசு ஏற்படுத்துவதும் உண்டு. பரிசும் பல திறப்படும். சில வேளைகளில் வருஷப் பிறப்பு அல்லது தைப்பொங்கல் பண்டிகைக்குச் சில நாட்கள் இருக்கும் போதே வயதுக் கேற்றபடி மனன பாகத்தை வகுத்துக் கொடுத்துப் பண்டிகைக்கு முதல் நாள் பரீட்சித்துப் பண்டிகைக்காக வாங்கும் பட்டாசு முதலியவற்றையே பரிசாக வழங்கி இருமாங்காய்களை ஒரு கல்லால் வீழ்த்துவார் தந்தையார். அலுப்புத் தட்டாதபடி முறைக்கு முறை சாதனை விஷயமும் மாறும்; பரிசும் மாறும். ஒரு முறை பண்டிகைக்கு வாங்கிய பட்டாசு பரிசு என்றால் இன்னொரு முறை யாராவது கையுறையாக வழங்கிய தோடம்பழமோ அப்பிள் பழமோ பரிசு. நாலு பிள்ளைகளில் எவருக்கும் பரிசு இல்லாமற் போகாது. பிந்தி நிற்பவருக்கு எப்படியோ ஊக்கமளித்துப் படிக்கச் செய்து பரிசு பெறுதற்குக் குறியாக வைத்த தகுதி அடையும்படி பார்த்துக் கொள்வார்கள். சிலவேளைகளில், பருவ பரீட்சையில் நல்ல புள்ளி பெற்றவரையே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் திருவிழாவுக்கு அழைத்துப் போவது என்று அதையே ஒரு பரிசாக்கி விடுவார் தந்தையார்.

### பரிசுத் திட்டம்

படிப்பில் தரம் குறைந்தால் படிக்காதவர்களைக் கண்டித்தும் தண்டித்தும் படிக்க வைப்பது தாயாரின் பொறுப்பு. படிப்பின் தரம் உயர்ந்தால்—உயர்வதற்கென்று—பரிசுகள் அளித்து ஊக்குவிப்பது தந்தையார் பொறுப்பு. வீட்டில் தாயாரும்—மாமன்மாரும்—பள்ளியில் ஆசிரியரும் பிள்ளைகளைக் கண்டித்தோ தண்டித்தோ திருத்துவதைப் பூரணமாக ஆமோதித்தாலும் தான் கண்டனையோ தண்டனையோ வழங்குவதென்றால் தந்தையாருக்குப் பிடிக்காது; அவர் அவைகளை வழங்கியதே இல்லை. பரிசளித்தல் சந்தோஷகரமானது; பிடிக்கும்; அதையே தன் பங்குக்கு வைத்துக் கொள்ளுவார்.

### சாங்கோ பாஞ்சா

வன்னியசிங்கத்தின் ஆங்கில வாசக புத்தகத்தில்—மூன்றாம் படிவ புத்தகம் என்று நினைவு—இருந்த சாங்கோ பாஞ்சா (Sancho Panza) கதையொன்றை ஆங்கிலத்தில் சம்பாஷனை ரூபத்தில் அமைக்கும்படி எங்களைத் தூண்டி, அதை நாடகமாக நடிக்கும் ஆவலை மூட்டி, சிறந்த நடிகருக்கு ஒரு பரிசும் தருவதாகக் கூறினார் தந்தையார். கதை இது தான்: நண்பனிடம் கடன் வாங்கிய பணத்தை அபகரித்துக்கொண்டு கடனைத் தீர்க்கும்படி அவன் கேட்கத் தான் முன்னமே கடனைத் தீர்த்துவிட்டதாகக் கூறிவிடுகிறான் ஒரு மோசக்காரன். நண்பன் நீதி மன்றத்தில் முறையிடு செய்து கடன் தீர்த்தாயிற்று என்ற பதிலையே திரும்பவும் பெறுகிறான். நீதிபதி முன்னிலையில் சத்தியம் செய்யும்படி முறையீட்டாளி எதிரியைக் கேட்கிறான். சம்மதித்த எதிரி "இந்தக் கைத்தடியைச் சற்று வைத்துக் கொள்; சத்தியம் செய்து விட்டு வாங்கிக் கொள்கிறேன்" என்று முறையீட்டாளியிடம் கொடுத்து விட்டு, "நான் முறையீட்டாளி கடன் கொடுத்த பணம் முழுவதும் அவனிடம் திருப்பிக் கொடுத்து விட்டேன்" என்று சத்தியம் செய்துவிட்டுக் கைத்தடியைப் பரபரப்புடன் திருப்பி வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போக விரைகிறான். நீதிபதி சாங்கோ அவனைத் திருப்பி அழைப்பித்துக் கைத் தடியை வாங்கிக் கையில் தூக்கிப் பார்த்து விட்டு, முறையீட்டாளியிடம் அதைக் கொடுத்து, "உன் பணம் உன்னிடம் வந்துவிட்டது. நீ கொண்டு போ" என்கிறார். முறையீட்டாளி ஒன்றும் புரியாதவனாய், "இந்தப் பிரம்பு நான் கொடுத்த பத்துப் பவுனுக்கு ஈடு என்கிறீர்களா?" என்று கேட்கிறான். "ஏன் ஈடாகாது?" என்று கேட்டுப் பிரம்பை நீதிபதி முறிக்க அதனுள்ளிருந்து பத்துப்பவுனும் கலகலவென்று கீழே விழுகின்றன சபையோர் அதிசயிக்கின்றனர். "சத்தியம் செய்யும் போது எதிரியை அவதானித்துப் பொய் சத்தியம் செய்யவில்லை என்று தெரிந்து கொண்டேன். அப்படியானால் இந்த வழக்கின் மர்மம் தான் என்ன என்று நான் சிந்திக்கையிலேயே, எதிரி கைத்தடியை முறையீட்டாளியிடமிருந்து பறிக்காத குறையாகப் பரபரப்புடன் வாங்கிக் கொள்வதை அவதானித்தேன். ஏன் இவ்வளவு அவசரம்? சாதாரணக் கைத்தடிதானே? ஒரு புறம் வைத்து விட்டுக் கூடச் சத்தியம் செய்திருக்கலாம். முறையீட்டாளியிடம் கொடுப்பானேன்? முறையீட்டாளியிடம் பிரம்பு இருப்பதை விரும்பாமல் அவசரமாகத் திருப்பி வாங்குபவன் முதலிலேயே இன்னொருவரிடம் கொடுத்திருக்கலாமே! பிரம்பைக் கொடுத்துவிட்டுத் தான் பணம் கொடுத்துவிட்டேன் என்று சத்தியம் செய்தான். பிரம்பிலதான் மர்மம் அடங்கியிருக்கிறது என்று ஊகித்து எதிரியைத் திருப்பி அழைத்துப் பிரம்பை வாங்கிப் பார்த்தேன். பிரம்பின் கனம், என் ஊகம் சரி என்று உறுதிப் படுத்தியது" என்று நீதிபதி விளக்குகிறார்.

### நடித்தோம் ஆங்கில நாடகம்

இக் கதையில் நடிப்புக்கு அதிகம் இடம் இல்லை. ஆங்கில உச்சரிப்பும் பேசும் முறையும்தான் மதிப்பிடுவதற்குரிய அம்சங்கள். நன்றாகப் பேசி நடிப்பவருக்குப் பரிசு கிடைக்கும். வன்னியசிங்கம் முறையீட்டாளியாகவும் நான் எதிரியாகவும் நடித்தோம். தந்தையார் நீதிபதியாக நாடகத்தில் பங்குபற்றினார். இளைய பிள்ளைகளுக்கும் ஏதோ சிறு பாகங்கள் சிருஷ்டித்து அவர்களையும் நாடகத்துக்கு 'புறம்பு' என்று இல்லாமல் சேர்க்க வகை செய்து கொண்டார். அவர்கள் பங்கு பற்றுவதற்கே பரிசு. மூத்த பிள்ளைகள் இருவரிடையேதான போட்டி. போட்டிக்கும் தந்தையாரே நீதிபதி. இப்போது ஒவ்வொரு பள்ளியிலும் வகுப்பில் முன்னேற்பாடு எதுவுமின்றி பாட விஷயத்தை நாடகமாக்கி நடிக்கும் சிறு நிகழ்ச்சியை ஒத்ததுதான் எமது "நாடகம்." வேஷம், பின்னணி ஒன்றும் வேண்டாத கதை. கைத்தடி மட்டும் தயார் செய்தோம். அக்காலத்தில் வழங்கிய பத்துச் சத நாணயம் உள்ளே புகக் கூடிய பெரிய துவாரம் செய்யக் கூடிய முள் முருக்கங் குழாய் தேடி எடுத்து அதனுள் இருந்த ஜவ்வு முழுதும் வெளியேற்றிவிட்டு, தாயாரிடம் பத்துப் பத்துச் சத நாணயங்கள் கடன் வாங்கி அதனுள் புகுத்தி, தேயிலை சுற்றும் ஈயத்தால் பூண்போட்டு

(13-ம் பக்கம் பார்க்க)


தபாற் தந்தி தலைவர் நியமனம்

பரீட்சை ஜனவரி 1961.

இப்போட்டிப் பரீட்சையில் ஒரே முறையில் சித்திபெற்று அரசாங்க சேவையில் சேர வேண்டுமானால், எமது பரீட்சைத் துணை நூல்களை வாங்கிப் படியுங்கள். பரீட்சைக்கு வரக்கூடிய வினா விடைகளை மட்டுமன்றி, பரீட்சைக்கு எப்படி விடை எழுத வேண்டும் என்னும் விளக்கவுரைகளையும் கொண்டன.

தமிழ்ப் பாஷை ● எண் கணிதம்
பொது விவேகம் ● பூமிசாஸ்திரம்
சரித்திரம் ● பொது அறிவு
ஆங்கிலம் ● 101 நவீன வியாசங்கள்

ஒவ்வொரு புத்தக விலை ரூபா 5-00.

தபாற் செலவு 35 சதம். வி. பி. பி. கிடையாது.

இலவச விபரங்கட்கு:-

அற்லஸ் ஹோல், 723, மருதானை, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கே. சோமசுந்தரம், காரைநகர்

கே: திருமதி பண்டாரநாயகாவின் அரசியல் செல்வாக்கு இன்னும் எவ்வளவு காலம் நீடிக்கும்?

ப: திருமதி பண்டாரநாயகாவின் இன்றைய அபரிமித செல்வாக்கு யு. என். பி. கட்சியின் தலையில்லா டட்லியின் முட்டாள்தனத்தால் ஏற்பட்டதாகும். யு. என். பி.க்கோ அல்லது வேறொரு மாற்றுக் கட்சிக்கோ நாட்டில் மதிப்பு வளரும்வரை திருமதி பண்டாரநாயகாவின் செல்வாக்கு நீடிக்கும். இன்று நாட்டில் நல்லதொரு மாற்றுக் கட்சியில்லாதிருப்பது பெருங்குறை. சமசமாஜக் கட்சியும், கொம்யுனிஸ்டு கட்சியும் ஆளுங் கட்சியுடன் சங்கமமாகிவிட்டதால் அவையும் இனி மாற்றுக் கட்சியாக வர வாய்ப்பில்லை. யு. என். பி தான் தன்னை வளர்த்துக்கொள்ள வேண்டும்; அல்லது ஒரு புதிய கட்சி தோன்ற வேண்டும். அல்லது கட்சிக்குள்ளே வெடிப்புகள் ஏற்பட்டு ஆட்சி சின்னாபின்னப்பட வேண்டும். அதுவரை திருமதி பண்டாரநாயகாவின் செல்வாக்கைக் குறைப்பது இலேசுப்பட்ட காரியம் அல்ல.

ஃ

ராஜா ஆனந்தம், மண்டூர்

கே: பெண்கள் எப்படிப்பட்டவர்கள்?

ப: ஒட்டைப் பானையைப் போன்றவர்கள். அவர்களிடம் ஏதாவது இரகசியத்தைப் பெய்து பாருங்கள். மறுகணமே அதை ஒழுக்கிவிட்டுத்தான் மறுகாரியம் பார்ப்பார்கள்.

கே: சில வாரங்களாக எங்கே பதுங்கிக் கிடந்தீர், குயுக்தியாரே?

ப: ஆகா, அபச்சாரம்! அபச்சாரம்! உடனே வாபஸ் வாங்குங்கள் அந்தப் பதத்தை. ஆம், 'பதுங்கிக் கிடந்த' என்ற பதத்தைத்தான் குறிப்பிடுகிறேன். வீரத் தமிழ் மரபில் வந்த குயுக்தியார் பதுங்குவாரா? வகுப்புக் கலவரத்தின் போதுகூடப் பதுங்கிக் கிடக்காமல் தலைநகரின் ராஜ பாட்டைகளிலே நிமிர்ந்த தலையுடன் நடமாடி எதிரேயிருந்த லாந்தர்க் கம்பத்தில் முட்டிக்கொண்ட தீரரல்லவா குயுக்தியார். அப்படிப்பட்டவர் பதுங்குவதாவது, கிடப்பதாவது?

ஃ

மதிவண்ணன், செங்கலடி

கே: பண்டாரநாயகாவின் சமாதிக்கு டாக்டர் நாகநாதன் மலர் வளையம் சூட்டியதேன்?

ப: இதே கேள்வியை டாக்டர் நாகநாதனிடம் கேட்டேன். அவர் தந்த பதில் இது: "ப்ரதமர் பண்டாரநாயகா தமிழினத்தின் விரோதி. எனவே எனக்கும் அவர் விரோதிதான். ஆனால் பிரதமருக்கு முற்பட்ட எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா என் நண்பர். அவர் மனைவி என் மனைவியின் நண்பி. பண்டாரநாயகா சுடப்பட்ட இரண்டொரு நாட்களின் பண்டாரநாயகாவின் புதல்விகள் ஏதோ பயத்தினால் குடும்ப நண்பர்கள் என்ற வகையில் எங்கள் வீட்டிலேயே படுத்துறங்கினார்கள். இப்படி எல்லாம் எங்களுக்குள் தொடர்பு உண்டு. எனவே, ப்ரதமர் பண்டாரநாயகாவுக்கு அல்ல, நண்பர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகாவுக்கு, தமிழரசுக் கட்சிப்பொதுச் செயலாளர் எம். பி நாகநாதன் என்ற முறையிலல்ல, வெறும் டாக்டர் நாகநாதன் என்ற முறையில் குடும்பஅனுதாபத்தைத் தெரிவிக்குமுகமாக மலர் வளையம் வைத்தேன்" மேற்கண்டவாறு டாக்டர் நாகநாதன் கூறினார். இந்த சமாதானத்தை திரு அமிர்தலிங்கம் போன்றவர்கள் ஏற்க மறுக்கிறார்கள் என்று தெரிய வருகிறது.

ஃ

கு. இராமலிங்கம், ஒட்டிசுட்டான்

கே: இலங்கை விரைவில் குடியரசாகப் போகிறதல்லவா?

ப: ஆம், குடியரசாகத்தான் போகிறது. அப்போது அரசியல்வானில் பல மாற்றங்கள் ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

திருவாளர் குயுக்தியார்
மே/பா சுதந்திரன்,
த. பெ. இல. 1183,
கொழும்பு-12.

தற்போதைய நிதியமைச்சர் திரு பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா பிரதம மந்திரியாவார். டாக்டர் என். எம். பெரேரா நிதியமைச்சராவார். திருமதி சிறிமாவோ பண்டாரநாயகா ஜனாதிபதியாவார். சேர் ஒலிவருக்குச் சீட்டுக் கிழிக்கப்பட்டுவிடும். இப்படிக் கூறுகிறது அரசியல் ஆருடம்.

ஃ

மு பரமசிவன், கம்பளை

கே: அறிஞர் அண்ணாத்துரை இப்போது தி. மு. க. வின் பொதுச் செயலாளராகப் போகிறாராமே?

ப: ஆகட்டும், அதில் குறைவு ஒன்றுமில்லை. ஆனால் சம்பத் தலைவராகப் போகிறாராம். இந்தப் புதிர்தான் எனக்குப் புரியவில்லை. தி. மு. க. ஆரம்பிக்கப்பட்ட போது அண்ணாத்துரை அடித்து முழக்கினார்: "இந்தக் கழகத்துக்கு தலைவர் நியமிக்க மாட்டோம். பெரியார் உயிரோடு இருக்கும் வரை தலைவர் ஸ்தானம் காலியாகவே இருக்கும்" என்று கூறினார். இப்போது பெரியார் உயிரை விட்டு விட்டாரா?

ஃ

பி. டி. பதி, அட்டன்.

கே: மனிதன் தனக்குத் துன்பம் வரும்போது என்ன நினைப்பான்?

ப: ஜாதகத்தை எந்த ஜோதிடரிடமாவது காட்டி இன்பம் வரும் தேதியை அறிந்து கொள்ளலாமா என்று நினைப்பான்.

ஃ

எஸ். விவேகானந்தன், யாழ்ப்பாணம்.

கே: மத நம்பிக்கையற்றவர்களான கொம்யுனிஸ்டுகள் இலங்கையில் எவ்வளவு தூரம் முன்னேறியிருக்கிறார்கள்?

ப: இறந்துபோனவருக்குப் பரலோக பிராப்தி கிடைப்பதற்காக அவர் அ[illegible]யைப் புனித தீர்த்தத்தில் கரைத்து விழா எடுக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள். போதாதா?

மா. அழகரத்தினம், பண்டத்தரிப்பு.

கே: வீரப்பா, ரஞ்சன், எம். ஜி. ஆர். இம் மூவரில் வாள் வீச்சில் வல்லவர் யார்?

ப: சாயலில் ஒத்திருந்த போதிலும் பூனையைப் புலியோடு ஒப்பிட முடியுமா? எம். ஜி. ஆர். ஒரு புலி.

ஃ

இ. சிவலிங்கம், கரவெட்டி.

கே: இன்று கல்வி பயிலும் மாணவர்கள் எதிர்காலத்தில் என்ன ஆவார்கள்?

ப: விஜயனும் குவேனியும் ஆவார்கள்.

ஃ

ஏ. எம். மஜீத், குருநாகல்

கே: எனக்கு 19 வயது. என் உயரம் 4 அடி. 5 அடி வளர்வதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

ப: ப்பூ! இது தெரியாதா? ஐந்து சய நாலுதான் மறுமொழி. அதாவது நீர் இன்னும் ஒரு அடி வளர வேண்டும்.

ஃ

எஸ். எஸ். இராமச்சந்திரன், பண்ணாகம்.

கே: தமிழ்ச் சுருக்கெழுத்து வகுப்பிற்கு எத்தனை மாணவர்களை எடுத்துள்ளார்கள்?

ப: மிக மிகச் சுருக்கமாகத்தான் எடுத்திருக்கிறார்கள். அதாவது பூஜ்யம்?

ஃ

க. ஜீவரெட்ணம், சேனையூர்.

கே: நம் இலங்கையில் தமிழர் பெரும்பான்மையினராகவும் சிங்களவர் சிறுபான்மையினராகவும் இருந்தால் அரசியல் எப்படி இருக்கும்?

ப: இன்றைய நிலைமையைவிட மோசமாக இருக்கும். பெரும்பான்மைத் தமிழர் சிறுபான்மைத் தமிழரையே என்ன பாடு படுத்துகிறார்கள் என்பதைப் பார்க்கும் போது, உண்மை புலப்படவில்லையா?

ஃ

பி. எஸ். சண்முகநாதன், முரசுமோட்டை

கே: குயுக்தியாரே, பெண்களுடைய கேள்விகளுக்கே நீங்கள் 'படார்' என்று பதில் கொடுக்கிறீர்கள். ஆண்கள் மீது என்ன துவேஷம்?

ப: துவேஷம் ஒன்றும் இடையாது. கேள்வி கேட்பதும் ஒரு கலை. அந்தக் கலையில் ஆண்களை விடப் பெண்கள் கைதேர்ந்தவர்கள் நீர் ஒரு கணவனானால் இந்த உண்மை உமக்குத் தெரிந்திருக்கும்.

ஃ

க. குணசிங்கம், சாவகச்சேரி.

கே: டாக்டர் என். எம். பெரேரா இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

ப: மௌன விரதம் அனுஷ்டித்துக் கொண்டிருக்கிறார். அவர் இப்போது பகிரங்கமாக வாயைத் திறப்பதே இல்லை. காரணம் அவர் பேச வேண்டிய அவசியம் எதுவும் இல்லை. அவருடைய திட்டங்களைத் தானே இன்றைய சிறீமாவோ அரசாங்கம் செயல்படுத்திக்கொண்டி[illegible] வேண்டிய அவசியம் இல்லையல்லவா?

# கண்கள் புரிந்துவிட்ட பாவம்

"மஹாகவி"

காகம் கறுப்பு; கருஞ்சிவப்பு
வாயவள் மேல்
மோகம் எதற்கு, முழுதும்
கடைச் சாயப்
பச்சைப்பொய்; அந்தி படைக்கின்ற
மஞ்சள்வான்
உச்ச அழகென் றுரைத்தும்,
கடதாசி
வெள்ளைப் புலத்தில் விளைந்து
நிறைந்துள்ள
அச்செழுத்துக் குள்ளே அனைத்தெழிலும்
காட்டியும்,
இச்சகத்து வாழ்வை இனிப்பாக்கும்
என்இரண்டு
கண்கான்—

அதோ நம் கருத்தைக்
கலக்கும்ஒரு
பெண்பால்; நிறையப் பிறரும்போம்
வண்டியிலே
கிட்டத்தான் உள்ளபடக் கொட்டகைக்குச்
செல்கின்றாள்.

வட்ட விழிசுழற்றிக் காதில்
வளையங்கள்
ஆடக் கழுத்தசைத்தே ஆனந்த
மாகத்தன்
கூட இருக்குமவ ளோடு
குசு குசுத்துக்
கொண்டிருக்கும் போதும் குதப்புகிறள்
வாயை! இதைக்
கண்டோ குழந்தையொன்று கண்கள்
இமையாத
செப்புச் சிலையாச்சு? சேயிழையின்
பல்லிடையோர்
அப்பிள் பழமே அகப்பட்
டிருக்க, அதைக்
கொந்துகிறள்; அன்னாள் கொடுப்பின்
அசைவினிலே
சிந்தை பறிபோம் சிறிசோ
அருகில்தன்
'அப்பாவைக் கேட்டால் அடிதான்'என்
றப்பாவை
சப்புவதைப் பார்ப்பதிலே சந்தோஷம்
கொள்கிறது!

நாவூறி ஏங்கும் நயனம்
இரண்(டு)! அவற்றைச்
சாவரையும் நாம்மறத்தல் சாத்தியமோ!

போர்த்தியுள்ள
பூச்(சு) ஆள் கவர்வதற்குப் போதாதென்
றோ, புதிய
ஆச்சரிய உத்தியினை ஆண்டாள்
அவள்! பழத்தைக்
கவ்வும் திருச்செயலைக் கண்டினைாே?
தம் உதடே
கவ்வுண்ட தென்றோர் கணம்பிரமை
கொள்க என
எண்ணியோ கையில் எடுத்த
பழத்தோடப்
பெண்வந்தாள்! காணும் பெரும்பாவம்
செய்தோம்நாம்!—

இந்த இடத்தில் இறங்கிடலாம்
அல்லவோ?
வந்துவிட்டோம், போதும், வழிகாட்டும்
போய்விடுவோம்.

(யாழ்ப்பாணத் தமிழ் எழுத்தாளர் சங்கப் பாரதி விழாவில் இக்கவி அரங்கேறியது).

## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக் கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா 10-00
(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்கு குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

## அக்டோபர் 13 முதல் தமிழியக்க வாரம் கொண்டாடுவோம்

ஏறக்குறைய பத்து மாதங்களின் பின் மீண்டும் தமிழியக்கத்தைப் பற்றித் தமிழ் மக்களுக்கு எடுத்துரைக்க வேண்டிய நெருக்கடி இப்பொழுது உண்டாகியிருக்கிறது "சிங்களம் மட்டுமே" எனும் சட்டம் ஆக்கப்படுதற்கு முன்பே தமிழுக்கு வேண்டிய இடத்தைக் கொடுக்கவும் தமிழ் மக்கள் தன்மானத்தோடு வாழுவதற்கு வழிவகுக்கவும் "எல்லாம் தமிழில்" என்னும் இயக்கத்தைச் சில அன்பர்கள் தொடக்கிப் பரப்பி வந்தார்கள். "சிங்களம் மட்டுமே" எனும் சட்டம் ஆக்கப்பட்டவுடன் இந்நாட்டில் தமிழுக்கு இருந்த சமவுரிமை பறிக்கப்பட்டது. 'அரசாங்கம் தமிழுரிமைகளைப் பறித்தாலும் தமிழ் மக்கள் தம் வாழ்வின் துறையனைத்திலும் தமிழுக்கு முதன்மை கொடுத்தால் இலங்கையிலே தமிழ் தலைநிமிர்ந்து வாழும். இந்த நிலைமையை உண்டாக்குதற்குத் "தமிழியக்கத்தை எங்கும் பரப்புங்கள்" என்று தமிழுக்கு நிகழ்ந்த பேரிடரை உணர்ந்தவர்கள் குரலெழுப்பினர். இந்த வரிசையில் முன்வேடியாய் நின்று உழைத்தவர்கள் அமரர் கோப்பாய்க் கோமான் வன்னியசிங்கமும் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. செ. இராசதுரையுமேயாவர்.

### தமிழியக்கம் இன்னும் நன்கு பரவவில்லை

சென்ற ஆண்டில் சுதந்திரன் தமிழியக்கத்துக்கு ஆதரவளித்துத் தமிழியக்கம்பற்றிய கட்டுரைகளையும் செய்திகளையும் வெளியிட்டு பல நூற்றுக்கணக்கான தமிழியக்கத் தொண்டர்களைத் திரட்டுதற்கும் பெருதவி செய்துளது. இத்தொண்டர்களும் அறிஞர்களும் தமிழியக்கத்துக்காகத் தொண்டாற்றி வருகின்றனர். எனினும் இன்னும் தமிழியக்கம் தமிழ் மக்களிடையே நன்கு பரவவில்லை. தமிழிலே தம கையெழுத்தை இடுதற்குத் தானும் கூசும் தலைவர்களையும் தமிழாசிரியர்களையும் கூட நாடோறும் காண்கின்றோம். இன்னும் எண்பது நாட்களில் இந்த நாட்டில் சிங்களம் எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் இடம் பெற்றுவிடும். இந்த அலுவலகங்களிலே தமிழும் வாழ வேண்டுமெனின் தமிழ் மக்கள் எல்லோரையும் எல்லா அலுவல்களையும் தமிழிலேயே செய்யுமாறு செய்தல் வேண்டும்.

### தமிழியக்க வாரம் கொண்டாடுக

தமிழுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தமிழ் மக்களுக்கு உணர்த்துவதற்கும் உடனே அரசாங்கத்தோடும் வியாபார நிலையங்களோடும் பிறவற்றோடும் தமிழிலே தொடர்பு கொள்ளச் செய்தற்கும் சென்ற ஆண்டிற் போல இவ்வாண்டும் தமிழியக்க வாரத்தை எல்லா ஊர்களிலும் கொண்டாடுமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

தமிழியக்க வாரத்தை அக்டோபர் 13-ந் தேதி வியாழக்கிழமை தொடக்கம் கொண்டாடுமாறு யாழ் நகர மேயர் திரு காசிப்பிள்ளை உருக்கமானதோர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார். அக்டோபர் 13ந் தேதி தான் அமரர் வன்னியசிங்கத்தின் பிறந்த நாள் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். எனவே அக்டோபர் 13-ம் தேதி தொடக்கம் தமிழியக்க வாரத்தைத் தமிழர்கள் எல்லோரும் கொண்டாடுவோம். அக்டோபர் 21-ம் தேதிக்குப் பின்னர் அரசாங்கத்தோடும் வியாபார நிலையங்கள் முதலியவற்றோடும் தமிழிலே தொடர்பு கொள்ளாத தமிழர் இந்நாட்டிலில்லை எனும் நிலைமையை ஆக்குவோம். எம்மோடு ஒத்துழைக்குமாறு அரசியற் கட்சிகளையும், தமிழ்ச் சங்கங்களையும், தமிழ்க் கல்வி நிலையங்களையும் சன சமூக நிலையங்கள் போன்றவற்றையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

### தொண்டர்கள் தேவை

தமிழியக்கத்தை மேலும் வலுப்படுத்துதற்கு இன்னும் ஆயிரக்கணக்கான தொண்டர்களின் சேவை தேவைப்படுகிறது. முன்னர் சேராதவர்களை உடனே 3 சதத்திற்கு ஓர் அஞ்சல் அட்டையை வாங்கித் தங்கள் பெயர், முகவரி, தொழில், வயது முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புமாறு கேட்டுக்கொள்ளுகிறோம்.

## உயர் பதவிக்கு வந்த பின்னரும் தமிழ் வளர்க்கும் தீரர் கா. பொ. இ.

## பண்டிதர் இரத்தினம் பாராட்டு விழாவில் வி. ஏ. கந்தையா எம். பி.

"சாதாரணமாக தமிழ் தமிழ் என்று தமிழுக்காகப் பாடுபட்டவர்களில் பல உயர் பதவிக்கு வந்ததும் தமிழை மறந்து விடுகிறார்கள். ஆனால் பண்டிதர் கா. பொ. இரத்தினம் உயர் பதவிக்கு வந்த பின்னர் முன்னரைக் காட்டிலும் பன்மடங்கு தமிழ்ப் பணியாற்றி வருகிறார். அவர் தீரர்" என்று ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி. ஏ. கந்தையா கூறினார்.

அணிமையில் மாஸ்கோவில் நடந்த கீழை நாட்டியல் ஆராய்ச்சிப் புலவர்களின் 25-வது உலக மாநாட்டில் பண்டிதர் கா. பொ. இரத்தினம் கலந்துகொண்டு திரும்பியதற்காக அவரைப் பாராட்டுமுகமாகக் கூட்டம் ஒன்று வேலணை கிழக்கு வாலிபர் முன்னேற்றச் சங்கக் கொழும்புக் கிளையின் ஆதரவில் கடந்த வாரம் கொழும்பு விவேகானந்த சபை மண்டபத்தில் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு வி. ஏ. கந்தையா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு செ. இராசதுரை பேசுகையில், "அரசியல்வாதிகளுள் தமிழுக்கெனத் தனி இயக்கம் கண்டு திறம்படத் தமிழ் வளர்த்த பெருமை கோப்பாய்க் கோமான் அமரர் கு. வன்னியசிங்கத்தையே சாரும். அரசியல்வாதிகள் அல்லாதாரைப் பொறுத்தவரையில் அந்தப் பெருமைக்கு உரியவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆவர்" என்றார்.

"பண்டிதர் இரத்தினம் எதிரிகளின் போட்டிகளாலும் தாக்குதல்களாலும் பெரியவராக, புகழுக்கு உரியவராக ஆக்கப்பட்ட ஒருவர்" என்று திரு எஸ். டி. சிவநாயகம் பாராட்டிப் பேசினார்.

திருவாளர்கள் செ. பொன்னையா, கே. எஸ். நடராசா, கி. லஷ்மண ஐயர், வ. நடராசா, கோ. ஆழ்வாப்பிள்ளை, எஸ். தொண்டமான், டி. எம். பீர்முகம்மது, ஜனாப் எஸ். எம். கமால்தீன், பேராசிரியர் க. சின்னத்தம்பி, வித்துவான் இ. சி. சோதிநாதன் ஆகியோரும் பேசினார்கள்.

### "தீண்டாமை ஒழிப்புக்கு வித்திட்டவர் கு. வ."

அகில இலங்கை அருந்ததியர் சங்கத்தின் ஆதரவில் கடந்த 17-9-60-ல் அமரர் கு. வன்னியசிங்கத்தின் நினைவு நாள் கூட்டம் தலைவர் திரு எம். வேலாயுதம் தலைமையில் பணி மனையில் நடைபெற்றது.

தலைவர் தமது தலைமையுரையில் 1955-ல் அ. இ. அ. சங்க திருகோணமலை கிளை தாழ்த்தப்பட்ட மக்களின் சார்பாக தமிழரசுத் தலைவர்கட்கு கோணேசர் மலையில் சமபந்தி போசனமளிப்பதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொண்டது. அவ்வேண்டுகோளின்படி சமபந்தி போசனத்தில் தமிழரசுத் தலைவர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டனர். அச்சமபந்தி போசனமானது இலங்கையில் தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்திலே இமாலய சாதனையாகும் என்று கூறினார்.

அதன்பின் பொதுச் செயலாளர் திரு. ஏ. பி. எஸ். பேசுகையில் இந்நாட்டின் தமிழர் வரலாற்றிலே ஒரு புது அத்தியாயத்தைச் சிருஷ்டித்தவர் வன்னியசிங்கம். அவரின் அரும் பெரும் சாதனையால், வடக்கு - மலைநாடு என்கிற தர்க்க வாதம் மறைந்தது. தமிழர் தம் ஒற்றுமை நிலையாகியது என்று கூறினார்.

கல்லோயா நகர சுத்தித் தொழிலாளர் சங்கக் காரியதரிசி திரு எஸ். இளங்கோ, அம்பாறை கிளைக்காரியதரிசி திரு. எம். சண்முகம், திருவாளர்களான எஸ். அழகிறைவன், எம். எஸ். அருள், ஆகியோர்கள் மாவீரரின் அரும் பெரும் சாதனைகளை நினைவுறுத்திப் பேசியபின் இணைச் செயலாளர் திரு கே. எம். இராஜுவின் நன்றியுரையுடன் கூட்டம் முடிவடைந்தது.

கொங்கோ:

## இராணுவத்தில் கலகம் ஏன், எப்படிப் பிறந்தது?

(2)

செ. குமாரசாமி

கொங்கோவின் செல்வத்தைக் கொட்டிக் குவித்து வந்த வைரச் சுரங்கங்களெல்லாம் கவனிக்க ஆட்களில்லாது சீரழிகின்றன; ஆலைகள், உற்பத்தி நிலையங்கள் எல்லாம் ஓடாமல் உறங்கித் துருப்பிடிக்கின்றன; ரப்பர் கோப்பித் தோட்டங்கள் கூலியாட்களோ, நிர்வாகிகளோ இல்லாது பாழடைகின்றன; பயிர்களில் தொற்று நோய்கள் பரவி கோப்பித் தோட்டங்கள் அழிகின்றன செல்வம் சிதைகிறது. பெல்ஜியத் துரைமார்கள் கலகத்துடன் தாய்நாட்டிற்கு ஓடிவிட்டார்கள். சம்பளம் கொடுக்க ஆட்களில்லாததால் கூலியாட்கள் வேலைக்குப் போவதில்லை.

தபால் தந்தி நிலையங்கள், ரயில், பஸ் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம். சுகாதார வசதிகள் அனைத்தும் சீர்குலைந்துவிட்டன. தொற்று நோய்கள் மக்களைப் பலிவாங்குகின்றன. வைத்திய உதவிக்கு ஆஸ்பத்திரிகள் இல்லை. பெல்ஜிய டாக்டர்கள், ஊழியர்கள் அனைவரும் ஓடிவிட்டார்கள். பொலீஸ் நிலையங்களில் பொலீஸார் இல்லை. சட்டம், ஒழுங்கு, அமைதி எதுவும் இல்லை. எல்லாம் ஸ்தம்பிதம். எந்த நேரமும் பீதியும் பயமும். உலகம் அனைத்தின தும் அனுதாபத்திற்குரியவர்கள் கொங்கோ மக்கள்!

### இராணுவத்தில் கலகம்

இந்த நிலைமையைச் சீர்படுத்தியிருக்கலாம் இராணுவம். [illegible] இராணுவத்[illegible] [illegible] ஆபத்தில் தலைகொடுக்கக்கூடிய சக்தியும் மறைந்தது!

இராணுவத்தில் கலகம் ஏன் பிறந்தது என்று கேட்பதிலும் பார்க்க, இன்றுவரை கலகம் எப்படிப் பொறுத்திருந்தது என்று கேட்பதே பொருத்தமானது.

### இராணுவத்தில் அரசியல் நுழைந்தது

தேர்தலில் தீர்க்கமான முடிவு இல்லாததால் மந்திரி சபை அமைப்பதில் இருந்த குழப்ப நிலை தெரிந்ததே. மந்திரி சபையில் 22 அங்கத்தவர்களுக்கு இடம் தேடிச் சமாதானம் செய்ய வேண்டியிருந்தது; இது அரசியற் குழப்ப நிலையின் பிரதிபலிப்பேயாகும். இலங்கையில் பண்டாரநாயகாவின் மந்திரி சபையில் பிலிப் கோஷ்டியினர் வெளியேறிய பின்னர் 14 அங்கத்தவர்களும் 14 காரியதரிசிகளுமாக நியமனம் பெற்ற சம்பவத்தை ஒத்திருக்கிறது இந்த நிலை. இந்தப் பதவிப் பங்கீட்டில் எல்லோருக்கும் நல்லவராய் நடப்பது எங்ஙனம்? லுமும்பா மந்திரி சபையில் பாங்காலா இனத்திற்கும் அதன் தலைவனான பொலிகாங்கோ விற்கும் இடம் கிடைக்கவில்லை. ஆனால் சுதந்திரம் கிடைக்குமுன் பெல்ஜியம் கட்டியெழுப்பிய கொங்கோ இராணுவத்தில் பாங்காலா இனத்தவர்களே பெரும்பான்மையாயிருந்தனர். எனவே இராணுவத்தில் கலகம் பிறந்தது. அரசியல் இராணுவத்திற்குள் நுழைந்தது.

### ஏன் கலகம் பிறந்தது?

ஆனால் இக்காரணம் ஒரு சாட்டாகவே இருக்க முடியும். நீண்டகாலமாக கொங்கோ இராணுவத்திலுள்ள உயர் நர அதிகாரிகள் பெல்ஜியர்கள். தம்மை ஏதோ தங்க மாளிகையில் உயர வைத்திருந்தவர்கள். இதனால் சாதாரண சிப்பாய்களின் வெறுப்பிற்கு இலக்காகியிருந்தவர்கள். சுதந்திரம் கிடைத்ததும் இந்த மேலதிகாரிகளை உடனே நீக்கும்படியும், அவர்களுக்குப் பதிலாக கொங்கோ வீரர்களை நியமிக்கும்படியும் சிப்பாய்கள் கோரினார்கள். லுமும்பாவின் அரசியற் செல்வாக்கிற்கு எதிராகச் சாதிக்க முடியாத கோபத்தை பெல்ஜிய மேலதிகாரிகளுக்கெதிராகத் திருப்பினார்கள். கலகம் பிறந்தது.

## தமிழரசுக் கட்சியில் சேர மலைநாட்டுத் தமிழர் அவா

## நூற்றுக்கணக்கானோர் விண்ணப்பித்துள்ளனர்

தமிழரசையும் அதன் கொள்கைகளையும் ஏற்றுத் தமிழரசுக் கட்சியில் அங்கத்தவர்களாகச் சேர அநேக மலைநாட்டுத் தமிழர்கள் விரும்புகிறார்கள்.

சமீபத்தில் மலைநாட்டுத் தமிழரின் தூதுக் கோஷ்டியொன்று தமிழரசுத் தந்தையை பேட்டி கண்டு மலைநாட்டில் கட்சிக் கிளைகளை ஸ்தாபிக்கும்படி வேண்டினர். தந்தை ஜனநாயகக் காங்கிரஸ் ஸ்தாபனம் மலைநாட்டில் இயங்கி வருவதாகவும் அந்த ஸ்தாபனத்தின் வேலைத் திட்டங்களுக்கு செய்து கொடுக்கக் கூடிய முறையில் தமிழரசுக் கிளைகளை நிறுவ தற்பொழுது உத்தேசமில்லையெனவும் கூறினார்.

பின்னர் அத்தூதுகோஷ்டி தமிழரசுக் கட்சி கொழும்புக் கிளையில் அங்கத்தவராகச் சேர விருப்பந் தெரிவித்தது.

தமிழரசுத் தந்தை அவர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்டார். தற்பொழுது நூற்றுக்கணக்கான மலைநாட்டுத் தமிழர்கள் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளையில் சேர விண்ணப்பம் அனுப்பியுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பல்கலைக்கழகம் நமது காலத்தில் நிச்சயம் வந்தே தீரும்

## தமிழருக்கு மட்டுமல்ல, அது நாட்டுக்கே புகழ் தேடித்தரும்

## இந்த நல்ல முயற்சியில் இதுவரை நாம் சாதித்ததும் இனிச் செய்ய வேண்டியதும்

[ பேராசிரியர் அ. சின்னத்தம்பி
F.R.C.S. (Ed.); F.R.C.S. (Eng.); F.R.C.O.G. (Gt. Br.) ]

நான்கு வருஷங்களுக்கு முன்னர் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக் கழகத்தை ஸ்தாபிப்போம் என்று உறுதி அளித்தோம்.

அந்த உறுதி தமிழ் பேசும் மக்களின் இதய ஒலி. தங்கள் மொழி, பண்பாடு, வாழ்க்கைமுறை ஆகியன படிப்படியாக நசுக்கப்படுகின்றன என்பதை உணர்ந்த மக்களின் ஆத்மார்த்த ஒலி.

இருண்ட காலம் நம்மை எதிர்நோக்கியிருக்கிறது என்பதையும் அழிவு அண்மி வருகிறது என்பதையும் காணக்கூடியதாக இருந்தது. இப்படியான நிலைமையிலிருந்து நம்மை நாமே காப்பாற்றிக் கொள்ளாவிட்டால் நமது மொழி, பண்பாடு, வாழ்க்கைமுறை —இவற்றைப் பாதுகாப்பதும், இந்நாட்டின் கலாசாரத்திலோ அன்றி உலக நாகரிகத்திலோ நம் சாயலைப் பதிப்பதும் முடியாத காரியம் என்பதை உணர்ந்தோம்.

### எமக்கென ஒரு இடம்

எனவே எங்களுக்கென ஒரு இடத்தை ஏற்படுத்திக் கொள்ள விழைந்தோம். நாம் நமமுடைய போக்கில் சுதந்திரமாகச் சிந்திக்கவும், எங்கள் பிரச்சினைகளை எங்கள் சூழ்நிலையில் அலசி ஆராயவும் வசதியானதோர் இடத்தை நமக்கென நாம் ஆக்கிக் கொள்ள முனைந்தோம். இந்த இடத்தில் மாறுபட்ட நாகரிகமுடையவரின் தலையிடு முட்டுக் கட்டையாக வந்து குறுக்கே நிற்பதை நாம் விரும்பவில்லை. தமிழ் பேசும் மக்களின் கல்வி, விஞ்ஞான, கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்யச் சுதந்திரமாகச் செயலாற்றக் கூடிய ஒரு இடத்தையே நாம் நாடினோம்.

இதன் விளைவு—

### திருமலையில் அடிக்கல்

திருகோணமலையில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டினோம். எத்தனை எதிர்ப்பு இருந்தாலும், உறுதியான உள்ளத்தோடும், எடுத்தகருமத்தில் சிரத்தையோடும் ஒற்றுமையாக நின்று செயலாற்றும் மக்கள் வெற்றியே காண்பார்கள். தமிழ் பல்கலைக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டியது இந்த உண்மையை எடுத்துக் காட்டியது.

அடிக்கல் நாட்டி நான்கு வருடங்கள் கடந்து விட்டன. இந்தக் கட்டத்தில் நமது பயணத்தை நிறுத்தி கடந்த காலத்தை எண்ணிப் பார்த்து, நமது நிலை என்ன, இனி என்ன செய்யலாம் என்பது பற்றி எல்லாம் சிந்திக்க வேண்டும்.

### பேராசிரியர் மயில்வாகனம்

முதல் மூன்று வருடங்களும் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு கருக் கூட்டுவதில் கழிந்தன. இது முக்கியமான காலம். இந்தக் காலத்தில் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத் தலைவர் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் மட்டும் முன்னின்று திறமையாக வழி நடத்தியிராவிட்டால் அடிக்கல் நாட்டுவது சாத்தியப்பட்டிராது. பேராசிரியர் மயில்வாகனம் எடுத்த கருமத்தில் தெளிவு கொண்டவராய் அதைத் தொடுத்து முடிக்கும் ஆர்வத்தில் விடாப்பிடியாக நின்றார். இந்த நாட்டின் சிறந்த கல்வியாளன், விசுவாசத்துடன் உழைக்கும் உத்தமர், நெஞ்சுத் துணிவு கொண்ட நல்லவர் பல்கலைக் கழக இயக்கம் சம்பந்தமாகப் பேரார்வம் கொண்டிருந்தது தமிழ் பேசும் மக்களுக்கு கிடைத்த அதிர்ஷ்டமாகும்.

### பாராட்டு

பேராசிரியர் மயில்வாகனத்தின் தலைமையில் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்துக்குத் தமிழ் பேசும் பொது மக்களின் ஆர்வத்தைத் தட்டி எழுப்பினோம். இலட்சியத்தை அவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்ள வைத்தோம். பேராசிரியர் மயில்வாகனம் எங்களைத் திசைமாற விடவில்லை. அவ்வளவு கவனமாக இருந்தார் அவர். அப்படியான நேர்மையான நல்ல உழைப்பாளிக்கு என்னுடைய உளங்கனிந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

தமிழ்ப் பல்கலைக் கழக இயக்க வேலை அவ்வளவு பாரதூரமானது சாதாரணமாகப பேராசிரியர் மயில்வாகனம் அல்லாத வேறு எவரையும் சலித்து விலகிப் போக வைத்து விடும். கடந்த வருடம் வேலை நடைபெறவில்லை. சர்தர்ப்ப சூழ்நிலைகளின் விளைவு இது. கட்டட வேலைகள் தொடங்கப்படாமலே போயின.

### நடைபெற்ற வேலைகள்

கடந்த நான்கு வருடங்களிலும் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் சம்பந்தமாக நடந்த வேலைகளைக் கீழே சுருக்கமாகக் குறிப்பிட விரும்புகிறேன். நோக்கம், நாம இதுவரை சாதித்தது என்ன, சாதிக்க வேண்டியது என்ன என்பதைக் காட்டுவதே. கடந்த காலத்தைப் பற்றியோ, அல்லது எதிர் காலத்தைப் பற்றியோ யாரும் சண்டையில் இறங்க வேண்டியதில்லை. மாறாக, வருங்காலத்தைப் பற்றிச் சிந்தித்து, எமது முயற்சிகள், கனவுகள் எங்களுடைய வாழ்நாளிலேயே பலிக்கச் செய்ய வேண்டும்.

1956 ஜூன் 6: தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் தோற்றுவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக் கழக இயக்கம் இதனோடு சங்கமமாக்கப்பட்டது.

1956 ஜூலை: இயக்கம் தமிழ் பேசும் மக்கள் வாழ் பிரதேசங்கள் எங்கும் பரப்பப்பட்டது. பல இடங்களிலும் பிரதேச குழுக்கள் அமைக்கப்பட்டன.

1956 அக்டோபர் 11: அரசாங்க உதவி பெறு முகமாக பிரதமரைச் சந்திக்க முடிவு.

1957 ஜனவரி 14: தூது கோஷ்டி பிரதமரைச் சந்தித்தது. தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் போன்ற ஒன்றுக்கு அந்த நேரத்தில் உதவி அளிக்க அவர் மறுப்பு. ஆயினும் இணைப்புக் கல்லூரிகளும கலாசார கல்லூரிகளும் ஸ்தாபிக்கும் சாத்தியக் கூறுபற்றி யோசியுங்கள் என்று கேட்டுக்கொண்டார்.

1957 பெப்ரவரி 9: நாவலர் கழகம் ஸ்தாபிக்[illegible]

1957 ஜூலை 3: [illegible] கழகம் ஸ்தாபிதம்.

1957 செப்டம்பர் 18: தூது கோஷ்டி பிரதமரைச் சந்தித்தது. கமிஷன் ஒன்று நியமிக்கப் போவதாகப் பிரதமர் அறிவிப்பு.

1957 டிசம்பர்: வெள்ளம். பிரதேச குழுக்களின் வேலை தடைப்பட்டது.

1958 ஜனவரி 23: பல்கலைக் கழகக் கமிஷனில் தமிழ் பேசும் மக்களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமென வற்புறுத்தப்பட்டது.

1958 மார்ச்: நீஹாம் கமிஷன் (Needham Commission) விசாரணை நடத்தத் தொடங்கியது. கமிஷனில் தமிழ் பேசும் மக்களுக்கு பிரதிநிதித்துவம் இல்லாதது பற்றித் தமிழ் பேசும் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் குரல் எழுப்பினர். தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கத்தின் மகஜர் கமிஷனிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

1958 மே—ஜூன்: வகுப்புக் கலவரம். இயக்க வேலைகள் பல வழிகளிலும் தடைப்பட்டன.

1959 பெப்ரவரி: கொழும்பில் சிங்கள மக்களுக்கு மொழி, மத அடிப்படையில் இரண்டு பிரிவினுக்கள் அரசாங்கத்தால் ஸ்தாபிக்கப்பட்டன. இது நடந்தது பல்கலைக் கழகத்தை விரிவுபடுத்தும் திட்டத்தை நீஹாம் கமிஷன் வெளியிடுவதற்கு எவ்வளவோ காலத்துக்கு முன்னர். பிரிவினுக்களின் திறப்பு விழாவில் கலந்து சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயகா பேசும் போது தமிழர்களும் தமக்கு வேண்டுமானால் இப்படி ஒன்றை ஸ்தாபித்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

1959 ஏப்ரல்: திருமலையில் துறைமுக உள் வீதியில் தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு காணி வாங்கப்பட்டது.

1959 மே: தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு திருகோணமலையில் அடிக்கல் நாட்டப்பட்டது. கட்டட நிதியும் துவக்கப்பட்டது.

1959 ஜூலை: தூதுகோஷ்டி ஒன்று கல்வி மந்திரியைச் சந்தித்து யாழ்ப்பாணத்தில் ஒரு வைத்தியக் கல்லூரி நிறுவும்படி வேண்டிக் கொண்டது.

1959 செப்டம்பர்: பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா கொலை செய்யப்பட்டார்.

1959 நவம்பர்: தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் வலுத்தது. இது கண்டு, அச்சமும் பொறாமையும் கொண்ட ஒரு சாரார் இயக்கத்தைச் சின்னபின்னப் படுத்தும் நோக்கத்துடன் போட்டிக்கு, "யாழ்ப்பாணத்தில் ஒரு சமய, கலாச்சார பல்கலைக் கழகக் கல்லூரி வேண்டும்" என்று புது இராகம் [illegible] பத்திரிகைகளில் [illegible] விட்டுவிட்டது.

1959 நவம்பர் 30: திருகோணமலையில் பூரணமான ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்படுவதையே தமிழ் பேசும் மக்கள் அனைவரும் விரும்புகிறார்கள் என்று ஒரு தஸ்தாவேஜு தயாரிக்கப்பட்டு அதில் எல்லாத் துறைகளிலுமுள்ள பெரும்பாலான தமிழ் பேசும் மக்களின் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

1959 டிசம்பர்: பல்கலைக் கழகக் கமிஷன் அறிக்கை வெளியாயிற்று.

1960 ஜனவரி: நாட்டில் அரசியல் கொந்தளிப்பு. பல்கலைக் கழக இயக்கத்தை விரிவுபடுத்த நிலைமை சாதகமாக இல்லை. திருமலை பல்கலைக் கழகம் வரும் வரை தமிழ் பேசும் மாணவர்களின் மேல் படிப்புக்கு வசதி செய்யு முகமாக நாவலர் கழகத்தின் தரம் உயர்த்தப்பட்டது.

### இன்று

தற்போதைய நிலைமை இதுதான்:-

1. தமிழ்ப் பல்கலைக் கழகத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டு விட்டது.
2. மேலதிகமாக 40 ஏக்கர் நிலம் வாங்கியிருக்கிறோம். இன்னும் 40 ஏக்கர் வாங்கப்படவிருக்கிறது.
3. பிரதேசக் குழுக்கள் புனருத்தாரணம் செய்யப்படுகின்றன.
4. கிட்டத்தட்டத் தமிழ் பேசும் மக்கள் அனைவரதும் ஆதரவு கிடைத்திருக்கிறது.
5. எங்களோடு கூட உழைத்தவர்களில் சிலர் எம்மை விட்டு வெளிநாடுகள் சென்று விட்டார்கள். ஆயினும் நன்றாக உழைக்கக்கூடிய பலர், ஆண்களும் பெண்களும் இப்போதும் இருக்கிறார்கள். இன்னும்

(12-ம் பக்கம் பார்க்க)


## ஏஜண்டுகள் தேவை

சுதந்திரன் பத்திரிகை விற்பனை செய்வதற்கு கீழ்க் காணும் இடங்களில் தகுதிவாய்ந்த ஏஜண்டுகள் தேவை. விபரங்கட்கு விண்ணப்பிக்கவும்.

| | |
|---|---|
| அம்பாறை | புலத்ஹோபிட்டியா |
| ஆவரங்கால் | மதவாச்சி |
| எல்பிட்டியா | மந்திகை |
| கருகம்பனை | மதுரங்குளி |
| குளியாப்பிட்டியா | முரசுமோட்டை |
| கெக்கிராவை | வத்துகாமம் |
| கேகாலை | வறக்காப்பொல |
| ஹோறணை | வட்டவெல |
| நீர்வேலி | வெல்லம்பொட |
| பண்டிருப்பு | வெலிகம |

சர்குலேசன் மனேஜர்,
சுதந்திரன்.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு—12.





சி. சி. சி. நெற்பயிர்

உரக்

கலவைகள்

உலகிலேயே மிகச் சிறந்தவை

கொழும்பு
கொமேர்ஷல்
கொம்பனி லிமிட்டெட்

(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)

தபால் பெட்டி 33, கொழும்பு

CCC 26


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டட்லியும் டாக்டர் நாகநாதனும்

சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் சிம்மாசனப் பிரசங்கத்தில் வாக்கெடுப்பு நடந்தது ஆகஸ்ட் 26-ல் எதிர்க் கட்சித் தலைவர் (திரு. டட்லி சேனநாயக்கா) இரவு 9-42 க்குப் பேசஎழுந்தார். விவதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடந்த போது நேரம் ஞாயிறு 27, அதிகாலை 1-51 மணி களைத்துச் சோர்ந்து ஒய்ந்து போய்க் கொண்டிருந்த பிரதிநிதிகளுக்கு ஓரளவு உற்சாக மூட்டிக்கொண்டிருந்தது பேச்சின் இடையே நிகழ்ந்த இடை மறிப்புகள். இடைமறித்துப் பேசுவதே ஒரு கலை. தற்போதைய பாராளுமன்றத்திலிருக்கும் பிரதிநிதிகளுள் இக்கலையில் கைதேர்ந்தவர்கள் என்று தினப் பத்திரிகைகளில் பாராட்டப்பட்டவர்களுள் ஒருவர் டாக்டர் நாகநாதனும் ஆவர்.

ஃ

டட்லி சேனநாயகா:...... இப்பொழுது தமிழரசுக் கட்சியின் சார்பில் பேசிய டாக்டர் நாகநாதனுடைய பேச்சிற்கு வருகிறேன். எங்கள் ஐக்கிய தேசியக் கட்சியைத் தாக்குவதில் பெரிதும் மூர்க்கமாக நின்றவர் இவர்தான். நாங்கள் வகுப்புவாதிகளென்றும் நாடு துண்டாடப்படுவதைப் பற்றி நாம் பெரிதும் பிரசாரம் செய்தோம் என்றும் கூறினர்........முதலாவதாக இணைப்பரசுத் திட்டம் பற்றிக் குறிப்பிடுகிறேன்.

இணைப்பரசு என்றால் என்ன என்று எனக்குத் தெரியுமா என்று கேட்டார். இணைப்பரசு என்றால் நாடு துண்டாடப்படுவதா என்று கேட்டார். இதுதான் பல

## ஒழுங்குப் பிரச்சினை ஒன்று: "சபாநாயகர் அவர்களே! இப்பொழுது வீட்டுக்குப் புறப்படலாமா?"

வின, பன்மொழி பேசும் மக்கள் வாழும் நாட்டிற்கு ஏற்றது! (ஆனால்) ஒற்றையாட்சி அரசமைப்பிருந்த எந்த ஒரு நாட்டிலாவது இணைப்பரசு ஏற்படுத்தப்பட்ட உதாரணத்தை இவர்களால் காட்ட முடியுமா?

டாக்டர் நாகநாதன்: இது பற்றி கௌரவ அங்கத்தவருக்கு எதுவும் சந்தேகமிருந்தால் நான் இவருக்கு ஒரு வகுப்பு நடத்தவே தயாராயிருக்கிறேன்.

டட்லி சேனநாயகா: (பேசிக்கொண்டு நின்றவர் ஆசனத்தில் உட்கார்ந்தபடி) மெத்தச் சரி.

டாக்டர் நாகநாதன்: சபாநாயகரே! 93 வருடங்களுக்கு முன்னர் கனடா ஒற்றையாட்சியின் கீழிருந்தது. அங்கு வாழ்ந்த 65 000 பிரெஞ்சு மக்களும் ஆங்கிலத்தைப் படித்து ஆங்கில மக்களுடன் கலந்துமறைந்து விடுவார்கள் என்று ஆங்கில ஆட்சியாளர் நினைத்தார்கள். ஆனால் பிரெஞ்சு மக்கள் மசியவில்லை. எங்களுக்குச் சோல்பரிப் பிரபு கொடுத்த அரசமைப்புப் போல, கனடாவிலும் ஒரு டேர்ஹோம் பிரபு ஒற்றையாட்சி திட்டத்தைக் கொடுத்தார். இந்த ஒற்றையாட்சி அரசியற் திட்டம் 1867-ல் இணைப் பாட்சியாக மாற்றப்பட்டது.

ஃ

டட்லி சேனநாயகா: ......தனியரசுகள் பல ஒன்று சேர்ந்து ஒரு இணைப்பாட்சி நிறுவிய

### அவைப் புரு

தைத்தான் நாங்கள் ஏனைய நாடுகளில் காண்கிறோம்.

டாக்டர் நாகநாதன்: கௌரவ அங்கத்தவர் இதற்குப் பதில் கூற எனக்கு (உடனே) இடமளிப்பாரா?

சபாநாயகர்: ஒழுங்கு ஒழுங்கு!

### பாராளுமன்றத் துணுக்குகள்..

டட்லி சேனநாயகா:... கௌரவ அங்கத்தவர் (டாக்டர் நாதன்) இரண்டு நீண்ட மணித்தியாலங்களாகப் பேசித் தள்ளினரே (இன்னுமா வேண்டும் நேரம்?)

டாக்டர் நாகநாதன்: கௌரவ அங்கத்தவருக்கு (சேனநாயகாவிற்குப்) படிப்பிப்பதானல் 2 மணித்தியாலங்கள் காணுது, ஐயா! 4 மணித்தியாலங்களாவது வேண்டும் அதற்கு!

ஃ

டட்லி சேனநாயகா: உலகில் எத்தனை இணைப்பரசுகள் உண்டோ அத்தனை விதமான இணைப்பரசுத் திட்டங்களும் உண்டு. அதாவது ஒரு நாட்டிலுள்ள இணைப்பரசுத் திட்டம் இன்னொரு நாட்டின் திட்டத்துடன் ஒத்திருப்பதாயில்லை.

டாக்டர் நாகநாதன்: ஆனல் அடிப்படைக் கொள்கை, எல்லாவற்றிற்கும் ஒன்று தான்!

டட்லி சேனநாயகா: இது பற்றி எல்லாம் பதிலிறுக்கிறேன். சிறிது அமைதியாயிருங்கள்! அரசமைப்பு வியாச்சியங்களோ, அரசமைப்புத் திட்டங்களோ எனக்குப் புதிதானவையல்ல.

டாக்டர் நாகநாதன்: ஆமாம். நீங்கள் இந்த விவகாரங்களிலுள்ள கிரிமினல் பகுதிகளில் நன்ருகக் கைதேர்ந்தவர் தான்!

ஃ

டட்லி சேனநாயகா:...வாக்காளர்கள் வாக்களிப்பு நிலையங்களுக்குப் போகாது (ஐக்கிய தேசியக் கட்சியினரால் அடாத்து முறையாக)த் தடுக்கப்பட்டார்கள் என்று எட்டியாந்தோட்டைப் பிரதிநிதி (டாக்டர் என். எம். பெரேரா) குற்றஞ் சுமத்தினர். ஆனல் கடந்த இரண்டு பொதுத் தேர்தல்களுக்குரிய புள்ளி விவரங்களை அலசிப்பார்த்துக்கொள்ளும்படி இவரை நான் கேட்கிறேன்...தேர்தலில் வாக்களித்த மக்களின் எண்ணிக்கை இதுவரைகாலத்தில் ஜூலை தேர்தலில்தான் உச்ச நிலையை அடைந்திருக்கிறது. இருந்தும் வாக்காளர்கள் தடுத்து வைக்கப்பட்டார்கள் என்று இவர் கூறுகிருர்.

டாக்டர் பெரேரா: உங்கள் பதிலில் தர்க்கப் பலமில்லையே! தடுத்து நிறுத்தப்பட்ட வாக்காளர்களுக்குப் பதிலாக நீங்கள் ஆள்மாருட்டம் பெருமளவில் செய்ய முடியுமே!

ஃ

பாராளுமன்ற விவாதத்தில் ஒரு பிரேரணைமீது ஓர் அங்கத்தவர் ஒருமுறை மாத்திரமே பேசலாம். ஆனல் அத்துடன் அவர் வெளியேறி விடுவதென்பது கருத்தல்ல.

சபை நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்ற விஷயங்கள் ஆரம்பமாகுமுன் அரை மணித்தியாலமும் நிகழ்ச்சி நிரலின் இறுதியில் அரை மணித்தியாலமும் கேள்வி நேரங்களாகும். கேள்வி நேரத்தில் பிரதிநிதிகள் அமைச்சர்களிடம் குறிப்பிட்ட விஷயங்கள் பற்றிக் கேள்விகள் கேட்கலாம். கேள்விகளுக்குக் கிடைக்கும் பதில்களிலிருந்து உபகேள்விகள் பிறக்கலாம். கேட்பவரின் சாதுரியத்தைப் பொறுத்து, கேள்வி நேரம் கலகலப்பாயிருக்கும். பாராளுமன்ற கூட்டங்களில் தனி இடம் பெற்ற நிகழ்ச்சி இது.

அங்கத்தவர்கள் சபை நிகழ்ச்சியில் பேசி முடிந்தாலும், ஒரேயொரு சந்தர்ப்பத்தையொட்டி எத்தனை தடவையும் எழுந்து பேசலாம். அதுதான் "ஒழுங்குப் பிரச்சினை". அதாவது சபை நிகழ்ச்சிகளில் பாராளுமன்ற சம்பிரதாயங்கள், நடைமுறைகள் எதுவும் மீறப்பட்டால் அதைச் சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். வேறு எவராவது பேசிக்கொண்டு நின்ருலும் "ஒழுங்குப் பிரச்சினை" கிளப்புபவருக்கே முதலிடம் கிடைக்கும்.

ஒரு பேச்சாளர் இன்னுமொரு அங்கத்தவரைத் தாக்கிப் பேசினல் தாக்கப்பட்டவர் உடனே பதிலிறுக்கச் சந்தர்ப்பம் கோரலாம். அப்பொழுது பேசிக்கொண்டு நிற்பவர் சந்தர்ப்பம் கொடுக்க இணங்கலாம்; மறுக்கலாம் ஆனல் ஒழுங்குப் பிரச்சினை கிளப்புபவர் பேச எழுந்தால் எவரும் மடங்க வேண்டியதுதான். அவர் பேச எழும்போது "ஒழுங்குப் பிரச்சினை ஒன்றையொட்டிப்பேசுகிறேன்" என்று கூறிக்கொண்டுதான் பேச எழ வேண்டும். இந்த ஒழுங்குப் பிரச்சினை படும் பாடே பாடு!

[இரவு சுமார் ஒன்றே முக்கால் மணி. அங்கத்தவர்கள் நித்திரையால் களைத்திருந்த நேரம். வழக்கமான முறைக்குப் பதிலாக திரு. கே எம். பி. ராஜரத்தினு ஒவ்வொரு பெயராக (151 பெயர்களையும்) இடாப்பாகக் கூப்பிட்டே வாக்குப் பதிவிக்க வேண்டுமென்று கோரினர். இக்கோரிக்கைக்கு உரித்தானவர் ஒரு பிரதிநிதி சபை அங்கத்தவர். எனவே, சலிப்புடன் இதற்கு இணங்கவேண்டியதாயிற்று. ஆனல் வாக்களிப்பின போது அந்தப பிரதிநிதி ஆசனத்தில் இருக்கவில்லை. ஒய்வை நாடி வீடு போக ஆவத்தப்படுகிருர்கள் பிரதிநிதிகள்]

கௌரவ மைத்திரிபால சேனநாயக்கா: ஒழுங்குப் பிரச்சினை ஒன்றையொட்டிப பேசுகிறேன். கௌரவ வெலிமடைப் பிரதிநிதி (ராஜரத்தினு) ஆசனத்திலில்லை.

டாக்டர் என். எம். பெரேரா: இது ஒரு ஒழுங்குப்பிரச்சினையல்லவே.

எம். லி. அஹமது: நான் வாக்களிப்பில கலந்து கொள்ளவில்லை.

டாக்டர் என். எம். பெரேரா: ஒழுங்குப் பிரச்சினையொன்றையொட்டிப் பேசுகிறேன, சபாநாயகர் அவர்களே! வழக்கமான முறையை விட்டு, இடாப்புப் பெயர்களாக அழைத்து வாக்கெடுக்க வேண்டும் என்று கோரிய இரு பிரதிநிதிகளும் (ராஜரத்தின தம்பதிகள்) (ஆசனங்களில்லாதது மாத்திரமல்ல) வாக்களிப்பதிலுமே கலந்து கொள்ளவில்லை. வாக்கெடுப்பு முடிவுகளை நீங்கள் பகிரங்கப் படுத்துமுன் இதைக் கவனித்துக்கொள்ள வேண்டுகிறேன். பிரஸ்தாப கோரிக்கை விடுத்தவர்களே வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாதது இச்சபையின் உரிமைகளை மீறுவதாகும். இதைக் கவனித்து, ஏற்ற நடவடிக்கை எடுப்பீர்களாக.

ஹெுபர்ட் குணவர்தன: ஒழுங்குப் பிரச்சினை ஒன்றையொட்டிப் பேசுகிறேன். எந்த நிரந்தர விதிகளுக்கமைய இந்த ஒழுங்குப் பிரச்சினை கிளப்பப்படுகிறது?

டாக்டர் என். எம். பெரேரா: அது சபை உரிமைகளை மீறிய செயல்.

ஹெுபேட் குணவர்தன: இல்லை, இல்லை. எந்த நிரந்தர விதியின் கீழ் கௌரவ அங்கத்தவர் இப் பிரேரணையைப் பிரேரிக்கிருர்?

டட்லி சேனநாயக்கா: (சாமத்தில் சலிப்படைந்து) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றையொட்டிப் பேசுகிறேன் ஐயா! இப்பொழுது நாங்கள் வீட்டுக்குப் புறப்பட முடியுமா?

"வாடாத புஷ்பமே வற்றாத செல்வமே
தேடாத தெய்வீக பிம்பமே!...."

எனும்படி வளமான அழகு பெற இதோ!!

எலேட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்!!

* * *

கண்ணைப் பறிக்கும் அழகிய நிறங்கள்; இணையற்ற நவீன டிசைன்கள்; குறைந்த விலை முதலியன
எலேட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்டின்
சிறந்த அம்சங்கள்.



இன்று மாலை
நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை
இலங்கை வானெலி வர்த்தக ஒலிபரப்பில்
குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும்
மாலைகீதம் நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.

ஏக விநியோகஸ்தர்கள்:-

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: 110 & 114, மெயின் வீதி.
கொழும்பு.
மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.

Mylads 384/63

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதி வேற்றுமை, குருட்டு நம்பிக்கைகள்

# இவற்றைத் தமிழகத்தில் நிலைநாட்டியவர்கள் ஆரியர்களே

## மொழியும் பழக்க வழக்கங்களுந்தான் மாறுபாடு அடையாமல் தப்பிப் பிழைத்தன

[பண்டிதர் கா. பொ. இரத்தினம்]

(2)

மொகஞ்சதாரை நாகரிகத்துக்கு ஏறக்குறைய 2000 ஆண்டுகளுக்குப்பின், கி. மு. 1500 அளவில் பஞ்சாப்பு வெளியினுள்ளே ஆரியர்கள் புகுந்தனர். அப்பொழுது அவர்கள் அங்கிருந்த மக்களைத் தாசர்கள் என வழங்கினர்; அவர்களுடன் போரிட்டனர். இப்போரே வேத நூல்களின் சரித்திரப் பின்னணியாகும்.

மொகஞ்சதாரை நாகரிகத்துக்குத் திராவிட நாகரிகத்தோடு—சிறப்பாகத் தமிழ் நாகரிகத்தோடு—உள்ள தொடர்பு எத்தகையதாயிருப்பினும், இந்தியத் தமிழர், ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னரே மிகச் சிறந்துயர்ந்த நாகரிகத்தை உடையவர்களாயிருந்தனர் என்பது மறுக்கவோ மறைக்கவோ முடியாததோர் உண்மையாகும். நேரு, சிலேற்றர், இருப்சன், ஒல் முதலிய பலரும் இதனை எடுத்தியம்பியுளர்.

### ஆரியர் வருகைக்கு முன் தமிழ்

"ஆரியர் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னரே தமிழ் மொழி நல்வளர்ச்சியடைந்திருந்தது" எனக் குமாயூன் கபீர் என்பார் தமது "இந்திய மரபுரிமை" எனும் நூலிற் கூறியுளர். இருக்கு வேதப் பாடல்களும் இவ்வுண்மையை நன்கு புலப்படுத்துகின்றன: "தாசர்கள் அல்லது தமிழர்கள் எனப்படுவோர் இந்தியா முழுவதிலும் பலவேறு நகரங்களில் வாழ்ந்தனர். அவர்களுடைய அரசர்கள் பெருஞ் செல்வர்களாயிருந்தனர்; அளவில்லாப் பசுக்களையும் குதிரைகளையும் தேர்களையும் முடையவர்களாயிருந்தனர். இவை யாவும் நூறு கதவுகளையுடைய கோட்டைகளிலிருந்தன. தாசர்கள், பொன் வைர நகைகளை அணிந்து தம்மை அழகுபடுத்தினர். அவர்கள் ஆரியருடைய சமயக் கிரியைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. வணிகர்கள் 'பணிக்கர்' என வழங்கப்பட்டனர். இவர்கள் ஐரோப்பிய ஆபிரிக்க நாடுகளுடனும் கடல் வழியாகவும் நில வழியாகவும் வியாபாரஞ் செய்தனர்"

மாஸ்கோவில் அண்மையில் நடைபெற்ற கீழை நாட்டியல் ஆராய்ச்சிப் புலவர்களின் 25-வது உலக மாநாட்டில் தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் விசேஷ அழைப்பின் மீது கலந்து கொண்டு தமிழர் நாகரிகம் பற்றி ஆராய்ச்சி உரை நிகழ்த்திய செய்தி தெரிந்ததே. அவர் அங்கு ஆற்றிய உரையின் முதற் பகுதியை 25-9-60 சுதந்திரனில் நேயர்கள் படித்திருக்கலாம். பிரஸ்தாப உரையின் இரண்டாவது பகுதி இங்கே தரப்படுகிறது.

### சிறப்பெல்லாம் திராவிடத்திலே

உவில் துறந்து என்பார் திராவிட மக்களைப்பற்றிப் பின்வருமாறு "எமதுகீழைத்தேய மரபுரிமை" எனும் தமது நூலிற் கூறியுளர் "ஆரியர்கள், திராவிடர்களிடையே புகுந்த பொழுது திராவிடர்கள் முன்னரே நாகரிகமடைந்த மக்களாயிருந்தனர். திராவிட வணிகர்கள் சுமேரியாவுக்கும் பாபிலோனியாவுக்கும் கப்பல்களிற் சென்றனர் அவர்களுடைய நகரங்களிற் போகப் பொருள்கள் பல இருந்தன. அவர்களிடமிருந்தே ஆரியர்கள் கிராமச் சமுதாயம், நிலவாட்சி, வரி முதலியனவற்றைக் கற்றனர் இன்று வரை தக்காணம் மக்கட் குலம், பழக்கவழக்கங்கள், மொழி, இலக்கியம், கலைகள் முதலியவற்றிலே சிறப்பாகத் திராவிடமாகவே இருக்கிறது"

### ஆரியர் வருகை

ஆரிய நாகரிகமும், சமக்கிருத மொழியும், வட இந்திய மொழிகளும் தமிழரின் நாகரிகத்தாலும், தமிழ் மொழியாலும் வளம்படுத்தப்பட்டன. படிப்படியாக ஆரியர் வட இந்தியாவிலிருந்த பழங்குடிகளோடு கலந்து வட இந்தியாவின் பெரும்பான்மைச் சாதியினராக ஆகினர். எனினும், தென் இந்தியாவில் வாழ்ந்த மக்களை ஆரியர் தம் வலிமையினால் அடக்கி ஆள முடியாதவர்களாயினர். வட இந்தியப் பேரரசருள் ஒருவராக விளங்கிய அசோகரும் தமது மவுரியப் பேரரசைக் கலிங்கம் வரையுமே விசாலிக்கச் செய்தார். காவேரி, தாமிரவருணி எனும் ஆறுகளின் வளம் மிக்க வெளிகள் ஆரியரைக் கவர்ந்தன எனவே அவர்கள், குடியேற்றக்காரர்களாகவும், ஆசிரியர்களாகவும், சமயக் குருக்களாகவும் தமிழகத்திலே நுழையத் தொடங்கினர். இவ்வாறு நுழைந்தவர்கள் தமிழ் அரசர்களிடத்துப் பெருஞ் செல்வாக்கு உடையவர்களாகவும் ஆகினர். ஆரியருடைய நுழைவினால் ஆரியருடைய பழக்கவழக்கங்களும், சமயக் கோட்பாடுகளும், பிறவும் தமிழரிடையே பரவத் தொடங்கின. எனினும், தமிழருடைய சமுதாய அமைப்பும், மொழியும், பழக்கவழக்கங்களும் இன்றும் பெரும் மாறுபாடு அடையாமற் றனித்தன்மையுடன் நிலைத்து நிற்கின்றன.

### சாதி வேற்றுமையைப் புகுத்தியவர்கள் பிராமணர்கள்

தமிழகத்திலே நுழைந்த ஆரியர்களட் பெரும்பாலானோர் பிராமணர்களாவார். இவர்களே இப்பொழுது தமிழகத்திற் காணப்படும் சாதி வேற்றுமைகளையும் குருட்டுப் பழக்கவழக்கங்களையும் நிலைநாட்டினர் பிராமணர்கள் தங்களை உலகத்தில் மிக உயர்ந்த சாதியினர் இவ்வுலகத் தேவர் (பூசுரர்) எனக் கூறிக்கொண்டு தம் நலத்துக்காகச் சைவசமயத்திலும் சாதி வேற்றுமையைப் புகுத்தினர். இவர்கள் தங்கள் சமக்கிருத மொழியைத் தேவபாடை என்று போற்றித் தமிழையிழித்தனர். தமிழின் தனித்தன்மையையும், முதன்மையையும், பழமையையும் மறைத்து அதனைச் சமக்கிருதத்தின் ஒரு கிளை மொழியாக்கிவிட முயன்றனர். இப்பிராமணர்கள் பிற மக்களோடு கலவாது தனித்து வாழ்ந்தனர். இவர்கள் வாழ்ந்த இடங்கள் "சதுர்வேதிமங்கலம்" எனவும் "பிரமபுரம்" எனவும் வழங்கப்பட்டன. இவ்விடங்கள் வேதப் படிப்பின் இருப்பிடங்களாக விளங்கின.

பௌத்தமும், சமணமும் தென்னிந்தியாவிற் பரவின பொழுது அவை ஆரிய நாகரிகத்தைத் தென்னிந்தியாவிற் புகுத்தித் தமிழரின் நாகரிகத்தை மாற்ற முனைந்தன. பௌத்தர் சமணர்களின் இலக்கிய இலக்கண நூல்கள் தமிழ் இலக்கியத்தை வளப்படுத்தியமை குறிப்பிடத்தக்கதே.

### சேர, சோழ, பாண்டியர் புகழ

சரித்திரத்துக்கு முற்பட்ட காலந் தொடக்கம் தென் இந்தியாவினுள்ள தமிழகத்தில் வாழ்ந்து வரும தமிழரின் வரலாற்றினை நன்கு அறிதற்குச் சான்றுகள் இன்னும் போதிய அளவுக்குக் கிடைக்கவில்லை. எனினும், சேர சோழ பாண்டியப் பேரரசுகளைப் பழங்காலத்திலேயே பல நாடுகள் அறிந்திருந்தன. கி. மு. நாலாம் நூற்றாண்டில் வரையப்பட்ட அசோகரின் கல்வெட்டுகள் இவற்றைப்பற்றிக் குறிப்பிடுகின்றன. சந்திரகுப்த மவுரிய அரசவையிலே கிரேக்க தூதராக விருந்த மெகத்தெனிசு பாண்டிய அரசையும், அதன் செல்வம், படை முதலியவற்றையும் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார். கி. மு. நாலாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கருதப்படும் சமக்கிருத இலக்கண ஆசிரியராகிய காத்தியானர் இப்பேரரசுகளைப்பற்றிக் கூறியுளர். வால்மீகியின் இராமாயணமும் பாரதமும் இவற்றைப் பற்றி வருணித்துள. இசுத்தாபோ (கி. மு 22) ஒரு பாண்டிய அரசனைக் குறிப்பிட்டுளர். பெரிப்பிளசும்

(12-ம் பக்கம் பார்க்க)

# கந்தளாய் சீனி ஆலை

# தமிழ் பேசும் வாலிபர்களின் கண்களைத் திறக்க வேண்டும்

## காற்சட்டை மோகத்தை இனியும் கைவிடாவிட்டால் கேடுதான்

கந்தளாய் சீனிக் கூட்டுத் தாபனத்தால் நிர்வகிக்கப்படும் சீனி உற்பத்தி ஆலை அக்டோபர் மாதம் 2-ம் தேதி உத்தியோக பூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. பிரஸ்தாப ஆலைபற்றித் தமிழ் பேசும் மக்கள் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் இக்கட்டுரையில் தரப்பட்டிருக்கின்றன.

காலிக்கு அணித்தாயுள்ள பத்தேகம (Baddegama) வில் கடந்த நூற்றாண்டிலே சீனி உற்பத்தியாக்கப்பட்டதைப் பலர் அறிய மாட்டார்கள். கடைசியாக இங்கிருந்து 1859-ல் 200 தொன் பழுப்புச் சீனி ஏற்றுமதியாகியிருக்கிறது என்பதை இன்னும் பலர் அறிய மாட்டார்கள் அனுபவக் குறைவினால் கரும்புப் பயிரில் அழிவு ஏற்பட்டதும் சீனி உற்பத்தி நின்றது.

### வரண்ட பிரதேசத்தில் கரும்புப் பயிர்

சுமார் 1930-ல் மீண்டும் இலங்கையில் சீனி உற்பத்தி செய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் அக்காலத்தில் இங்கிலாந்திலுள்ள குடியேற்ற நாட்டுக் காரியதரிசியின் அனுமதி கிடைக்காததினால் திட்டம் நிறைவேறவில்லை. 1941-ல் மீண்டும் முயற்சிகளெடுக்கப்பட்டன. யுத்தகாலமானகயால். மீண்டும் முயற்சி கைவிடப்பட வேண்டியதாயிற்று. 1947-ல் சுதந்திரம் கிடைத்ததும் உற்சாகம் பிறந்தது. நீர்ப்பாசனம் செய்யக்கூடிய வரண்ட பிரதேசங்களில் (Dry Zone) கரும்புப் பயிர் செய்வதையே நிபுணர்கள் சிபார்சு செய்தனர். இதன் பயனாக பொல்லநறுவைப் பகுதியில் கிரித்தலைக் குளக்கட்டுப் பிரதேசத்தில் கரும்பு பயிரிடத் தீர்மானமாயிற்று.

### ஏக்கருக்கு 30 தொன் சீனி

ஒவ்வொன்றும் 1500 ஏக்கர் கொண்ட நாலு துண்டுகளில் கரும்பு பயிர் செய்வதாகத் திட்டமிடப்பட்டது. இவற்றில் ஒரு துண்டு தரிசாக விடப்படும் பொழுது ஒரு துண்டில் கரும்பு வெட்டியபின் முளை கொண்டு வளரும் பயிருக்காகவும் இன்னுமொரு துண்டு முழுப் பயிருக்காகவும் [illegible] மாற் நாலு து[illegible] பயிர் வளர்க்கப்படும், மண்ணுக்கு ஏற்ற கரும்பு வகை எது என்று கமத் தொழில் துறையினர் பரீட்சைகள் நடத்தினார்கள். அவர்களின் ஆராய்ச்சியின் முடிவில் தெரிந்தெடுத்த கரும்பு வகையில், ஏக்கருக்கு 30 தொன் சீனி உற்பத்தியாக்க முடியும் என்று கண்டார்கள். அடிக்கட்டையில் முளை கொண்டு வளரும் கரும்பில் 30 தொன்னுக்குச் சற்றுக் குறைவாகவே சீனி பெற முடியும்.

### 2 கோடிக்கு மேல் மூலதனம்

மேற்படி திட்டம் நடைமுறையில் வராது தடங்கிற்று பின்னர் 1956-ல் கந்தளாயில் இன்னும் விரிவான முறையில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. திட்ட விரிவிப்பின் பயனாக வருடம் 15,000 தொன் சீனிக்குப் பதில் 20,000 தொன சீனி உற்பத்தி செய்வதென்று முடிவாயிற்று.

ஈற்றில் 3-12-57-ல் கந்தளாய் சீனிக் கூட்டுத் தாபனம் உருவாயிற்று. இக் கூட்டுத் தாபனத்தின் மூல[illegible]

(13-ம் பக்கம் பார்க்க)

இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி
மங்கையர் மனதுக்குகந்தது
உஷா தையல் மெஷின்களே



★ மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.
★ இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.
சோல் ஏஜண்டுகள்:
ரெய்மு சன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11.
போன்: 4263, 5060.
கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்
SUTANTIRAN

1960 அக்டோபர் மாதம் 9-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ. 1183.


## நம்பிக்கை நிறைவேருவிடின்....

1961-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாந் தேதிக்குப் பின்னர் அரசாங்கம் கடைப்பிடிக்கவிருக்கும் நிர்வாக மொழி மாற்றம் இலங்கைவாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு பெரும் இடர்ப்பாடாக அமையப் போகின்றது.

அரசாங்க அலுவல்கள் அனைத்தையும் தனிச் சிங்கள மொழியிலேயே நடத்துவது என்று முடிவு செய்து இந்த முடிவினை நோக்கி மும்முரமாக முன்னேறி வருகிறது அரசாங்கம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களில் உள்ள அரசாங்க அலுவலகங்களில்கூடத் தனிச் சிங்கள மொழியிலேயே முற்று முழுதாகக் கருமமாற்றுவதற்கு வேண்டிய ஒழுங்குகள் துரிதமாக மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த நடவடிக்கைகள் தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களையும், தமிழ்ப் பொதுமக்களையும் பாதிப்பனவாகும். வெறுமனே பாதிப்பனவாகும் என்று சொன்னல் போதாது. தமிழ் பேசும் அரசாங்க ஊழியர் தம் பதவிகளை இழக்கும் அளவிற்கும், தமிழ்ப் பொதுமக்கள் தம் ஜீவாதார உரிமைகளில் பிரதானமான ஒன்றைப் பறிகொடுக்கும் அளவிற்கும் கேடு சூழவிருக்கின்றது. இந்த ஆபத்திலிருந்து தப்புவதற்கு வழி யென்ன?

கடந்த வாரம் கொழும்பில் கூடிய இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. "சிங்களம் மட்டும் என்ற அரசாங்கத்தின் கொள்கையைத் தொடர்ந்து எதிர்க்க வேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் செயற்குழு தமிழ்ப் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கிறது" என்பது ஒரு தீர்மானம்.

"தமிழ் பேசும் மக்களும், அவர்தம் ஸ்தாபனங்களும் சகல காரியங்களையும் தமிழ் மொழியிலேயே நடத்துவதோடு, தமிழ் மொழியிலேயே அரசாங்கத்துடன் சகல தொடர்புகளையும் வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் தமிழரசுக் கட்சியின் செயற்குழு தமிழ் பேசும் மக்களை கேட்டுக்கொள்ளுகிறது" என்பது மற்றொரு தீர்மானம்.

இந்த இரண்டு தீர்மானங்களையும் நாம் மனப்பூர்வமாக வரவேற்கிறோம். ஆனல் வெறும் "கேட்டுக் கொள்கிறோம் தீர்மானங்களி" னல் மட்டும் காரியங்கள் நடைபெறும் என்ற நம்பிக்கை நமக்கு கிடையாது. எதிர்வரும் ஜனவரி முதலாம் தேதி தமிழ் பேசும் மக்களின் தலையின் மீது சூழப்போகின்ற பேராபத்தைத் தடுத்து நிறுத்தத் தமிழரசுக் கட்சி உருப்படியாக என்ன காரியத்தைக் கட்சி ரீதியாகச் செய்யப்போகின்றது என்பதுதான் கேள்வி.

'தமிழ் மொழிக்கும் தமிழ் பேசும் இனத்துக்கும் வரவிருக்கும் ஆபத்துக்களைத் தடுத்து நிறுத்துவதற்குத் தமிழரசுக் கட்சி அபேட்சகர்களையே தேர்ந்தனுப்புங்கள்' என்று அடுத்தடுத்து வந்த இரண்டு பொதுத் தேர்தல்களில் தமிழ் பொதுமக்கள் கேட்கப்பட்டார்கள். அதன்பிரகாரம் தமிழ் பேசும் மக்கள் பதினறு பிரதிநிதிகளைத் தேர்ந்தனுப்பினர்கள். இப்போது ஒரு பெரிய ஆபத்து தலைகாட்டுகிறது. 'இந்த வேளையில் என்ன செய்யப்போகிறீர்கள்?' என்று தமிழரசுக் கட்சியினரை கேட்கவும், 'சொன்னபடி ஏதாவது செய்யுங்கள்' என்று அவர்களுக்குக் கட்டளையிடவும் தமிழ் பொதுமக்களுக்கு உரிமை உண்டு என்றே கருதுகிறோம்.

நிர்வாக மொழி மாற்றத்தினல் ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்கு உள்ள ஒரே மார்க்கம உடனடியாகப் பிரதேச சபைகளை அமைத்து, தமிழ் பேசும் மக்களுக்குப் பிரதேச சுயாட்சியை வழங்குவதுதான்.

இதைத் தமிழரசுக் கட்சியினர் ஆட்சியினருக்கு வலியுறுத்திக் கூறி, நிர்வாக மொழி மாற்றம் ஏற்படுவதற்கு முன்னல் பிரதேச சபைகள் அமைவதற்கு வழி கோல வேண்டும். அதுமுடியாவிட்டால் நிர்வாக மொழி மாற்றத்தை எதிர்த்து ஒரு சாத்விகப் போராட்டத்தை உக்கிரமாக நிகழ்த்தியே தீர வேண்டும்.

ஸ்ரீமாவோ அரசாங்கம் தமிழ் மக்களுக்குப் பிரதேச சபைகளை வழங்கும் என்ற ஒரு நம்பிக்கை தமிழரசுக் கட்சியின் உயர்தர வட்டாரத்தில் நிலவுவதாகத் தெரிகிறது. அந்த நம்பிக்கை நிறைவேறுமானல் அது வரவேற்கக்கூடியதே. ஆனல், தமிழினம் நம்பி நம்பிக் கெட்ட கதைகளையே பூர்வீக சரித்திரமாகக்கொண்டது. 'நம்பிக் கெட்டது தமிழினம்' என்று தமிழரசுக் கட்சியினரே மேடைகளில் முழங்கியிருக்கின்றனர்; எச்சரித்திருக்கின்றனர். தாமே ஒருமுறை காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயகாவை நம்பி உடன்படிக்கை எழுதிப் பின்னர் சூடுபட்டிருக்கின்றனர். இந்த நிலையில் தொடர்ந்து வெறும நம்பிக்கையில் மட்டும் நம்பிக்கை வைத்துக்கொண்டு செயலிழந்து நிற்பது புத்தியாகுமா என்பதைத் தமிழரசுத் தலைவர்கள் தீர்க்கமாகச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

நம்பிக்கை நிறைவேருவிட்டால் அடுத்த நடவடிக்கை என்ன என்பதற்கு இப்போதே திட்டங்களும் ஆயத்தங்களும் அவசியமல்லவா? காலந்தாழ்த்தும் ஒவ்வொரு கணமும் அரசாங்கம் தமிழ் மொழிக்கும், இனத்துக்கும் பாதகமான பல காரியங்களைச் செய்துகொண்டே போகிறது. மந்திரிகளின் வாய்ப்பேச்சுக்களில் காணப்படும் தாராளமும், நீதி நியாயமும், நல்லெண்ணமும் செயலில் காணப்படவில்லை. காலந்தாழ்த்தும் ஒவ்வொரு நொடியும் அரசாங்கம் பலம் பெற்றுக்கொண்டு போகிறது; தமிழ் பேசும் மக்கள் பலம் இழந்துகொண்டு, எதிர்பலைத் தளர்த்திக்கொண்டு வாடி நிற்கிருர்கள். இந்த உண்மையைத் தமிழரசுத் தலைவர்கள் கவனத்தில் கொள்ளாமல் தடடிக்கழிப்பார்களேயானல், அது அவர்களுக்கு மட்டுமல்ல, இனத்தின் எதிர்கால நல்வாழ்வுக்குமே குந்தகமாக முடியும் என்று அஞ்சுகிறோம்.

# போலந்துப் பிரதமரும் சுதந்திரன் நிருபரும்

## தமிழ் பேசும் மக்களுக்கு வருத்தம் தெரிவித்து பிரத்தியேக செய்தி

**தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்குத் தாம் போக முடியாது நேர்ந்தது பற்றி வருந்துவதாகப் போலந்துப் பிரதமர் திரு. சிரங்கோவிச் கூறினர். தமிழ் பேசும் மக்களுக்குத் தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கும்படி அவர் சுதந்திரன் நிருபரைப் பன்னிப் பன்னி வேண்டிக்கொண்டார்.**

கடந்த வாரம் போலந்துப் பிரதமர் இலங்கையை விட்டுப் போவதற்கு முன்னல் கூட்டிய பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் இச்சம்பவம் நடந்தது. சுதந்திரன் நிருபர் கேட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த போதுதான் போலந்துப் பிரதமர் மேற்கண்டவாறு வருத்தம் தெரிவித்ததோடு வேண்டுகோளும் விடுத்தார். சுதந்திரன் நிருபர் கேட்ட கேள்வி இதுதான்:—

### சுதந்திரன் நிருபர் கேள்வி

"இந்த நாட்டு மக்களுடன் நேரில் கலந்து பழகக் கிடைத்த சந்தர்ப்பம் பற்றி மகிழ்ச்சியடைவதாகவும் அவர்களின் விருந்தோம்பல் உங்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டதாகவும் கூறி இம் மக்களுக்கு உங்கள் நன்றியைத் தெரிவிக்கும்படி உங்கள் ஆரம்ப உரையில் நிருபர்களைக் கேட்டுக் கொண்டீர்கள். ஆனல் வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்கள், (பாரம்பரியமாகத் தாம் வாழும் பிரதேசத்தில்), தங்கள் மத்தியிலும் தங்களை வரவேற்கவும் உபசரிக்கவும் தமக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படாததையிட்டுப் பெரிதும் ஏமாற்றமடைந்திருக்கிருர்கள் என்பதை தாங்கள் அறிவீர்களா? இம் மக்களுக்கு தாங்கள் விடுக்கும் செய்தி யாது?"



போலந்துப் பிரதமர் சிரங்கோவிச் தாம் சொல்ல விரும்பியதைத் தமது தாய் மொழியில் வாசிக்க, அதன் ஆங்கில மொழிபெயர்ப்பை ஒலிவாங்கி முன்னல் நிற்கும் அவருடைய மொழிபெயர்ப்பாளர் படித்துக் காண்பிக்கிருர்.

—படம்: "திறன்"

சுதந்திரன் நிருபரை எல்லோரும் திரும்பிப் பார்த்தார்கள். "நீங்கள் எந்தப் பத்திரிகையின் நிருபர்?" என்ருர் பிரதமருடன் கூடவந்த போலாந்து ஸ்தானிகராலய அதிகாரி ஒருவர். "சுதந்திரன்" என்று பதிலளிக்கப்பட்டது.

கேள்விக்குப் பிரதமர் [illegible] யின் எல்லாப் பகுதிகளிலு

முள்ள மக்களைப் பற்றியும் அறிந்துகொள்ள எனக்குப் போதிய அவகாசம் கிடைக்கவில்லை. இது பற்றி எனது வருத்தத்தை தெரிவித்துக் கொள்ளுகிறேன். பிழை என் மேலில்லை. எனக்குக் கிடைத்த குறுகிய அவகாசமே இதற்குக் காரணம். இந்தப் பகுதிகளுக்குப் போயிருந்தால் மிகவும் உபயோகமாகவே இருந்திருக்கும்.

"இருந்தாலும் (இப் பகுதிகளிலிருந்து என்னைப் பிரித்து வைத்திருக்கும்) தூரத்தை தோற்கடித்து இப்பகுதி மக்களுடன் நான் உறவாடிக் கொள்ளும் பொருட்டு, என் வாழ்த்துக்களை இம் மக்களுக்குத் தெரிவியுங்கள்" சுதந்திரன் நிருபரைத் திரும்பிப் பார்த்து "கட்டாயம் தெரிவியுங்கள்" என்ருர் பிரதமர். அடுத்தமுறை தாம் இங்கு வரும்பொழுது இப் பகுதிகளுக்குப் போவதாகவும் கூறினர்.

### ஐ. நா. சபை

ஐக்கிய நாடுகள் சபை, போலாந்து அரசாங்கத்திற்கும் கத்தோலிக்க திருச்சபைக்குமிடையேயுள்ள உறவுகள், ருஷ்ய-சீன உறவுகள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன.

### கத்தோலிக்க திருச்சபை

போலந்து திருச் சபையைப் பற்றிக் குறிப்பிடுகையில், மத சுதந்திரம் அங்கு பூரணமாக உண்டென்றும் மத குருமார் அரசியல் வரம்பிற்குள் புகாதவரை அவர்களுக்கு எவ்வித இடைஞ்சலும் இல்லை எனவும் குறிப்பிட்டார். தமது நாடு சிந்தனைச் சுதந்திரத்தை உத்தரவாதம் செய்வதின் விளைவே இந்த மத சுதந்திரமாகும் என்ருர் அவர். கோவில்களில் மத வழிபாடும் மத போதனைகளும் தாராளமாக நடை பெறுவதைப் போலாந்தில் எந்த யாத்திரிகரும் காண முடியும். ஆனல் போலந்தின் சமுதாய அமைப்பிற் கெதிராகத் திருச்சபை நடக்க எத்தனித்தால் அங்கேதான் விலங்கம் ஆரம்பமாகிறது" என்று கூறினர்.

### பாடசாலைகள்

பாடசாலைகளும் அரசாங்கமும் பற்றிய கேள்விக்குப் பதிலளிக்கும் பொழுது, அரசாங்கமே பாடசாலைகளனைத்தையும் நடத்துகிறதென்ருர். பாடசாலைகளில் மத போதனை கிடையாது. ஏனெனில் மதம் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விஷயம். ஆனல் எந்த மதத்தைச் சேர்ந்த குருமாரும் ஆரம்பபாடசாலைகளில் தத்தம் மதத்தவர்களுக்கு மதபோதனை செய்ய வசதிகள் அளிக்கப்பட்டிருக்கின்றன என்ருர்.

போலந்துப் பிரதமர் தமது தாய் மொழியிலேயே பேசினர். ஒவ்வொரு சொல்லையும் அவர் பேசி வாய்

(9-ம் பக்கம் பார்க்க)

## புதிய ஆபத்து

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிலர். திரு. எரிக் ஜான்ஸினுடைய இடத்தில் அவர் நியமிக்கப்பட்டுப் பின்னர் கமிஷனின் தலைவராக்கப்படுவார் என்று நம்பப்படுகிறது.

திரு. செனிவிரத்ன தமிழ்த் துவேஷம் படைத்தவர் என்பது ஏற்கனவே பிரசித்தமான விஷயமாகும். இவருடைய நிர்வாகத்தின் கீழ் அரசகரும மொழி இலாகாவின் தமிழ்ப் பகுதி பெரிதும் நசுக்கப்பட்டதென்பதும், அங்குள்ள தமிழ் பேசும் உத்தியோகஸ்தர்கள் நிஷ்டூரப் படுத்தப்பட்டார்கள் என்பதும் யாவரும் அறிந்ததே. திரு. செனிவிரத்ன பகிரங்க சேவைக் கமிஷனுக்குப் போனல் தமிழர்களின நியமனங்கள் என்ன ஆகுமோ என்ற கவலை இப்போது தமிழ் பிரமுகர்களிடையே ஏற்பட்டிருக்கிறது.

## சிங்களம்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ் உத்தியோகத்தர்கள் வற்புறுத்துவது. தொழிற் சங்கங்கள், இத்துறையில் மேலும் மௌனமாயிருந்தால் இதனை ஒரு பிரச்சினையாக்கி, தொழிற் சங்கங்களிலிருந்து தமிழ் உத்தியோகத்தர்கள் விலகுதல்.

(5) தமிழ் உத்தியோகத்தர்களின நலன்களுக்குப் பாடுபடுதற்குத் தொழிற் சங்கங்களை அமைத்தல்.

(6) தமிழ் இயக்கத்தினைக்கும் முகமாக எல்லா அரசாங்க உத்தியோகத்தர்களும் தமிழிலேயே எல்லாக் கருமங்களையுஞ் செய்தல்.

இந்த விடயங்களையும் பிறவற்றையும் ஆராய்ந்து ஓர் அறிக்கை சமர்ப்பிததற்கு ஒரு துணைக் குழு. நிறுவ வேண்டுமெனும் பிரேரணை ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது அதன் பிரகாரம் பத்துப் பேரைக் கொண்ட தொரு, துணைக் குழு நிறுவப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மதத்தைக் காட்டி இனத்தை பிரிக்க முயல்கிறுர் சு. நடேசபிள்ளை

### புனித பெனடிக்ற் கல்லூரி விழாவில் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம்

முன்னொரு காலத்தில் தபால்அமைச்சராக இருந்த திரு சு. நடேசபிள்ளை இந்து மதத்தைக் காட்டித் தமிழ் இனத்தைப் பிரித்து வைக்க முயல்கிறுர் என்று பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் குற்றஞ்சாட்டினுர்.

பேராசிரியர் மயில்வாகனம்புனித பெனடிக்ற்கல்லூரித் தமிழ் இலக்கிய சங்கத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவுக்குத் தலைமைவகித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு குற்றஞ்சாட்டினுர். விழா கடந்த வாரம் நடைபெற்றது. பேராசிரியர் மயில்வாகனம் தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

**பிரிவினை முயற்சி கூடாது**

"தமிழர் நாகரிகம், பண்பாடு மதத்தை அடிப்படையாகக்கொண்டதல்ல. தமிழ் மொழியை அடிப்படையாகக்கொண்டது. இந்த நிலையில் இலங்கைவாழ் இந்துக்களுக்குத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டும் என்றும் அப்போதுதான் இந்துக்களின் சமய, கலாசார தேவைகளைப்பூர்த்தி செய்யலாம் என்றும் பேசுவது பிரிவினைக்குவழி செய்வதாகும். தமிழருள் இந்துக்கள் அல்லாத வேறு மதத்தவரும் இருப்பதை மறப்பதா? பல்கலைக் கழகம் தமிழர் எல்லோருக்கும் பயனபடக்கூடிய ஒன்ருக இருக்கவேண்டும். ஒரு பிரிவினருக்கென்று கோருவது இனத்தைப்பிரிக்கும் முயற்சி. அது கூடாது.

**சிங்களம் கட்டாய பாடமாகும**

குறிப்பாக தற்போதய சூழ்நிலையில் மொழி அடிப்படையில் தமிழ் பேசும் மக்கள் அத்தனை பேரும் ஒன்றுபட்டு நிற்க வேண்டும். 1956-ல் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் சட்டம் அடுத்த ஆண்டு ஜனவரியில் தீவிரமாக அமுல் செய்யப்படவிருக்கிறது. பாடசாலைகளையும் அரசாங்கம் எடுக்கப்போகிறது. இனி எல்லாப் பாடசாலைகளிலும் சிங்கள மொழி கட்டாய பாடமாக்கப்படும். தமிழ் அன்னைக்கு இப்படி அடுக்கடுக்காக இன்னல்கள் செய்யப்படும் சமயத்தில்தான் பிரிவினைக் குரல் எழுப்புகிருர் திரு சு. நடேசபிள்ளை."

**கொழும்பில்தான் தமிழ வளர்கிறது**

வித்துவான் வேலன் பேசுகையில் புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழ்ச் சங்க விழாவை யாழ்பபாணத்தில் உள்ளவர்கள் பார்த்தால் பிரமிப்பார்கள் என்றும் மேற்படி விழாவைக் கண்ட பின்னர் தமிழ் கொழும்பில்தான் வளர்க்க படுகிறது என்று எண்ணத் தோன்றுகிறது என்றும் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் இன்றைய மக்களுக்கு எதையும் வற்புறுத்திக் கூற வேண்டி இருக்கிறது என்றும் திருவள்ளுவர் அன்று வற்புறுத்திக் கூறியது இன்றைய சந்ததியினருக்கு மிகவும் பொருத்தமாக இருக்கிறது என்றும் கூறினுர். தமிழ் பேசும் மக்கள் தங்கள் கருமங்கள் யாவற்றையும் தமிழில் செய்ய வேண்டும் என்று [illegible] வித்துவான் [illegible] வேண்டிக்கொண்டார்.

கல்லூரி அதிபர் வண. சகோதரர் அத்தநேசியஸ், சங்கப் பிரதம பேற்பாளர் வையாளர் திரு நீ. மே. யோ. வேதநாயகம் ஆகியோரும் பேசினுர்கள்.

**நாடகங்கள்**

கல்லூரிப் பழைய மாணவர்கள் "மிஸ்டர் உபதேசம்" என்ற நகைச்சுவை நாடகத்தையும் தற்போது சங்கத்திலுள்ளவர்கள் "தீர்ப்பு" என்ற சமூக நாடகத்தையும் அரங்கேற்றினர். [இரண்டும் தரமான நாடகங்கள். பங்குபற்றியவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள். கொழும்பில நாடகக் கலை வளர்ச்சியடைகிறது என்பதற்கு அவை எடுத்துக்காட்டாய் விளங்கின.]

பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றிபெற்றவர்களுக்கும் நாடகங்களில் திறமையாக நடித்தவருக்கும் பேராசிரியர் மயில்வாகனம் பரிசில்கள் வழங்கினுர்.

புனித பெனடிக்ற் கல்லூரித் தமிழிலக்கிய சங்க 15-ம் ஆண்டு நிறைவு வெளியீடாக "தமிழ் மலர்" ஒன்றும் விழாவின்போது வெளியிடப்பட்டது.



பேராசிரியர் மயில்வாகனம் பேசிக்கொண்டிருக்கிறுர். கல்லூரி அதிபர் வண. சகோதரர் அத்தநேசியஸ் அருகில் அமர்ந்திருக்கிறுர்.

# வரவு செலவுத் திட்டத்திலும் அரசாங்கம் பாரபட்சம்

## பாராளுமன்றத்தில் எஸ். ஜே. வி.

வரவு செலவுத் திட்டத்திலும் அரசாங்கம் தமிழ் பேசும் மக்களுக்குப் பாரபட்சம் காட்டிவிட்டது என்று தமிழரசுத் தந்தை பாராளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் கலந்து பேசும்போது கூறினுர்.

சிங்கள மக்களுக்கு சிங்களத்தில் போதனை நடைபெறும் தொழில் நுட்ப கல்லூரி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கலைக் கல்லூரி முதலானவற்றிற்கு வசதி செய்து கொடுக்கப்பட்டது போல் தமிழ் பேசும் மக்களுக்கு செய்து கொடுக்கப்படாததை அவர் சுட்டிக்காட்டினுர்!

தமிழ் பேசும் மக்களுக்கு ஜனநாயக உரிமைகள் கிடைக்கவில்லை என்றும் அவர்கள் இலங்கை பெற்ற சுதந்திரத்தால் பயனடையவில்லை என்றும் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் மேலும் கூறினுர்.

விதிக்கப்பட்ட வரிகள் பற்றிக் குறிப்பிடுகையில் திரு செல்வநாயகம் கூறியதாவது:-

'தற்காலவாச பர்மிட்டிலுள்ள இந்துக் குருக்கள் மார் சிலர் மதச் சடங்குகளைச் செய்வதற்காக இந்து சமூகத்தினரால் அழைக்கப்பட்டவர்கள். அவர்களுக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும். தொழில் வரி சிலருக்குப் பெருங் கஷ்டங்களை விளைக்கும் வருமான அடிப்படையில் வரி விதிப்பது நல்லது'

## மேல்மாகாண ஆசிரியர் சங்கம்

### வழிதவறிப் போகிறது

"மேல் மாகாணத் தமிழ் ஆசிரியர் சங்கம் பெருந்தொகையான கத்தோலிக்கத் தமிழாசிரியர்களையும் கொண்ட ஒரு சங்கமாகும். அவர்களுடைய அபிப்பிராயத்தை அறியாமல் கத்தோலிக்கர் அல்லாதாரைக்கொண்ட நிர்வாக சபையை அரைகுறையாகக் கூட்டிப் பாடசாலைகளை அரசாங்கம் கையேற்பதை ஆதரிப்பதாக அதன் தலைவர் திரு வ. நடராசா பத்திரிகைகளுக்கு அறிக்கைவிட்டது குழந்தைப்பிள்ளைத்தனமான ஒரு செயலாகும்" என்று மேல மாகாணத் தலைமை ஆசிரியர் சங்க நிர்வாகக் குழுவில் பேசிய மேல்மாகாணத் தமிழாசிரியர் சங்கத்தின் முன்னுள் தலைவர் திரு லியோனிஸ் பெர்ணுண்டோ கூறினுர். திரு பெர்ணுண்டோ ஆசிரியத் தொழிலில் 30 வருட அனுபவம் பெற்றவராவர்.

திரு பெர்ணுண்டோ தொடர்ந்து கூறியதாவது: "கத்தோலிக்க ஆசிரியர் நலவுரிமைச் சங்கத்தில் 35 லட்சப் ரூபா நிதியுளது. இப்பணத்தில 20 லட்சம் ஆசிரியர்களுக்கு கடனுகக் கொடுக்கபபட்டுளது இவை யாவும் நீண்டகாலக் கடன்கள். அரசாங்கம் பாடசாலைகளைக் கையேற்ருல் இந்தக் கடன்களை வசூலிப்பதில் பல சிக்கல்கள் உருவாகும். இதற்கு வழியென்ன என்று நிதியமைச்சரைக் கேட்டபோது, 'ஆலோசித்து முடிவு சொல்லுகிறோம்' என்று பதில் வந்திருக்கிறது. இப்படி அரசாங்கமே இன்னும ஆலோசிக்கும் கட்டத்தில் இருக்கையில் நமது மேல் மாகாண ஆசிரியர் சங்க கமிட்டி ஆலோசியாமலே எல்லாக் காரியங்களையும் முடிவு செய்துவிடுவது விந்தையாகும். இங்ஙனம் வழிதவறிப்போவதற்கு காரணம் ஒரே பாடசாலையில் தலைவர், உபதலைவர், காரியதரிசி ஆகிய எல்லா உத்தியோகங்களும் குவிந்துவிட்ட சாபக்கேடுதான்"

இவ்வாறு திரு பெர்ணுண்டோ கூறி முடித்தார்.

கூட்டத்திற்கு வித்துவான் இ. சி. சோதிநாதன் தலைமை தாங்கினுர்.

## போலந்துப்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

மூடு முன்னரே அருகில் இருந்த மொழி பெயர்ப்பாளர் எதுவித சிரமமுமின்றி அனுயாசமாக அழகு ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். மாநாட்டில் கலந்துகொண்ட பத்திரிகையாளர்கள் அத்தனை பேருமே மொழி பெயர்ப்பாளரின் ஆங்கில உச்சரிப்புக்கும், மொழி பெயர்க்கும் வேகத்துக்குமாக வெளியாக இல்லாவிட்டாலும் மனதார அவரைப் பாராட்டியிருப்பார்கள்.


தீபாவளித் திருநாளை உங்கள் மனைகளிற் சிறப்பிக்க இன்றே விஜயம் செய்யவேண்டிய ஸ்தாபனம்

குண்டன்மால்ஸ்!



எம்மிடம்

பெனுறிஸ்; மைசூர்; காஞ்சிபுரம் மணிப்புரி பட்டுச் சேலைகளும்; மற்றும் பலவித ஜவுளி வகைகளும் தீபாவளியை முன்னிட்டு ஏராளமாய்த் தருவிக்கப்பட்டு மலிவு விலைகளில் விற்கப்படுகின்றன.

குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,

சில்லறை வியாபாரப் பகுதி: [illegible] & [illegible]4, மெயின் வீதி. கொழும்பு. மொத்த வியாபாரப் பகுதி: 20, கெய்ஸர் வீதி.

—Mylads 590 60 —


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விதியின் சிரிப்பு!

சிறுகதை — எழுதியவர்: "தீவான்"

அவள் பெயர் கமலம். அவன் பெயர் அருணன்.

இருவருக்கும் திருமணம் நடந்தது ஆனால் இருவரும் ஊராருக்கு மட்டுந்தான் கணவன் மனைவியாய் வாழ்ந்தனர். உண்மை வாழ்க்கையில் அவர்களிடையே பரந்த பெருவெளி விரிந்து கிடந்தது. அருணனுக்கு [illegible] அந்தக் கமலம் மலரவில்லை. பெயரில் மட்டும் இருவருக்கும் ஒற்றுமை இருந்து விட்டால் வாழ்க்கையிலும் அதே ஒற்றுமை வந்துவிடும் என்று யார் சொன்னார்?

இத்தனைக்கும் காரணம்?

அவன் மீனா என்றொருத்தியை ஏற்கனவே காதலித்திருந்தான். அவள் கண்ணன் என்பவனை எப்பொழுதிருந்தோ காதலித்து வந்தாள். இப்படி அவர்களிடையே உள்ளந்தரங்கம் இருக்கும் போது எப்படி ஏற்படும் ஒற்றுமை? சிக்கல் தானே.

இத்தகைய சிக்கலுக்குள் அவர்களை இழுத்துப் போட்டுத் தவிக்கச் செய்தது யார்?

விதி யென்று ஒன்று இருக்கிறதாமே! அது வேடிக்கை உள்ளம் படைத்தது போலும். அல்லாவிட்டால் அவர்கள் தத்தம் காதலை நிறைவேற்ற விடாது கட்டுப்பாடு செய்த கர்நாடக அம்மா—அப்பாவாக அது உருவெடுத்திருக்க வேண்டாமே!

விதிதான் விரும்பியதில் வெற்றி கண்டது. ஆனால் அத்துடன் அது திருப்திப்படவில்லை. இன்னும் எத்தனையோ வேடிக்கைகள் பார்க்க வேண்டும் போல் அதன் உள்ளந் துடித்தது.

கமலம் படுக்கைக்குப் போவாள். அப்போது அவள் கண்களை நிறைப்பது கனம் மிகுந்த தூக்கம் அல்ல, பழைய இன்ப நினைவுகள்—காதலன் கண்ணனோடு கழித்த காதற் காட்சிகள்!

பூங்காவொன்றில் அவள் அமர்ந்திருக்கிறாள். அதே வேளை பின்னால் வந்து கண்களைப் பொத்துகிறான் கண்ணன்.

"ஐயோ போதும் கேலி விடுங்களேன்"—அவளின் செல்லங்குழையும் வேண்டுகோள்.

கண்ணன் தன் கரங்களை அகற்றுகிறான். ஆனால் சும்மாவா? இல்லை, அவள் கன்னமிரண்டையும் கிள்ளிப் பழுக்க வைத்துச் சுவைப்பதன்றோ அவன் கண் பொத்துவதின் முக்கிய நோக்கம்.

"உங்கள் கைக்கு கொழுப்பு கூடித்தான் போச்சு. கொஞ்சங்கூட இரக்கமில்லாமல் இப்படியா கிள்ளுவாங்க?"

"வேறு என்ன செய்வது? கொழு கொழு வென்றிருக்கும் உன் கன்னத்தைப் பார்த்துக்கொண்டு எப்படி சும்மா இருக்க முடியும் கமலம்?"

அவள் கன்னங்களில் செம்மை சுரக்கிறது.

செத்துப்போன காட்சிகளை உயிர்ப்பித்துப் பார்ப்பதில்தான் அவளுக்கு எத்தனை இன்பம்! இரவிரவாக இதே வேலைதான்.

அதே வேளை—

அருணன் வேறொரு படுக்கையில் கிடந்து புரள்வான். அவனுக்கும் கமலத்தின் நிலைதான்.

காதலி மீனா அவன் மடியில் அமர்ந்திருக்கிறாள். அவளை எத்தனை ஆதரவோடு அவன் கரங்கள் சுற்றி வளைத்திருக்கின்றன.

"மீனா..."

"அத்தான்."

முத்தமிடுவதற்காக அவன் குனிகிறான். ஆனால் அதற்குள் வேறொரு காட்சியில் அவள் அவனை மடக்கி விடுகிறாள்.

படுபோக்கிரி!

யாராவது 'சென்ஸர் போர்ட்டார்' பார்த்து விட்டால் கத்தரித்து விடுவார்களே, கத்தரித்து!

இந்த விதத்தில் சிறிது காலம் இருவரும் இரைமீட்டு, நடந்தவற்றை நினைந்து வருந்தினர்.

ஆனால் இந்த வருத்தத்திற்கு எல்லை வேண்டாமா? தம் காதல் கொடியைக் கத்தரித்து விட்டுக் கட்டாயத் திருமணம் செய்வித்த தாய் தந்தையருக்கு அவர்கள் பாடம் படிப்பிக்க வேண்டாமா?

யார் வேண்டாம் என்று சொன்னார்? கட்டாயம் வேண்டவே வேண்டும்!

அதோ அதை நிறைவேற்றுவது போல் இருவர் உள்ளத்திலும் கொடிய எண்ணம் கொடி விட்டது. கமலத்தைக் கொல்ல அருணன் கைத்துப்பாக்கியை எடுத்துத் தூசு துடைத்தான். அருணனைக் கொல்ல கமலம் பாலில் நஞ்சு கொட்டப் பார்த்திருந்தாள்!

ஆம், அவர்கள் திட்டம் நிறைவேற வேண்டிய காலம் நெருங்கி விட்டது. அதோ அதற்கறிகுறியாக, என்றைக்குமில்லாதபடி அவன் அவளைக் கட்டியணைத்த வண்ணம் படுக்கைக்கு அழைக்கிறான். அதோ அவளும் இதுவரை எந்த ஒரு இரவிலும் நடக்காத வழக்கப்படி, "இதோ வந்து விட்டேன்" என்று கூறியவளாய் குசினிக்குச் சென்று பால் டம்ளரோடு வருகிறாள்.

படுக்கையறையில் இருவரும் அருகருகே அமர்ந்திருக்கின்றனர்.

பாலில் நஞ்சு!

தலையணைக்குக் கீழ் துப்பாக்கி!

விதி ஒரு மூலையில் நின்று

(13-ம் பக்கம் பார்க்க)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன்பிடித் தொழிலில் அபாயம் அதிகம்

## கடல் கொந்தளிப்பு, புயல், மீன்களின் தாக்குதல்—

## இவற்றிலிருந்து தப்பிக்கொள்ள வேண்டும்

## நீர்கொழும்பு மீன்பிடிகாரரின் துணிவு

நீர்கொழும்பு மக்கள் பரம்பரை பரம்பரையாக மீன் பிடி தொழில் செய்பவர்கள். அவர்கள் நீர்கொழும்புப் பகுதிகளில் மட்டும் மீன் பிடிப்பவர்கள் அல்ல. காலப்போக்கிற்கும் காற்றுகளின் திசைமாறுதல்களுக்கும் இசைய, தீவின் பல்வேறு பாகங்களுக்கும் சென்று மீன்பிடிப்பது அவர்கள் வழக்கம். எனுலும் மீன் பிடிப்பதில் அவர்கள் புது முறைகளை இதுவரை கண்டதில்லை. படகுகளும் மீன்பிடி உபகரணங்களும்கூட குறிப்பிடத்தக்க ஒருவித திருத்தப்பாடுகளும் இன்றி இன்றும் பழைய முறைப்படியே காணப்படுகின்றன.

நீர்கொழும்புப் பகுதி மக்கள் மீன்பிடிக்க பிரதானமான முறைகள் சுமார் ஆறைக் கையாளுகிருர்கள்.

1. சிலர், கூரைப்பாய் விரித்து ஆழ்கடலிலே எங்கும் தங்காது பல மணிக்கணக்காக தோணியில் ஓடி மீன் பிடிக்கிருர்கள்.
2. இன்னும் சிலர் கடலில் கற்பாறைகளுள்ள இடங்களில் நங்கூரம் இட்டு மீன் பிடிக்கிருர்கள்.
3. வேறு சிலர் இயந்திரப் படகுகள் மூலம் கடலில் சென்று மீன்பிடிக்கிருர்கள்.
4. ஒரு சிலர் தெப்பங்களில் கடலுக்குப் போய் பலவிதமான வலைகளைப் போட்டு மீன் பிடிக்கிருர்கள்.
5. பலர்கூடி கடலில் கரை வலை வளைத்து மீன் பிடிப்பது ஒரு சாரார் சின் வழக்கமாக இருக்கிறது.
6. கடலேரியில் நீரோட்டங்களில் திசைக்கு ஏற்ப வலைகட்டியும், வலை வீசியும் ஒருசிலர் மீன் பிடிப்பதுண்டு.

### தோணி

பொதுவாக நாலுபேர் செல்லக்கூடிய தோணியில் இவர்கள் கடலுக்குப் போவர். தோணிகள் பெரும்பாலும் பலா, ஆச விப்பலா,மா போன்ற மரங்களால் செய்யப்பட்டிருக்கும் இத்தோணிகள் கடலில் சரிந்து விடாமல் அதற்கு இடது பக்கத்தில் நீரில் மிதக்கும் பாரமற்ற மரக்குற்றி யொன்றைப் பொருத்தியிருப்பர். இந்த மரக்குற்றியை 'கொல்லா' என்று அழைப்பர். தோணியையும் கொல்லாவையும் இணைக்கும் இரு வளைவான தடிகள் உண்டு. அதன் பெயர் வியால். இப்படியாக கொல்லாவுடன் அமைந்த தோணி பாரமற்றதாக இருக்கும். பந்தயமோடும் மோட்டார் வண்டிகளைப் போல வேகமாகவும் உறுதியாகவும் இருக்கும். கூரைப்பாயை விரித்துவிட்டால், கட்டவிழ்க்கப்பட்ட குதிரையைப்போல அலைகளுக்கு மேல் தாவிச் செல்லக் கூடியது.

### மீனுக்கு இரை

தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்று வீசும் காலங்களில் கடல் மிகக் கொந்தளிப்பாக இருக்கும். இக்காலங்களில் கடலுக்கு மீன் பிடிக்கப் போவது மிக ஆபத்து. கடற்கொந்தளிப்பும், காற்றின் வேகமும் தோணிகளைக் கடலில் கவிழ்த்து விடக்கூடியதாக இருக்கும் ... ... ... இட்டுக் தங்கவிடாது அல்லற்படுத்தும். ஆகையால் மீன்பிடிகாரர் இக்காலங்களில் கூரைப்பாய் விரித்து ஆழியை நோக்கி ஓடுவர். 'சிறு மீன்கள் பெரிய மீன்களுக்கு இரை' என்னும் பழமொழியை அனுபவ வாயிலாக அறிந்துள்ள இவர்கள் சிறுமீன்கள் அல்லது பச்சைத் தேங்காய்த் துண்டுகளைத் தூண்டிலிற் பொருத்தி கயிறுகளைக் கடலில் எறிவர். வெள்ளை நிறமும் பிரகாசமுமுள்ள சிறுமீன்களையே இரைக்காக எடுப்பர். தோணியின் ஓட்டத்தினுல் இரைமீன்கள் கயல் மீன்களைப் போல அங்கும் இங்கும் பிரள, சுறு, அரக்குளா, அஞ்சிலா போன்ற பெரிய மீன்கள் இரை மீன்களைப் பின் தொடர்ந்து துரத்திக் கௌவிக் கொள்ளுகின்றன. மீன்கள் இரையை விழுங்கிச் சொண்டதை அறிந்ததும் மீன்பிடிகாரர் உற்சாகம் பெருகிவிடும். உடனே அவர்கள் ஒன்றுகூடி அந்த மீனைப் பிடிப்பதில் ஈடுபடுவர். மீன்பிடிகாரரின் தூண்டிலில் சிக்கிய மீன் சில வேளை அவர்களால் கட்டுப்படுத்த முடியாத அளவு பெரிதாக இருக்கும். தோணியின் ஓட்டத்தைக் கூட அது பாதிக்கும். சில வேளைகளில் தோணியை மீன் இழுத்துச் செல்வதுமுண்டு.

### தாக்கும் மீன்கள்

தூண்டிலிற் சிக்கிய மீனை அதன் விருப்பப்படி ஓடவிடுவர். அது ஓடி ஓடிக் களைத்துவிடும். களைத்த பின் அதைப் பிடிப்பது இலகு. கடலில் இருந்து தோணிக்குள் மீனைத் தூக்கிப் போட்டுக் கொள்வது மிகக் கஷ்டமான செயலாகும். மூர்க்கமும் கோபாவேசமும் மரண பயமும் கொண்ட பெரிய மீன்கள் கடலில் இருந்து ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து தோணியில் உள்ள மீன்பிடிகாரரைத் தாக்கும். கொப்பறக்குளா போன்ற மீன்களின் முன் வாயில் வாள் போன்ற பற்கள் உண்டு. இம் மீன்கள் தாக்கியதால் காயப்பட்டோர் பலர். சிலர் அங்கங்களைக் கூட இழந்துள்ளனர். சுறு போன்ற மீன்கள் கடிநாய்களைவிட மோசமானவை. ஒரே பாய்ச்சலில் தசையைக் கௌவிக் கொள்ளக் கூடியன. சூறவளிக் காற்று ஒருபுறம், கொந்தளிக்கும் கடல் மறுபுறம், பயங்கர ... ... கும் இராட்சத மீன்கள் இன்னொரு புறம். இவைகளுடன் மரணப் போராடித்தான் மீன்பிடிகாரர் மீன் பிடிக்கிருர்கள். திரும்பிக் கரைக்குப் போவோமா என்ற நிச்சயம் அவர்களுக்கில்லை. தங்கள் அன்பு மனைவியரைக் காணக்கிடைக்குமா? செல்வக் குழந்தைகளைப் பார்க்கக் கிடைக்குமா? என்ற நிச்சயம் அவர்களுக்கு இல்லை.


**என். டி. பிரிஸ்**

### சுவையான கட்டுச் சோறு

தென்மேல் பருவப் பெயர்ச்சிக் காற்றை மீன்பிடிகாரர் கச்சான் காற்று என்று அழைப்பர். கச்சான் காற்றுக் காலங்களில் நீர்கொழும்பு மீன்பிடிகாரர் அரக்குளா, சுறு, கொப்பறக்குளா, போன்ற பெரிய மீன்களைப் பிடிப்பார்கள். பசிக்கும்போது தாங்கள் கொண்டு சென்ற கட்டுச் சோற்றை உண்பார்கள். கமுகுப்பட்டையில் கட்டப்பட்ட கட்டுச்சோறு தனி ருசியுடையதாக இருக்கும். வெற்றிலை பாக்கு,பீடி சுருட்டு, சிகரட் என்பன அவர்களைத் தூக்கத்தில் இருந்து காத்து ஊக்கமாக வைத்திருக்கும். ஏதோ நள்ளிரவு பன்னிரண்டு ஒரு மணியில் இருந்து பிற்பகல் இரண்டு மூன்று மணிவரை கடலில் அலைந்து மீன்களைப் பிடித்துக் கொண்டு கரைக்கு வருவார்கள்.

தாங்கள் போராடிப் பிடித்த மீன்களுடன் வெற்றி வீரராக அவர்கள் கரைக்கு வரும் காட்சி மிக அழகானது—இரசிப்பானது. கறுத்த தகைநீண்ட அங்கிகள் அணிந்து, தலையிலே பன்னிறச் செய்யப்பட்ட அகன்ற தொப்பி அணிந்து, இடுப்பிலே ஐந்து முழத்துண்டு உடுத்து, யுத்த வீரரைப் போலக் காணப்படுவர். பெரிய மீன்களைக் கரையில் போட்டு இரண்டு மூன்று பேர் ஒன்றுகக் கூடி இழுத்துக்கொண்டு வருவர். சில மீன்கள் பத்துப் பன்னிரண்டு அடிகள் வரை நீளமுடையதாகவும் ஐந்நூறு, அறுநூறு ராத்தல்வரை பாரமுடையதாகவும் ... ...

நீர்கொழும்பில் மீன் விற்கப்படும் இடத்தை 'லெலம்' என்று அழைப்பர். இங்கே மீன்கள் ஏலத்தில் விற்கப்படும். இந்த லெலம் கத்தோலிக்க கோவிற் சொத்தாகக் கணிக்கப்படுகிறது. பழைய சம்பிரதாயங்களுக்கும், கத்தோலிக்க மதத்தின் அடிப்படைக் கொள்கைகட்கும் விசேஷ கருசனையும் பக்தியும் நீர்கொழும்பு மீன்பிடிகாரர் காட்டுகின்றுர்கள் கரைநாடுகளில் கத்தோலிக்க சமயத்தைப் பரப்பிய போர்த்துக்கேசர்; கத்தோலிக்க தேவாலயங்களைக் கட்டவும் கட்டி எழுப்பவும் பாடசாலை கட்டவும் கோயில் செலவுகட்கும் மீன்பிடிகாரரிடம் இருந்து பணம் வசூலிக்க ஒரு சிறந்த திட்டத்தை வகுத்தனர். அதாவது மீன்பிடிகாரர் தாங்கள் பிடிக்கும் மீன்களைப் பொதுவான ஒரு ஏலத்தில் விற்க உதவி செய்து பத்திலொன்றைக் கோயிலுக்குக் காணிக்கையாக அவ்விடத்திலேயே அறவிடுவது தான் அச்சிறந்த திட்டமாகும். நீர்கொழும்புப் பகுதி மீன்பிடி மக்கள் இத்திட்டத்தை ஆதரித்தனர். அதன்படி அன்று தொட்டு இன்றுவரை செய்து வருகின்றனர்.



ஆழ்கடல் சென்று திரும்பிய அந்தத் தோணிக்குள் நீர் சேர்ந்துவிடவே, சிறுவர்கள் அதை அள்ளி வெளியில் ஊற்றுகிறுர்கள். (வலம்) மீன்பிடிக்கச் சென்று திரும்பிய தோணி மின் பாய்விரித்தபடியே அது கரையில் மணல்படுக்கைக்குத் தள்ளி வரப்படுகிறது.

### தரகருக்கே இலாபம்

ஏலம் கூறும் உரிமை வருடாவருடம் கத்தோலிக்க கோவிலில் தனிப்பட்டவர்கட்கு விற்கப்படும். இவ்வருடம் அவ்வுரிமை அறுபதாயிரம் ரூபாவிற்கு விற்கப்பட்டுள்ளது. ஏலம் கூறும் உரிமையைப் பெற்றவர் மீன்பிடிகாரரிடம் இருந்து பத்திலொன்று வீதம் சேகரித்துக் கோயிற் பணத்தைச் செலுத்த வேண்டும். வருடமுடிவில் இலாபமோ நட்டமோ அவர் கையேற்க வேண்டியவராக இருக்கிருர். இதுவரை எவரும் நட்டப்பட்டதாகத் தெரியவில்லை. இந்த ஒப்பந்தப்படி மீன்பிடிகாரருக்குத் தாங்கள் பிடிக்கும் மீன்களை சுயேச்சையாக விற்கஉரிமை இல்லை. ஏலத்தில் மட்டுமே விற்க வேண்டும். ஏல விற்பனை முறையால் மீன்பிடிகாரர்களைவிட தரகர்களும் மீன் வியாபாரிகளுமே பெரும் இலாபமடைகின்றனர். மச்சம் பிடிக்காமலே மிச்சம் பிடிக்கும் பாக்கியத்தைப் பெறுகிருர்கள் அவர்கள். தரகர்களிடமும் மொத்த வியாபாரிகளிடமும் சிறு மீன் வியாபாரிகள் மீன்களை வாங்கிக்கொண்டு சைக்கிள்களிலோ கூடைகளிலோ நகரின் மீன் கடைகட்கும், நகரின் ஏனைய பாகங்கட்கும் கொண்டு சென்று இலாபத்துடன் விற்று சீவனோபாயம் நடத்துகின்றனர். தாங்கள் பிடித்த மீன்களைக்கொண்டு இன்னும் பல பேர் சீவனோபாயம் நடத்த தாங்கள் உதவி செய்வதாகப் பெருமைப்பட்டுக்கொள்ளும் நீர்கொழும்பு மீன்பிடிகாரரின் பெருந்தன்மையான குணம் என்றும் மெச்சத்தக்கது.

(தொடரும்)

(உபயம்: இலங்கை வானெலி)


★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா ★ லதா

கண்ணைக் கவரும் வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும் வடிவங்களிலும் சிறந்த பாவனையிலும் உறுதியான சாயத்திலும்

முன்னணி வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுன் பாவாடை கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது!

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம் கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்,

26, கெய்ஸர் வீதி, கொழும்பு.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் பிறநாட்டு மொழிகளையும் கற்றிருந்தனர்

## புவியியல், கணிதம் முதலானவற்றில் கைதேர்ந்து விளங்கினர்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

(கி. பி. 81) தலமியும் (கி. பி. 180) தென்னிந்தியாவின் சிறந்த துறைகளைப்பற்றிய விவரங்களைத் தந்து அத்துறைகள் மிகப் பழமையுடையன என்று கூறியுள்ளர்.

இத்தகைய பிறநாட்டாரின் குறிப்புக்களை உடத்தமிழரின் பழைய வரலாற்றையும் அவர் தம் நாகரிகத்தையும் நாம் அறிந்துகொள்ளுதற்கு இப்பொழுது சங்க இலக்கியங்களே உதவுகின்றன.

### மூன்று சங்கங்கள்

தமிழிலக்கண இலக்கியங்களும், பரம்பரை வரலாறுகளும் ஏறக்குறையக் கிறிஸ்துவுக்குமுன் மூன்று சங்கங்கள் ஒன்றையடுத்தொன்றாக நிலைத்து விளங்கின என்று உரைக்கின்றன. இவற்றைப் பற்றிய வரலாறுகளை இறையனார் அகப்பொருளுரையிலே காணலாம். இவ்வுரை முதற் சங்கம் கிறித்துவுக்கு பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியதெனக் கூறுகிறது. இதன் ஆண்டுக் கணக்குகளையும் பிற விவரங்களையும் பலர் ஏற்றுக்கொள்ளத் தயங்குகின்றனர். எனினும், இச்சங்கங்கள் கி. பி. மூன்றும் நூற்றாண்டுக்கு முன் இருந்தன என்பதை மறுத்தல் முடியாது. இச்சங்கங்களைப் பற்றி இலக்கிய இலக்கண நூல்களிலும், புராணங்களிலும் கல்வெட்டிலும் காணப்படும் செய்திகளை இலகுவில் ஒதுக்கித்தள்ளல் ஒண்ணாது.

### பயிர்ச் செய்கையும் இரும்பு கைத்தொழிலும்

தக்காணத்தின் பழைய வரலாறு இன்னும் நன்கு ஆராயப்படவில்லை. தென்னிந்தியாவிலே புதைபொருள் ஆராய்ச்சி தொடக்க நிலையிலேதான் இருக்கிறது. புதைபொருள் ஆராய்ச்சி வளர்ச்சியடைந்தால் இச்சங்கங்களின் வரலாற்றை மட்டும் அன்றிப் பழந்தமிழரின் நாகரிகத்தையும் நன்கு அறிதற்கு ஏற்ற புதைபொருள்கள் பல கிடைத்தல்கூடும். இதற்குத் திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஆதிச்ச நல்லூரில் எடுக்கப்பட்ட பிலைத்தாழிகளையும், இரும்புக் கருவிகளையும் உதாரணமாகக் கூறலாம். கி. மு. 1200 அளவில் ஆதிச்ச நல்லூரிலே தமிழர் நெல்லைப் பயிரிட்டனர் அங்கேயே இரும்புக் கைத்தொழிலும் தோன்றிற்று.

### அரசர் ஆதரவில் புலவர் சேவை

கி. மு. 4000 ஆண்டளவிலேயே சால்தியர்போன்ற பழங்குடி மக்களுடனும் சாலமோன்போன்ற அரசர்களுடனும் வியாபாரஞ் செய்த தமிழர் சிறந்த கலவியும் உயர்ந்த நாகரிகமும் உடையவர்களாகவே இருந்திருப்பர். திசையறி கருவி கண்டுபிடிக்கப்படாத பழங்காலத்திலே திரைகடலோடி வாணிகஞ் செய்த தமிழர் புவியியல், கணிதம் முதலியவற்றை நன்கு அறிந்தவர்களாகவும் பிறநாட்டு மக்களின் மொழிகளைப் பயின்றவர்களாயும் இருந்திருப்பர்.

முன்னர்க் குறிப்பிட்ட தமிழ் சங்கங்களைத் தமிழ் அரசர்களே நடத்தி வந்தனர். நன்முறையில் நிறுவப்பட்ட அரசாங்கம் கல்வியை வளர்ப்பதற்குப் புலவர்களுக்குப் பொருளுதவி செய்து அவர்களை ஆதரிப்பது விந்தையான செயலன்று. அரசர்களின் ஆதரவினால் புலவர்கள் தம்வாழ்நாளை இலக்கியத்தைப் படைத்தலிலே கழித்தனர்.

(தொடரும்)

# வத்துகாமம் வட்டார இலக்கிய விழா

வத்துகாமம் வட்டார இலக்கிய விழா கடடுகாஸ் தோட்டை அர்ச் அந்தோனியார் கல்லூரி மண்டபத்தில் நடந்த 14-9-60-ல வண. தனிநாயகம் அடிகளார் தலைமையில் ஆரம்பமானது.

வட்டார வித்தியாதரிசி திரு. அ. சந்திரசேகரம், தனிநாயகம் அடிகளாரின் பெயர்ச் சிறப்பையும், அவர் பிறநாடுகளுக்குத் தமிழ்த்தூது சென்று புகழ் ஈட்டியமையையும், ஆங்கு தமிழ்ப் பெருமையை நிலை நாட்டியமையையும் பலபடப் பாராட்டியதோடு, "என்ன மாதவஞ் செய்தது எம் சிறு குடில" என்ற விதுரர் கூற்றை எடுத்துக் கூறி அடிகளாரை வரவேற்றுப் பேசினார்.

அடிகளார் தமது முன்னுரையில், இலக்கியத்தில் ஈடுபடுவதால் வாழ்வு சீரடைகிறது என்றும், பிற நாடுகளிலே முதியோர் கல்வி நிலையங்கள் எவ்வாறு சிறப்பாக இயங்குகின்றன என்றும், அந்நாட்டுப் பல்கலைக் கழகங்களிலே, தமிழ் மொழியையும், தமிழர் கலாசாரத்தையும் அறிய ஆவல் கொண்டு தமிழை விரும்பிப் படிக்கிறார்கள் என்றும் விரிவாகக் கூறினார்.

'ரூடின்' என்னும் பெயர் கொண்ட ருஷிய அறிஞர் தம்முடைய பெயரைச் செம்பியன் என்ற செந்தமிழாக மாற்றி கையெழுத்திலே, பிழையின்றி அழகாக, தமிழிலே எழுதிய நீண்ட கடிதத்தை அடிகளார் வாசித்துக் காட்டிச் சபையாரை மகிழ்வித்தார்.

மேலும் அடிகளார் பேசுகையில், 'அந்நிய மொழியினர் மூன்று ஆண்டிலே பிழையறப் படிக்கிறார்கள் என்றால் தமிழ் மாணவர்கள் பத்து ஆண்டிலே எவ்வளவு படித்திருக்கலாம்? முப்பது ஆண்டிலே ஆசிரியர்கள் எவ்வளவு முன்னேறியிருக்கலாம்' என்றும், படிப்பதற்கு வயதெல்லை இல்லை.

"யாதானும் நாடாமால்
ஊராமால் என் ஒருவன்
சாந்துணையும் கல்லாத
வாறு"

என்று வள்ளுவர் கூறியிருப்பதை நாம்வாழ்வில் கடைப்பிடித்துணர்ந்து நடக்க வேண்டும் என்றும் விளக்கினார்.

அடுத்து, "கவிஞன் குரல்" எனனும் பொருள் பற்றிப் பேசிய நவாலியூர் திரு. சோ. நடராசா நல்ல உள்ளம் நல்ல காவியத்தை வெளிப்படுத்துகிறது. பசு பால் தருகிறது; ஆனால் பாம்பு விஷத்தைக் கக்குகிறது; உள்ளத்தின் உணர்ச்சி வெளியீடுதான் கவிதை. அறிவினால் உண்டாகிய கர்வம கவிதை வெளியீட்டினால் சாந்தம் அடைகிறது. என்று நயம்படப் பேசினார்.

நாவலப்பிட்டி கதிரேசன் கல்லூரி அதிபர் திரு. சபா ஆனந்தர் பேசும்போது சிலப்பதிகாரத்தில் புகாரக் காண்டத்தே அடக்க ஒடுக்கமாக கற்புக் கடம் [illegible] பெண்ணாகக் காட்டப்பட்ட கண்ணகி மதுரைக் காண்டத்திலே கற்பின் தீச் சுவாலையாகக் காட்டப்படுவதைப் பலமேற்கோள்களுடன் காட்டி இலக்கிய மணம் பரப்பினார்.

கடைசியாகக் கட்டுரைப் போட்டியில் பரிசு பெற்ற கீழ்கண்ட மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்பட்டன:—

கனிஷ்ட பிரிவு:

முதலாவது பரிசு: வத்துகாமம் கிறிஸ்தவ தேவாலயக் கல்லூரி.

இரண்டாவது பரிசு: கெங்காலை அரசினர் தமிழ்ப் பாடசாலை.

மூன்றாவது பரிசு: சியம்பளகஸ்தன அரசினர் முஸ்லிம் பாடசாலை.

சிரேஷ்ட பிரிவு:

முதலாவது பரிசு: உடத்தலவின்ன அரசினர் முஸ்லிம் பெண் பாடசாலை

இரண்டாவது பரிசு: உடத்தலவின்ன அரசினர் முஸ்லிம் ஆண் பாடசாலை

மூன்றாவது பரிசு: மகியாவ [illegible] பாடசாலை.

ஆரோக்கியாமிருதலேஹம்

நேர்வாளம்சேராத சுகபேதி

[illegible]

ஒ 1 ரூ 5-50 ½ ரூ 3-00 ¼ ரூ 1-00

S. N. GURU MEDICAL HALL
50, NEW CHETTY STREET COLOMBO 13

ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினால் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
த. பெட்டி: 649,
கொழும்பு.



நடன ஆசிரியர் திரு சுப்பையாவின் மாணவிகள் வேலணையில் சிவ-பார்வதி நடனமாடித் திவுப்பகுதி மக்களை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர்.

# தமிழ்ப் பல்கலைக் கழகம்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

பலர் வந்துசேர விரும்புகிறார்கள்.

6. பல்கலைக் கழகம் இனி மேல்தான் கட்டியெழுப்பி ஆகவேண்டும். இதற்குப் பணம் தேவை. இதற்கான திட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

7. யாழ்ப்பாணத்தில் வைத்தியக் கல்லூரி நிறுவுவது சம்பந்தமாக சுகாதார மந்திரிக்கு ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது.

### நாளை

இனிச் செய்ய வேண்டியவை:—

1. மக்களிடமிருந்து பத்து லட்சம் ரூபா வரை சேர்க்க வேண்டும்.
2. யாழ்ப்பாணத்தில் வைத்தியக் கல்லூரி நிறுவும்படி அரசாங்கத்தை வற்புறுத்த வேண்டும்.
3. மேலும் பல பிரதேச குழுக்கள் அமைக்க வேண்டும். தற்போது உள்ளவைக்கு இன்னும் "உயிர்" கொடுத்து ஊக்க வேண்டும்.
4. பல உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்.

அதற்கான இயக்கம் வலுவடையச் செய்ய வேண்டும் நாங்கள் முயற்சிக்க வேண்டும் அரசாங்கம் நிச்சயமாக உதவி செய்யும் என்றே நம்புகிறேன். நாங்கள் இருபத்தைந்து, முப்பது லட்சம் பேர் இந்த நாட்டில் இருக்கிறோம் எங்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் இருந்தே தீரவேண்டும்.

### வேண்டுகோள்

எல்லோருக்கும் ஒரு வேண்டுகோள் விடுக்க விரும்புகிறேன். "ஒவ்வொருவரும் நெஞ்சில் கை வைத்துப் பாருங்கள். உங்கள் பங்கை நீங்கள் செலுத்திவிட்டீர்களா? கூட்டங்கள் கூடுவதால், தீர்மானங்கள் நிறைவேற்றுவதால் தூது கோஷ்டிகளை அனுப்புவதால், மட்டும் பயனில்லை. வேண்டியது செயல்; சொல் அல்ல; பேச்சுக்கள் அல்ல; பயனற்ற விமர்சனங்கள் அல்ல. நாம் எல்லோரும் தமிழ்ப் பல்கலைக் கழக சேவைக்கு நம்மை அர்ப்பணித்து உளமார்ந்த குறிக்கோளை நோக்கி உழைப்போம்.

இந்தப் பல்கலைக் கழகத்தில் குறுகிய மனப்பான்மைக்கு இடமிராது. தமிழ் பேசும் மக்களை இது ஒன்றுபடுத்தி விட்டது. எல்லா வகுப்புகளையும் சேர்ந்த தமிழ் பேசும் மக்கள் நம்முடன் இருப்பது இயக்கத்தில் பிணிப்பை உண்டு பண்ணுவதோடு அதற்கு பலமும் அளிக்கிறது.

### பல்கலைக் கழகம் எப்போது கிடைக்கும்

தமிழ் பேசும் மக்கள் உறுதி சாண்பிப்பார்களேயானால், இங்கு விரைவிலேயே அவர்கள் தமது பல்கலைக் கழகத்தை காணலாம். பிரிட்டிஷார் இலங்கையை ஆண்டபோது சேர் பொன். அருணாசலம் இலங்கைப் பல்கலைக் கழகத்தை ஸ்தாபித்தார். அதற்கு அவர் மக்களிடமிருந்து நிதி சேர்த்தார். அகில இலங்கை அடிப்படையில் நடந்த முயற்சி அது. அப்படி இருந்தும் தேர்ஸ்ட்டன் ரோட்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தைக் காண 10 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியிருந்தது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தைக் காண எத்தனை ஆண்டுகள் செல்லும் என்பதற்கு விடை தமிழ் பேசும் மக்களிடமே உண்டு. 10 மாதங்களில் வேண்டுமானாலும் அவர்கள் காணலாம்.

### அசைக்க முடியாத நம்பிக்கை

எங்கள் நோக்கம் நல்லது; நீதியானது. சரித்திரத்தைச் செய்யவும், மொழி, பண்பாடு, மேல்படிப்பு சம்பந்தமாகத் தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் தீங்குகளை களையவும் நமக்கு நம்பிக்கை அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த நாட்டில் உள்ள இரண்டு பெரும் இன மக்களினதும் சரித்திரம் திரும்பும் போது, தமிழ்ப் பல்கலைக் கழகம் தலை நீட்டி நின்று தமிழ் பேசும் மக்கள் பெருமைக்கு வழி தேடுவது மட்டுமல்லாமல் இந்த நாட்டின் புகழுக்கும் உரியதாக அது விளங்கும் அந்த நன்னாள் வரத்தான்போகிறது. அதைக் காண நம்மில் பலர் உயிர் வாழவே செய்வோம். இது என் அசைக்க முடியாத நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தளாய் சீனி ஆலை

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறுவுவதற்கு அகில உலக டெண்டர்ப் பத்திரங்கள் கோரப்பட்டன. மிகக் குறைந்த தொகை கோரிய செக்கோஸ்லோவாக்கிய (Techno-Export) கம்பனி ஆலையை நிறுவியது. போக்குவரத்துச் சாதனங்கள், குடிநீர், வைத்திய உதவி ஆகிய வசதிகள் குறைவான கிராமப்புறங்களில் இத்தகைய ஒரு ஆலையை நிறுவுவதில் உள்ள சிரமங்களை வர்ணிக்க முடியாது. இருந்தும் குறித்தகால எல்லைக்குள் ஆலை நிறுவப்பட்டு விட்டது.

## வருடத்தில் 50 ஆயிரம் தொன் சீனி

கந்தளாய் ஆலையிலிருந்து வருடம் 20,000 தொன் சீனி உற்பத்தி செய்யப்படும். ஆனால் தேவைக்கேற்ற அளவில் கரும்புப் பயிர் விளைவிக்காதபடியால் ஆரம்பத்தில் உற்பத்தி மிகக் குறைவாகவே இருக்கும். உற்பத்தி முழு அளவில் நிகழும்போது கந்தளாயிலிருந்து கிடைக்கும் 20,000 தொன்னை விட, கல்லோயாவில் நிறுவப்படும் வேறு ஆலை ஒன்றிலிருந்தும் 30,000 தொன் சீனி கிடைக்கும். இந்த 50,000 தொன் உற்பத்தி 1962 வரையில் தான் பூரணமாகும்.

இலங்கையின் ஒரு வருட சீனி இறக்குமதி இன்று சுமார் 1,80,000 தொன். இதற்காக வெளிநாடு அனுப்பப்படும் பணம் வருடம் ரூபா 10 கோடி. உள்ளூர் உற்பத்தியால் இத்தொகையில் ரூபா 3 கோடி மீதமாகிறது. அவ்வளவு தான்!

22 மணித்தியால வீதம் நாளொன்றுக்கு இங்குள்ள யந்திரங்கள் 1200 — 1500 தொன் கரும்பைச் சாறுக்கும். வருடத்தில் 120 நாட்களுக்கே வேலை இருக்கும்.

## உப-பொருள் உற்பத்தி

எந்தத் தொழிற்சாலையிலும் பிரதம உற்பத்திப் பொருளுடன், உப-பண்டங்களும் உற்பத்தியாகுவது வழக்கம். அப்படியானால் தான் இலாபகரமாகத் தொழிற்சாலையை நடத்தலாம. கந்தளாய்ச் சீனி ஆலையிலிருந்து குறிப்பிடத்தக்க உப-பொருட்களைப் பெற முடியும். இன்றுள்ள திட்டத்தின்படி கரும்புச்சக்கையிலிருந்து புதினப் பத்திரிகைத்தாள், தும்புப்பலகை, எழுதும் கடதாசி ஆகியவற்றை உற்பத்தியாக்கலாம். ஒவ்வொரு 25,000 தொன் சக்கையிலிருந்து 12,000 தொன் பதினப்பத்திரிகைத் தாளும், ஒவ்வொரு 15,000 தொன் சக்கையிலிருந்து 9,000 தொன் தும்புப் பலகையும் ஒவ்வொரு 30,000 தொன் சக்கையிலிருந்து 10,000 தொன் எழுதும் கடதாசியும் உற்பத்தியாகும்.

## பாகிலிருக்கும் உப-பொருட்கள்

இதைவிட சீனிக் கட்டி பட்டபின் வீணாகும் ஒவ்வொரு 5000 தொன் பாகிலிருந்து 3 லட்சம் கலன் சக்தி மதுச்சாரம் (Power Alcohol) பெறலாம். இந்த அளவிலிருந்து 1200 தொன் அசெற்றிக் அசிட், 3 லட்சம் கலன் ஸ்பிரிற் (De-natured Spirits) வகைகள், 60 தொன் உலவுக் காடி, சுமார் 2 கோடி யார் செயற்கைப் பட்டுநூல் ஆகிய உப பொருட்களையும உற்பத்தியாக்கலாம.

இந்த உப பொருள் உற்பத்தியால் வெளிநாடுகளுக்கு நாம் அனுப்பும பணத்தில் ரூபா 6½ கோடி நாட்டிலேயே தங்கிவிடும்.

## தமிழ் பேசும் வாலிபர்களுக்கு எச்சரிக்கை

இவ்வண்ணமாகக் குடியேற்றங்களும் கைத்தொழில் நிலையங்களும் ஆங்காங்கே தோன்றும் வேளையில் இனத்து மக்கள் கைத்தொழிற் பயிற்சியிலும் விவசாயத்திலும் முன்னேற்றமும் அனுபவமும் பெற்றுக்கொண்டு போகும் பொழுது காற்சட்டை உத்தியோகங்களைக் காத்திருந்து தமிழ் பேசும் வாலிபர்கள் முன்னேற்றப் பந்தயத்தில் தோல்வியுறப்போகிறார்கள். சிவில் சேவை உபாயத்திற்குரிய வழிகளை அடைத்தும் அடைபட்டுப் போகுமுன் தமிழ் பேசும் இளைஞர்கள், மறைந்த தலைவர் கடந்தவாரக் கட்டுரையில் கூறியது போல "பல்வேறு துறைகளிலும் துணிந்து இறங்கும் போராட்ட மனப்பான்மை"யை வளர்த்துப் புதுப்புதுத் துறைகளில் ஆக்கங்காண வேண்டும். அத்துடன் கை தேர்ந்த விவசாயிகள் கிழக்கு, வடக்கு மாகாணங்களிலிருக்கும் ஆயிரமாயிரக் கணக்கான தரிசு நிலங்களில் குடியேறித் தமிழ்ப் பிரதேசத்தின் செல்வத்தைப் பெருக்க வேண்டும்.

## சந்தர்ப்பங்களைப் பயன்படுத்துக

"கைத்தொழில் அபிவிருத்தியால் தேவையான அளவு வேலை வாய்ப்புகள் கிடைக்கப்போவதில்லை. குடியேற்றத் திட்டங்களின் மூலந்தான் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க முடியும்." இவ்வாறு இவ்வாரம் காணி மந்திரி கௌரவ ஸீ. பி. டி. சில்வா கூறியதை ஆழ்ந்து கருத்தில் கொள்ள வேண்டும். உடனடியாகக் கந்தளாயில் கரும்பு அறுவடை செய்வதற்கு ஏராளமான ஆட்கள் தேவை. போதிய ஆட்கள் முன் வராததால் இராணுவம் இவ்வேலைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

தமிழ்ப் பிரதேசத்திலே, கிழக்கு மாகாணத்திலுள்ள இவ்வாய்ப்பைப் பயன்படுத்தத் தமிழ் பேசும் வாலிபர்கள் துணிந்து முன்வருவார்களா?

—"செக்கு"

# என் தம்பி...

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

மேலே காகிதம் ஒட்டிக் கைத்தடி ஆக்கிக் கொண்டோம். ஏதோ பெரிய சபையில் நடிக்கப் போகிறவர் போல ஒத்திகைகள் மட்டும் பிரமாதம். நன்றாகப் பேசி நடிப்பவருக்குப் பரிசு கிடைக்குமே! நடிப்புப் போட்டி நாளும் வந்தது. எதிர்பாராதபடி ஏதோ காரியார்த்தமாக வந்த உள்ளூர் ஆங்கில ஆசிரியர்கள் இருவர் மத்தியஸ்தம் வகிக்க மகிழ்ச்சியோடு ஒப்பினர். அவர்கள் வந்த கருமம் முடிந்ததும் நாடகம் ஆரம்பமானது; நடித்தோம். இருவருமே நன்றாய் நடித்ததாகத் தீர்ப்புக் கூறினார்கள் மத்தியஸ்தர்கள். அப்படியானால் பரிசு? "இருவருக்குமேதான்" என்றார் தந்தையார். "இரண்டாகப் பிரிக்கக் கூடிய பொருள் ஆனால் பிரித்துக் கொள்வோம். பந்து போன்ற பொருளானால் மாறி மாறி விளையாடுவோம்" என்று பேசிக் கொண்டோம். பரிசு தந்தார் தந்தையார். என்ன விந்தை! இருவருக்கும் வெவ்வேறு பொருள் பரிசு கிடைத்தது. வாங்கும்

# விதியின் சிரிப்பு!

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

அதைப்பார்த்து நமண்டுச் சிரிப்பு சிரிக்கிறது.

அவன் பாலை நீட்டுகிறான். இடக்கையால் அதை வாங்கியவன், வலக்கையால் திடீரென துப்பாக்கியை உருவி அவன் நெஞ்சுக்கு நேரே நீட்டுகிறான்!

அவன் 'ஆ' வென்று வாயைப் பிளக்கிறான்!

அடுத்தகணம் எங்கும் 'பட்' டென்று பேயிருட்டு! ஆமாம், தியேட்டருக்குள் தான்! நாசமாய்ப் போக! நல்ல கட்டம் ஓடிக்கொண்டிருக்கும் போதுதான் மின்சாரம் திடீர் என்று நின்று விட்டது.

பாருங்கள், இந்த விதி நம்ம சினிமா கதையில் கூட மண்ணை வாரி விட்டுச் சிரிக்கிறதே!

போதே இருவருமே நன்றாக உச்சரித்துப் பிழையறப் பேசி நடிப்போம் என்று தெரிந்து கொண்டா வாங்கினார்? இருவரும் உற்சாகத்துடன் மேலும் படிக்க வழி எம் முன்னே நீண்டு கிடந்தது.

(தொடரும்)


மகத்தான தீபாவளி வெளியீடு!

அக்டோபர் 14-ம் தேதி வெள்ளி முதல் வெற்றிகரமான ஆரம்பம்!

எல்பின்ஸ்டன் [கொழும்பு] ● றெக்ஸி [வெள்ளவத்தை] ● வின்ஸர் [யாழ்ப்பாணம்]

மற்றும் 5 திரைகளில்



நடிகர் திலகம் சிவாஜி கணேசன்—சௌகார் ஜானகி—ரங்காராவ்—கண்ணாம்பா—டி. ஆர். ராமச்சந்திரன்—இ. வி. சரோஜா

முதலியோர் நடித்த

படிக்காத மேதை

டைரக்‌ஷன்: ஏ. பீம்சிங்

கதை வசனம்: ஜி. கோபாலகிருஷ்ணன்

பாடல்கள்: கவிஞர் கண்ணதாசன்

உள்ளத்தை உருக்கும் கதை, உணர்ச்சி மயமான நடிப்பு, காதுக்கினிய பாட்டுகள். இவ்வளவுக்கும் சிகரமாக சிவாஜியின் நடிப்பு. இத்தனை சிறப்புகளும் நிறைந்த இவ்வாண்டின் சிறந்த படம்.

ஒவ்வொருவரும் குடும்பத்துடன் அவசியம் பார்த்து மகிழவேண்டிய திரை ஓவியம்.



வெற்றிகரமான 6-வது வாரம்!

சென்ட்ரல் (கொழும்பு) ஓடியன் (கல்கிசை) ராணி (யாழ்ப்பாணம்) ராஜேஸ்வரா (மட்டக்களப்பு) ஜோதி (திருகோணமலை)



இவ்வாண்டின் ஈடு இணையற்ற முழு நீள நகைச் சுவைப் படம்.

விலா குலுங்கக் குலுங்கச் சிரிப்பூட்டிக் களிப்பூட்டும் சிங்காரச் சித்திரம்.

அஞ்சலி தேவியின் அற்புதமான நடனங்களும், காதுக்கினிய பாடல்களும் நிறைந்த படம்.

நீங்கள் ஒவ்வொருவரும் பார்த்து மகிழ வேண்டிய படம்.

டி. ஆர். ராமச்சந்திரன்—அஞ்சலிதேவி
தங்கவேலு—ஏ. கருணாநிதி
கே. சாரங்கபாணி—பிரண்ட் ராமசாமி
சட்டாம்பிள்ளை வெங்கட்ராமன்,
பக்கிரிசாமி—டி. பி. முத்துலட்சுமி
எம். சரோஜா
முதலியோர் நடித்த

அஞ்சலி பிக்சர்ஸ்

அடுத்த வீட்டுப் பெண்

இசை—தயாரிப்பு: ஆதிநாராயணராவ் ★ டைரக்‌ஷன்: வேதாந்தம் ராகவையா

பின்னணி—
பி. ஸ்ரீனிவாஸ், சீர்காழி கோவிந்தராஜன், ராகவன், எஸ். சி. கிருஷ்ணன், பி. சுசீலா, ஜானகி, டி. வி. இரத்தினம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலக்கிய இன்பம்

இலக்கியமும் என்பது நுண் கலைகளில் ஒன்றாகும். மிகச் சுருங்கச் சொல்லின் இலக்கியம் என்பது அழகு உணர்ச்சி ததும்ப எழுதினவற்றையே குறிக்கும் இலக்கியத்தைப் படிக்கும் பொழுது அதன் சொல்லழகிலும் பொருளழகிலும் மனத்தைப் பறிகொடுத்து விடுகிறோம். கதைப் போக்கின் ஒற்றுமைப் பாட்டில் நம்மனத்தை ஈடுபடுத்தினால்தான் உண்மையான இன்பத்தை அனுபவிக்கலாம். இன்ப துன்பங்கள் அனுபவிக்கின்ற நம்மைச் சிறிது காலமேனும் மகிழ்ந்து வாழச் செய்வது தான் இலக்கியத்தின் சீரிய மாண்பாகும்.

இலக்கியம் கைவினைக்கிற்குச் சமானமானது. இலக்கியம் மக்களின் வெவ்வேறு பண்பாட்டையும், அன்றாடன்று நடக்கும் காரியங்களையும் விளக்கிக் காட்டுகின்றது. இலக்கியம் என்ற சோலை இலாவிடின் நாம் ஒரு பொழுதும் நம் மூதாதையோர் பண்பாடுகளைப் பற்றி அறியவும் முடியாது. இலக்கியம் என்ற கருவியினாலேயே நாம் முன்னையோரின் சிந்தனைகளை அறிந்து, புகழ்ந்து மனமார இன்புறுகிறோம். நடந்தது மெய்யோ பொய்யோ என்று ஆராய்வது இலக்கியம் அல்ல. எப்படி நடந்திருந்தால் நன்றாகுமென அறிவுறுத்துவதே இலக்கியமாகும் மனிதன் துன்பத்தை மறந்து இன்பத்தை அனுபவிக்கும் பொருட்டே கவிதை ஏற்பட்டது. வாசகர்கள் ஒவ்வொருவரும் அவர்களது இதய உலகிலே இலக்கியப் பூஞ்சோலை ஒன்று நிறுவி அதன் கண்ணே ஒரு கலைக் கோயிலை அழகுற நிறுவவேண்டும். அப்பொழுதுதான் நாம் இலக்கியத்தைப் பூரணமாக அனுபவித்தற்குச் சிறந்த சான்றாகும்.

கவிஞன் ஒரு கற்பனை எழுத்தாளனே உள்ளதை உள்ளவாறு சொன்னால் அதில் இருக்கும் பொருளைச் சுவைக்க முடியாது மிதமிஞ்சிய கற்பனையானாலும் பெரும் சுவை தராது. ஆகவே ஓரளவிற்கு அனுபவத்தோடொட்டிய கற்பனையும் தேவை இன்ப நுகர்ச்சிக்கு ஆதாரமாய் இருப்பது தன்மறதியாகும். தன்னை மறந்தாற்தான் இன்பத்தில் ஆழ்ந்து. அதனை நன்கு அனுபவிக்கலாம். ஆதலால் இலக்கிய ஆசிரியன் வாசகர்களிடத்தில் தன் மறதியை யுண்டாக்க வேண்டும். புலவன் கற்பனை செய்யும்பொழுது இயற்கையுடன் ஈடுபடக் கூடியதாக செய்வான்.

இலக்கியத்தை ஓசையுடனேயே பூரணமாக அனுபவிக்கலாம். தம் முன்னோர்கள் பூர்வகாலம் தொட்டே இசை முதலிய கலைகளைப் போற்றியவர்கள். இலக்கிய செய்யுள்களை ஓசையுடன் நாம் படித்து, அவ்வோசையில் நாமும் லயித்து கேட்போரையும் லயிக்கச் செய்ய வேண்டும். பண்டைத் தமிழ் இலக்கியங்கள் செய்யுள் வடிவிலே காணப்படுகின்றன. செய்யுளுக்குத்தான் உணர்ச்சி உண்டாகும் வன்மை உண்டு என்பதை மூதாதையர் அறிந்திருந்தனர் போலும். செய்யுள்களை வாசிப்பதனால் இன்பம் உண்டாகாது அதற்குப் புத்துயிர் ஊட்டி ஓசையுடன் படிப்பதே இன்புற வேண்டும். இப்படிச் செய்வோமேயாயின், இப்போலி உலகத்தை மறந்து இலக்கிய உலகத்தில் இன்புறறிருக்கலாம்.

இலக்கியத்தை பூரணமாக அனுபவிக்க வேண்டுமானால், மற்றும் இலக்கிய ரசிகர்களோடு சேர்ந்து தான் அனுபவிக்கவேண்டும். கள்குடியர் எங்ஙனம் கள் கூடிக் குடித்துக் குதித்துக் களிக்கிறார்களோ அதைப் போல இலக்கிய குடிகாரனும், இலக்கியக் கள்ளைப் பலருடன் சேர்ந்தே பருக வேண்டும். அப்பொழுது தான் நாம் அதில் ஒரு தனி இன்பத்தைக்காணலாம். எல்லாப் பாடங்களிலும் இலக்கியமே சிறந்தது. இலக்கியத்தை ரசிக்காதவரின் உள்ளம் அசுத்தமாக இருக்கும்.

இலக்கியங்களைக் கற்பதிலே நமக்கு ஒரு தனி இன்பம் விளைகின்றது. நாம் ஒரு புது உலகிலே புகுகின்றோம் இதனால் நாம் இன்பத்தை மட்டும் அனுபவிப்பதன்றி வேறொரு முக்கியமான பயனையும் அடைகின்றோம். மனித இயல்பை உள்ளவாறு உணாவதுதான் அப்பயன். மனிதனது உணர்ச்சிகளையும் லட்சியத்தையும் உணாவதற்கு இலக்கியத்தைக் கற்க வேண்டும்.

இலக்கியப் பயிற்சியுள்ளவர்கள் பெரும் சோம்பேறிகள் என்னும் தப்பான எண்ணம் மக்களிடையே இருந்து வருகிறது. உலக சரித்திரத்தை சிறிது கூர்ந்து நோக்கின் சிறந்த இலக்கியப் பயிற்சி உடையாரே பெரிய பதவிகளை வகித்துள்ளார் என்பது நன்கு புலனாகும். நம் நாட்டில் சிறந்த கல்வியாளர்களாகிய, மாணிக்கவாசகரும், சேக்கிழாரும் மந்திரிமாரல்லவரோ? ஆங்கில நாட்டு சிறந்த கல்வியாளராகிய மில்டன் மார்லி முதலியோரும் அரசாங்கத்தல் பெரும் பதவிகளை வகித்தவரல்லரோ? ஆதலின் இலக்கியம் கல்வி உலகிலிலும், மக்கட்கும் பெரும தன்மையை அளிக்கின்றது.

இலக்கியத்தின் [illegible] என்றும் [illegible] திகழ்வதாகுக!

—த. ஆறுமுகதாசன்.

வள்ளுவர் குரல்: 34

## அறமல்லவை

'ஒருவன் தன் மனதிற் குற்றமில்லாதவனாக இருந்தாலே போதும்; அவ்வளவே அறம்' என்று கூறிய பெருநாவலர் அடுத்து, அறமல்லாதவற்றைக் கூறுகிறார்:

"அழுக்காறு அவாவெகுளி
இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்."

பொறாமை, ஆசை, சினம் கடுஞ்சொல் ஆகிய இந்நான்கும் அறமல்லாதவைகளாம். குற்றமில்லாத மனத்திலே, பொறாமை ஆசைகள் வேர் கொள்ளா; சினம் முளைக்காது; அது காரணமாகக் சுடுசொல்லும் வாயிலே வளராது. மனம் மாசுடையதாயின், அங்கே, பொறாமை ஆசைகள் வேர் கொள்ளும்; சினம் முளைக்கும்; வாயிலே கடுஞ்சொல் வளரும்.

பொறாமை ஆசை சினம் கடுஞ்சொற்கள், அறமல்லாதவைகள், ஆகவே அந்நான்கினையும் குற்றங்களாக மதித்து வெறுக்கவேண்டும். அவற்றுக்கு இடங்கொடாமல், கடியவேண்டும். அவற்றுக்கு இடங்கொடாமற் கடிந்து ஒழுகும் ஒழுக்கமே, ஒளிப் புகழ்தரும் நல்லறமாகும்.

—மா. ஆறுமுகம்.




ரெமிங்டன் தமிழ்

டைப்ரைட்டரில் தமிழ் வாசகம் முழுவதையும் கையெழுத்துப் போலவே வெகு வடிவாக டைப் செய்யமுடியும்.

வேகமாக டைப் செய்வதற்கு வசதியாக தமிழ் எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கிலம் தமிழ் இரண்டிலும் டைப் செய்யத் தெரிந்தவர்க்கு ஆங்கிலத்திலிருந்து மாறி தமிழில் டைப் செய்வதும் சுலபம்.

தமிழில் டைப் செய்வது சுலபம்

ஸ்டான்டர்டு (பெரிய)
போர்ட்டபிள் (சிறிய)
இரண்டு மாதிரிகளும் கிடைக்கும்.



Remington Rand
Post Box 788.
294, Union Place,
COLOMBO 2.


# மாணவர் கடமை

—ஏ. கே. செல்லதுரை—

[சென்ற வாரத் தொடர்ச்சி]

வேலையில்
பெருமை கொள்ளல்:

உங்களுடைய வேலையில் பெருமை கொள்ளுங்கள்; அப்பொழுதுதான் உங்களுடைய வேலையில் திறமையுடையவர்களாவீர்கள். உங்களுடைய வேலை பொதுசன பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கிறது என்று எண்ணுங்கள். அந்த வேலை நல்லாயிருந்தால் பொது மக்கள் அதைப் போற்றுவார்கள் அவலெட்சணமாயிருந்தால் அதைப் பார்த்து நகைப்பார்கள். நீங்கள் உங்களுடைய வேலையில் பரிசில் பெற்றுக் கொள்ள வேண்டும் அல்லது மேம்பாடு அடைய வேண்டும் என்பதல்ல. உங்களுடைய வேலையைப் பார்த்து பொதுமக்கள் மதிக்க வேண்டும் என்பதே. இப்பொழுது நடந்து வரும் திருப்திகரமற்ற வேலைகளைத் திருத்தி அமைத்துக் கொள்வது உங்களைப் பொறுத்ததே.

பழங்காலத்தைப் போல் அல்லாது இன்று மாணவர் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நடந்துகொள்கிறார்களில்லையென்று நீங்கள் எல்லோரும் அறிந்திருப்பீர்கள். அது உண்மையே; ஒழுக்கம் வாழ்க்கையில் மேம்பாடு உடையதேயாயினும்; இக்காலத்தில் பேசுவதற்கு அல்ல எழுதுவதற்கு முன் நன்கு சிந்திக்க வேண்டும்.

எங்களில் எத்தனை பேர் பேசுவதற்கு முன் நன்கு சிந்திக்கிறார்கள். பேனாவைக் கடிதத்தில் வைக்கும் பொழுதே நாங்கள் தடுமாறுவதற்கு ஆரம்பித்து விடுகிறோம். நாங்கள் நினைப்பதை அல்லது எழுதுவதை அடிக்கடி மாற்றி அமைப்பதற்கு ஆரம்பித்து விடுகிறோம். சில நேரங்களில் றப்பரால் அழித்து விடுகிறோம். இது எவ்வளவு அவலெட்சணமாக இருக்கிறது என்று எண்ணிப்பாருங்கள். கூலிக்கு வேலை செய்யும் ஒரு தச்சன் அவனிடத்தில் ஒப்படைக்கப்பட்ட ஒரு மரத்தைக் கவலையீனமாக வெட்டி விட்டான் என்றால் அதன் முடிவு எப்படியிருக்கும் என்பதைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். அவன் தனது வேலையைப் பழுதாக்கிக் கொண்டது மல்லாது; அவன் தனது கூலியையும் இழந்து; மரத்தையும் வாங்கிக் கொடுக்கக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டு விடுகிறது. அவன் தன்னுடைய பிழையை றப்பரால் அழித்து விட முடியாது. அதனால்; அவன் தன்னுடைய வேலையைக் கவனமாகச் செய்கிறான். ஒரு சாதாரண கூலிக்காரன் தன்னுடைய ஆயுதங்களைப் பாவிப்பதற்கு முன் இவ்வளவு கவனம் செலுத்துகிறான்; ஒரு படித்த மனிதன் எழுதுவதற்கு ஆரம்பிக்க முன் எவ்வளவு சிந்தித்து ஆரம்பிக்க வேண்டும் என்பதை, நன்கு உணர்ந்து பாருங்கள். ஒருவன் தன் நாவால் பேசியதை ஒரு போதும் அழித்துவிட முடியாது. இதை விட்டுச் சற்று ஜாக்கிரதையாக இருந்து கொள்ளுங்கள்.

கருத்தைச் செலுத்தல்:

நாங்கள் எடுத்துக் கொள்ளும் வேலையில் எங்களில் ஒரு சிலர்தான் ஒரு வழிப்பட்ட கவனஞ் செலுத்தக் கூடியவர்களாய் இருக்கிறார்கள். நாங்கள் எங்களுடைய தெய்வீகமான இலக்கியத்தை மனப்பாடம் செய்து அவர்களுடைய ஞாபக சக்தியினால் எங்களுக்கு அளித்துள்ளார்கள். ஒரு பாட்டின் நாலு வரிகளை ஞாபகத்திலிருத்தி பிழையின்றிக் கூறக் கூடியவர்கள் எங்களில் எத்தனை பேர் இன்று இங்கு இருக்கிறார்கள்? குசாவும் லாவாவும் இராமாயணம் என்னும் இலக்கியக் களஞ்சியத்தை மனனம் பண்ணி இராமனின் இராச சபையில் மனப்பாடமாகக் கூறியதை நீங்கள் அறிந்திருக்கவில்லையா? எல்லாத்துறைகளிலும் அதைத் தளர்த்திக் கொண்டே வருகிறார்கள். அதிகாரிகள் ஒழுக்கத்தை உங்களிடத்தில் சுமத்த முடியாது. நீங்களே அதன் வழிநின்று பழகிக் கொள்ள வேண்டும். உங்களுடைய பேச்சு, செயல், எண்ணங்களில் அவசரம் அடையக் கூடாது. உங்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள அநேக சட்ட திட்டங்களின் காரணங்களை அறிந்து கொள்வதற்கு உங்களுடைய வயதில் உங்களுக்குப் போதிய அனுபவம் இல்லாமல் இருக்கலாம். சட்டதிட்டங்கள் உங்களுக்குச் சங்கடமானவைகளாயிருந்தாலும், அவைகள் உங்களுடைய நன்மைக்காகவே உண்டாக்கப்பட்டவைகள் உங்களுடைய ஆசிரியர்கள், பெற்றோர்கள், முதலியோர்கள் உங்களிடத்தில் கொண்டுள்ள நல்லெண்ணத்தினால்; நீங்கள் நல்லாய் வரவேண்டும் என்பதையே என்றும் விரும்புகிறார்கள் மாணவர்களாகிய நீங்கள் நல் ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, வாழ்க்கையில் முன்னேற்றம் அடைந்து கொள்வது உங்கள் கடமை.

நிமிஷக் கதை:

## இனவெறிப் பிசாசுக்கு தண்டனை

நீதிதேவன் அரண்மனை:
இடம்—விண்ணுலகம்:

நீதிதேவன் பீடத்திலே அமர்ந்திருக்கிறார். அவர் அருகே சித்திரபுத்திரனார் நிற்கின்றார். பீடத்தின் கீழ் உள்ள ஆசனங்களில் கோப்பாய் கோமானும், திரு. பண்டாரநாயகாவும் நேருக்கு நேர் அமர்ந்திருக்கின்றனர். சாட்சிக் கூண்டிலே திரு. பி. கந்தையா நின்று கொண்டிருந்தார்.

விசாரணை ஆரம்பமாகிறது.

சித்திர புத்திரனார் குற்றப் பத்திரிகையை படிக்கிறார். திரு. பண்டாரநாயகாவும், திரு. வன்னியசிங்கமும் வக்கீல்களாக மாறி கொடிப் பிரச்சினை தொடக்கம்,மொழிப்பிரச்சினை வரையும் விவாதிக்கிறார்கள். திரு பி. கந்தையா குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நாட்கள் கழிகின்றன. மீண்டும் விண்ணுலகில் நீதிஸ்தலம் கூடுகிறது. நீதிதேவன் நீதி வழங்க ஆயத்தமாகிறார். அச்சமயத்தில் எங்கிருந்தோ ஒருவன் ஓடோடி வருகிறான், அவனையும் அழைத்து வரும்படி நீதிதேவன் உத்தர விடுகிறார். வந்தவனைக் கண்டதும் கோப்பாய் கோமானும் திரு. பண்டாரநாயகாவும் திகைப்படைகின்றனர். நீதிதேவன் அவனையும் விசாரணை செய்கிறார். உடனே அவன்தான் இனவெறி பிசாசு என்றும், இலங்கையிலே திருமதி. பண்டாரநாயகாவும், ஈழத்துக் காந்தியும் பிரச்சினைகளை சுமுகமாக தீர்த்து வருவதாகவும் அதனால் தனது உயிர் சிறிது சிறிதாக சிதைவுபடுவதாகவும் எனவே இங்கு ஓடிவந்ததாகவும் கூறுகிறான். உடனே நீதிதேவன் திரு. பண்டாரநாயகாவை மன்னித்து இனவெறி பிசாசை நரகத்திற்கு போகுமாறு கட்டளை இடுகிறார்.

—ரவீந்திராதேவி இராசதுரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## தெளிவத்தை வள்ளுவர் மன்றம்

தெளிவத்தை வள்ளுவர் மன்றத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா கடந்த 17-9-60-ல் தமிழ் வணக்கத்துடன் ஆரம்பமாயிற்று. விழாவுக்கு திரு க. சுப்பிரமணியம் தலைமைவகித்தார்.

வித்துவான் கமலநாதன் பேசும்போது ஒரு காலத்தில் பண்டிதர்கள் கைகளிலே தவழ்ந்த திருக்குறள் இன்று பாட்டாளி மக்களின் கையில் பாட்டாளிகளின் இலக்கியமாகத் திகழ்வதைக் கண்டு பெருமைப் படாமல் இருக்க முடியாது என்றார்.

அடுத்ததாக மாஸ்டர் சிவலிங்கம் "வள்ளுவர் இன்று வந்தால்" என்ற கற்பனைத் தலைப்பில் கதை வடிவில் நகைச்சுவையும் பொருட்சுவையும் நிரம்பியதோர் சொற்பொழிவாற்றினார்.

திருமதி பவளமலர் சங்கர் பேசும்போது மலைநாட்டுப் பெண்கள் கல்வியறிவில், முன்னேற்றத்தில் பின்தங்கி நிற்கும் காரணம் அவர்களின் வசதிக் குறைவே தவிர அறிவில் மற்றவர்களைவிடக் குறைந்தவர்கள் அல்ல என்றும் அகவாழ்விலும் புறவாழ்விலும் மலைநாட்டுப் பெண்கள் சிறந்து விளங்க வேண்டுமானால் இன்று கல்வியில் சிறந்து விளங்கும் யாழ் நகர், மட்டு நகரப் பெண்களின் ஒத்துழைப்பு தேவை என்றும் முப்பகுதிப் பெண்களும் ஒன்று சேர்ந்து பெண்ணினத்தின் உரிமைகளுக்காகப் பாடுபட வேண்டும் என்றும் கூறினார்.

மற்றும் திருவாளர்கள் தமிழோவியன், வி. தங்கவேல், அ. தங்கராசன், க. ஆறுமுகம ஆகியோரும் பேசினர். இசை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. செயலாளர் வீரமுத்து நன்றி கூறினார்.

## மயிலணி சைவ வித்தியாசாலை

சுன்னாகம் மயிலணி சைவ வித்தியாசாலை இல்லங்களின வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் மேற்படி பாடசாலை முகாமையாளர் திரு டி. டி. சங்கரப்பிள்ளை ஆதரவின் கீழ் தலைமையாசிரியர் திரு எம். குமாரஸ்வாமி தலைமையில் நடைபெற்றது.

விளையாட்டுப் போட்டியின் இடைவேளை நேரத்தில் மாணவர் சோமசுந்தரம் என்பவரால் துவிச்சக்கர வண்டி விநோத ஓட்டம் வெகு சிறப்பாக ஓடிக்காட்டப்பட்டது. போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு முகாமைக்காரரால் தராதரப் பத்திரங்களும் அதிக புள்ளிகளைப் பெற்ற சுந்தரர் இல்லத்திற்கு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டன.

## கதிரவன் கலைக்கூடம்

கதிரவன் கலைக் கூடத்தின் உறுப்பினர் கூட்டம் கடந்த 16-9-60-ல் திரு. எஸ். எம். முனைசுதீன் தலைமையில் நடைபெற்றது. கடந்த 11-9-60-ல் நடந்த 'ஒரே முத்தம்' நாடகத்தின் வரவு செலவு கணக்கைச் சமர்ப்பித்து பொருளாளர் பேசிய பின், தலைவா எஸ். குமாரசாமியும், செயலாளா என். எம். கலையழகனும் பேசினார்கள்.

இறுதியில் இதுகாறும் கலைக்கூடத்தில் பொறுப்பாளராக இருநது பணியாற்றிய ஏ. ஜே. திராவிடச் செல்வன என்பவர் கலைக் கூடத்தின் கட்டுப்பாட்டை மீறி சில செயல்கள் புரிந்தமையினால் அவரைக் கலைக் கூடத்திலிருந்து நீக்குவதென்று தீர்மானிக்கப் பட்டது.

## அரிப்பு கி. மு. சங்கம்

அரசாங்கம் உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை எடுப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கமாக அரிப்பக் கிராம முன்னேற்றச் சங்கம் ஒரு விசேடக் கூட்டத்தை கடந்த 18-9-60ல் கூட்டியது இக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுப் பிரதம மந்திரிக்கும், கல்வி மந்திரிக்கும் தந்திமூலம் அனுப்பி வைக்கப்பட்டது.

### தீர்மானம்

உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளை அரசாங்கம் எடுப்பதால் பிள்ளைகளின் ஒழுக்கமும் கல்வியின தராதரமும் பாதிக்கப்படுமென்பதை இச்சங்கம் பூரணமாக நம்புகிறது. எனவே அரசாங்கத்தின் கோரிக்கைகளை புனராலோசனை செய்யும்படி இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

## சோஷலிச அரசு நிறுவ மார்க்கம்

"மலைநாட்டுத் தமிழரின் பிரஜா உரிமை பிரச்சினை சம்பந்தமாக ஒரு சமரசமான முடிவு செய்யப்படுமென்று பிரதமர் சிறீமாவோபண்டாரநாயகா பாராளுமன்றத் திறப்பு விழாவின் போதும் வேறு சில சந்தர்ப்பங்களிலும் கூறியுள்ளார். மலைநாட்டுத் தமிழரின் நியாமான பிரச்சினைகளுக்கு வழி காணாத வரையில் இந்த நாட்டில் உண்மையான சோஷலிச அரசை நிறுவ முடியாதென்று நான் அறுதியிட்டுக் கூறுவேன"

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான ஜனாப் ஏ. அஸீஸ் கடந்த 25-9-60ல் பரக்கடுவையைச் சேர்ந்த பம்பேகம தோட்டத்தில் நடைபெற்ற தொழிலாளர் பொதுக்கூட்ட மொன்றில் பேசுகையில் கூறினார்.

பம்பேகம தோட்டத் தொழிலாளர்களின் பொதுக்கூட்ட மொன்று பம்பேகம தோட்ட மாரியம்மன் கோவில் மைதானத்தில் நடைபெற்றது. இக் கூட்டத்திற்கு ஜனாப் ஏ. அஸீஸ், சர்வதேச தொழிற் சங்கத்தைச் சேர்ந்த திரு. சௌந்திரி, திருவாளர்கள் பி. எஸ். வி நாயுடு, டி. எம். பீர்முகம்மது பியதாஸா பீரிஸ், மாதர் கமிட்டியைச் சேர்ந்த செல்வி சங்கர வடிவு ஆகியோர்களும் சமூகமளித்திருந்தார்கள்.

திரு. கே ஜி. எஸ். நாயர் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

திரு நாயர் பேசுகையில் கூறியதாவது:—

காங்கிரஸ் தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகளுக்காக போராடி வருகிறது 23 ருத்தல தேயிலை கொழுந்துக்குப் பெயரும், பேலதிக ருத்தலுக்கு 12 சதமும் வேண்டுமென்ற கோரிக்கைகளின் மீது தொழிற் கோட்டில வழக்கு நடைபெறுகின்றது இதுவரை சுமார் 40 நாட்கள் விசாரணை நடைபெற்றுள்ளது. இதற்கு தேயிலை தோட்ட முதலாளிமார் தரப்பிலும், நமது யூனியன் சார்பாகவும் உயர்தர வழக்கறிஞர்கள் வாதாடுகிறார்கள். இதற்கு ஆயிரக்கணக்கான ரூபாய் கள் நாம் செலவு செய்துள்ளோம்.

தோட்டங்கள் கைமாறினாலோ அல்லது பென்ஷன் பெறுவதற்குத் தானுமோ கடந்தகால சேவைக்கு ஒரு வருடத்திற்கு ஒரு மாத சம்பள வீதம் கொடுக்கப்பட வேண்டுமென்பதே நமது கோரிக்கை. தொழிலாளர் தங்கள் சந்தாக்களை மாதாமாதம் செலுத்தி சங்கத்தை பலப்படுத்தவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் மாதர் சங்கத் தலைவி செல்வி சங்கரவடிவு, திருவாளர்கள் பி. எஸ். வி. நாயுடு, டி எம் பீர்முகம்மது, பியாதாஸா பீரிஸ் ஆகியோா பேசிய பின்பு தொழிலாளர் கவி சிறீ கோவிந்தசாமி தேவரின தொழிலாளர் கீதத்துடன் கூட்டம் முடிவுற்றது.

## கல்முனை முன்னேற்றச் சங்கம்

"பருத்தித்துறை முன்னை நாள் பிரதிநிதி திரு. பொ. கந்தையா இலங்கை மாதாவின் ஈடிணையற்ற அறிவுத் தியாகி ஆவர். அன்னாரது பிரிவு மக்களுக்கு அளப்பரிய நட்டமாகும் அவரது பிரிவு குறித்து இச்சபை தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது."

மேற்கண்ட பிரேரணையை 15-9-60-ல் நடைபெற்ற கல்முனை முன்னேற்றச் சங்க நிர்வாக சபைக் கூட்டத்தில் திரு. இராமநாதன் கொண்டு வந்து பேசினார்.

திரு. பொன்னையா அநுவதித்துப் பேசும் பொழுது திரு கந்தையா மட்டக்களப்பைப் பொறுத்தவரையில் அவ்வளவு பிரபல்யம் அடையாதவராகிலும் அவரது அறிவு, சேவைகளைப் பற்றி அதிகம் கேள்வியுற முடிகின்றது. அவரது மேதா விலாசம் அவர் சார்ந்த கட்சிக்கும் எங்கட்கும் பெரிதும் உதவியது என்று குறிப்பிட்டார்.

அநுதாபத் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியது.

## திருமலையில் கு. வ. வுக்கு அஞ்சலி

"1961-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கம் சிங்களம் மட்டும் சட்டத்தை அமுல் நடத்தத் தீர்மானித்திருக்கிறது அரசாங்கம் தனது திட்டத்தை அமுல் நடத்துமானால் பொதுவாக தமிழ்ப் பேசும் மக்களும் குறிப்பாக தமிழ் அரசாங்க உத்தியோகத்தர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர். அவ்வாறான ஒரு சூழ்நிலை ஏற்படின் தமிழ்ப் பேசும் மக்கள் பெருமளவில் அதை எதிர்த்துப் போராட வேண்டி வரும். தமிழ்ப் பேசும் மக்களுக்கு சொல்லுக்கும் செயலுக்கும் பாலம் அமைத்த மகான் திரு. வன்னியசிங்கம் நம்மிடையே இல்லாதது மிகவும் துரதிருஷ்டமானது."

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவரும் திருமலை எம். பி யுமான திரு. என். ஆர். ராஜவரோதயம் திருமலை இந்துக் கல்லூரி சம்பந்தர் மண்டபத்தில் சென்ற 18-9-60-ல் நடைபெற்ற வன்னியசிங்கம் நினைவுநாள் கூட்டத்துக்குத் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினார்.

திரு. இராஜவரோதயம் தொடர்ந்து பேசுகையில் மேலும் கூறியதாவது! திரு வன்னியசிங்கம் ஒரு வைதீகக் குடும்பத்தில் பிறந்திருந்தும் ... இருந்தவராக விளங்கினார். தமிழரசுக்கட்சி நடத்திய தீண்டாமை ஒழிப்பின் வெற்றிக்கு முக்கிய காரணமானவர் திரு வன்னியசிங்கம். அரசியலில் திரு. வன்னியசிங்கம் சிறந்த நேர்மையாளராகவும், துடிப்புள்ளவராகவும் தமிழினத்தின் விடுதலையே பேச்சும் மூச்சுமாகக் கொண்ட சிறந்ததோர் சர்வோதயியாகவும் விருந்தார். அவரின் மரணத்தால் தமிழினம் ஒரு சிறந்த தலைவனை பறிகொடுத்து விட்டது

மற்றும் திருவாளர்கள் எஸ். கே. சாமி, ஈழவாணன், இ. சோமசுந்தரம், முதலியார் சவரிமுத்து வி. எஸ். செல்லையா முதலியோரும் பிறரும் பேசினர்.

கூட்ட முடிவில் திரு. ராஜவரோதயம் வன்னியசிங்கம் நினைவு நாள் கட்டுரைப் போட்டி, பேச்சு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கினார். பரிசில் பெற்றோர் விபரம் வருமாறு:—

கட்டுரைப்போட்டி: செல்வி ராஜேஸ்வரி துரைசிங்கம்—முதற்பரிசு. திரு. வி. எஸ். செல்லையா — இரண்டாம் பரிசு. சிறுவர் பேச்சுப் போட்டி: செல்வன் யோகன் சுவாமி பிள்ளை—முதற்பரிசு. செல்வன் ந. சத்தியமூர்த்தி—இரண்டாம் பரிசு.

## முத்தமிழ் மாணவர் மன்றம்

முத்தமிழ் மாணவர் மன்றத்தின் சார்பில் கடந்த 18-9-60-ல் ஜம்பட்டா தெருவிலுள்ள பன்றட் பணிமனையில் உபதலைவர் திரு இ சுப்பிரமணியம் தலைமையில் பாரதிவிழா நடைபெற்றது.

திரு. யுவன் "பாரதி காட்டிய வழி" என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் சமுதாயத்தின் ஊழல்களைக் கண்டு மனம் வெதும்பி அவைகளைத் தம் பாடல்களில் வெளியிட்டார் மாரதி. பாரதி உளழைப்பை விரும்பினார் அதே நேரத்தில் சோம்பேறிகளை வெறுத்தார் என்றார்.

அடுத்து ஆசிரியர் சு. சின்னத்தம்பி பாரதி ஒரு புரட்சிக் கவி' எனும் பொருள் பற்றிப் பேசினார்.

அடுத்து நடிகர் சங்கத் தலைவர் திரு. இராஜேந்திரம், திரு. மா. பி தமிழ் நெஞ்சன், திரு. கிருஷ்ணன் ஆகியோரும் சொற்பொழிவாற்றினார்கள். இடையே பாரதி பாடல்கள் சிலவற்றை திரு. உதயகுமாரி பாடினார்

## இந்து இளைஞர் மன்றம்

கைதடி இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் கடந்த 17-9-1960-ல் கைதடி கிழக்கு இந்து இளைஞர் மன்றத் தலைவர் செ. வேலாயுதம் தலைமையில் அமரர் கு. வன்னியசிங்கம் நினைவு விழா நடைபெற்றது.

முதலாவதாகத் தலைவரால் திரு. கு. வன்னியசிங்கத்தின் படம் திரைநீக்கம் செய்யப்பட்டது. அடுத்ததாகத் தலைவர் முன்னுரையின் போது வன்னியசிங்கத்தின் தொண்டுகளைப் பற்றிக் கூறினார். பின்பு மன்றக் காரியதரிசி செல்வன் ஆ. கந்தையா "வன்னியசிங்கமும் தமிழும்" என்னும் பொருள் பற்றியும், செல்வன் சே. இராசையா "தற்போது வன்னியசிங்கம் இருந்திருந்தால்" என்னும் பொருள் பற்றியும் மன்ற உபகாரியதரிசி செல்வன் க. இராசையா "வன்னியசிங்கம் மரணத்தால் தமிழருக்கு ஏற்பட்ட தீமைகள்" என்னும் பொருள் பற்றியும் திரு த. சங்கரப்பிள்ளை "வன்னியசிங்கத்தின் பண்பு" என்னும் பொருள் பற்றியும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

பின்னர் வன்னியசிங்கத்தின் நினைவுவிழாக் கட்டுரைப் போட்டியின் பரிசுகள் வழங்கப்பட்டன. மேற்பிரிவில் செல்வன் த. சுப்பிரமணியம், செல்வன் அ சிவசுப்பிரமணியம் ஆகியோரும் கீழ்ப்பிரிவில் சி. சிவசந்திரராசா சு. செல்வநாயகம் ஆகியோருக்கும் பரிசுகள் தலைவரால் வழங்கப்பட்டன


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்துவாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

**பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.**

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினால் இனமாக அனுப்புவோம்.

**பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.**

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-

**ஆனந்தா வைத்தியசாலை,**

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் பெருந் திருநாளான தீபாவளி தினத்தை சிறப்பாக
கொண்டாட, சினிமாஸ் திரைகளில்



அதிவிரைவில் எதிர்பாருங்கள்!

ஆனந்த், அசோகன்,
ஹேமலதா, காமினி,
நடித்த
சிட்டாடல்

# விஜயபுரி வீரன்

## வெற்றிகரமான 2-வது வாரம்!

கிங்ஸ்லி [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [குப்பனித்தெரு] வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருகோணமலை]

**அண்ணனின் அறிவுரை:-**

இணைபிரியா இதயங் கொண்டவர்கள் நாங்கள். என் தம்பியின் உள்ளத்திலே பிரமிக்கத்தக்க பாசம் தலை தூக்கியது. மயிர் கூச்செறியும் சூழ்நிலையிலே, தலை கொடுக்கும் தம்பியாக மாறிவிட்டான். பிரமை தட்டும் புயல் வாழ்வில் சிக்கிய எங்கள் உள்ள முருக்குப் வரலாற்றை உங்களுக்கு நேரில் விவரிக்க மேலே கூறிய தியேட்டருக்கே மாடர்ன் தியேட்டர்ஸ் "தலை கொந்த்தான் தம்பி" படத்தில் வருகிறோம். அப்பொழுது விபரமாக உங்களுக்கு எல்லாம் புரியும்.

வணக்கம்.

கே. ஆர். ராமசாமி.

**தம்பியின் சபதவுரை:-**

என்னைப் பெற்றெடுத்தவள் என் முதல் தாய். நான் பிறந்த பொன்னாடு என்னுடைய மற்றொரு தாய். நாட்டைப் பழித்தவன் தேவனானாலும், அவனைத் தப்பிச் செல்ல விட மாட்டேன். தாயின் நெஞ்சத்திலே துயரைக் கொடுத்தவன் உயிரோடு இருக்கக்கூடாது. சூழ்நிலையின் கோளாறால் எரிமலையாய்க் கிளம்பி அன்பு வழி மறந்து ஆத்திர வழியில் நான் செல்லும்போது, அண்ணா என் வாழ்விலே குறுக்கிட்டார்............அண்ணா............அவர்தான் அறிவுக் கடவுள். அன்புத் தெய்வம். அவர் உணர்த்திய சிரிய வழியில் சென்று, அவர் அன்புக்காக தலை கொடுக்கும் தம்பியாகவே மாறிவிட்டேன். புரட்சிகரமான என் வாழ்க்கையை நீங்கள் புரிந்து கொள்வதற்காக, சுற்றுப் பிரயாணமாக நானும் அண்ணாவும் மேலே கூறிய தியேட்டர்களிலே காட்சியளிப்போம். வந்து கேளுங்கள் விரிவான என் வரலாற்றை.

அண்ணா வாழ்க!


வணக்கம்.

எஸ். எஸ். ராஜேந்திரன்

எஸ். எஸ். ராஜேந்திரன், கே. ஆர். ராமசாமி,



மாலினி-தாம்பரம் லலிதா
எஸ். மனோகர்,
வி. ஆர். ராஜகோபால்,
டி. கே. ராமச்சந்திரன்,
டி. பி. முத்துலட்சுமி, பி. எஸ். ஞானம்,
பேபி உமா



முதலியோர் நடித்த

# தலை கொடுத்தான் தம்பி

பின்னணி: டி. எம். சவுந்தரராஜன்—சீர்காழி கோவிந்தராஜன் — எஸ். சி. கிருஷ்ணன்—ஏ. எல். ராகவன்—ஜிக்கி—பி. சுசீலா—ஜமுனா ராணி—என். எல். கானசரஸ்வதி.

டைரக்ஷன்:
டி. ஆர். சுந்தரம்
திரைக் கதை—வசனம்:
முரசொலி மாறன் எம். ஏ.


இப்பத்திரிகை கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தை [illegible] இலக்கத்தில் [illegible] டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டின் தாபனத்தாரின் சார்பாக பண்டாரநாயக்க மாவத்த சுதந்திரன் அச்சகத்தில் பதிப்பித்து 1960 அக். 9-ம் தேதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org